Get Your Premium E-Commerce
WEBSITE &
ANDROID APP
for Just ₹Rs. 2999/-
SALE
+91 9853719337, 7436914247


# தமிழ்நாடு இ-பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:82 | 07-10-2025 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி


MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

## இன்றைய பஞ்சாங்கம்

07.10.2025 புரட்டாசி 21
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.02

திதி:
இன்று காலை 9.50 வரை
பௌர்ணமி பின்பு பிரதமை.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 5.03 வரை
உத்திரட்டாதி பின்பு ரேவதி.

யோகம் :
இன்று காலை 11.27 வரை
துருவம் பின்பு வ்யாகாதம்.

கரணம் :
இன்று காலை 9.50 வரை
பவம் பின்பு இரவு 9.45 வரை
பாலவம் பின்பு கௌலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று அதிகாலை 5.03 வரை
யோகம் சரியில்லை பின்பு
சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை 5.03 வரை
மகம் பின்பு பூரம்.

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45 .
மாலை 1.45 – 2.45
இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30
எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## பிகார் தேர்தல்

# நவ.6, 11-ல் வாக்குப் பதிவு; நவ.14-ல் வாக்கு எண்ணிக்கை!

**புதுடெல்லி, அக்.7:**

பிகார் சட்டப்பேரவை தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறவுள்ளது. முதற்கட்ட வாக்குப்பதிவு நவம்பர் 6 அன்றும், 2-ம் கட்ட வாக்குப்பதிவு நவம்பர் 11 அன்றும் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14 அன்று நடைபெறவுள்ளது.




பிகார் சட்டப்பேரவை தேர்தலுக்காக அறிவிப்பை தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் விவேக் ஜோஷி, சுக்பீர் சிங் சாந்து வெளியிட்டு வருகின்றனர். அதன்படிபிகார் மாநிலத்துக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. முதல் கட்ட தேர்தலுக்கான வாக்குப் பதிவு நவம்பர் 6-ஆம் தேதியும், இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குப்பதிவு நவம்பர் 11-ஆம் தேதியும் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14 அன்று நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. முதற்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் அக்.18-ஆம் தேதியும், 2-ஆம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் அக்.21-ஆம் தேதியும் தொடங்குகிறது.

> பிகார் சட்டப்பேரவையின் பதவிக் காலம் நவம்பர் 22–ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதன் காரணமாக, அம்மாநிலத்துக்கான சட்டப்பேரவை தேர்தல் தேதிகள் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளன




பிஹாரில் மொத்தம் 7.43 கோடி வாக்காளர்கள் உள்ளனர். அதில் 3.50 கோடி பெண் வாக்காளர்களும், 3.92 கோடி ஆண் வாக்களர்களும், மூன்றாம் பாலினத்தவர் 1,725 வாக்காளர்களும் உள்ளனர். இதில் 14.1 லட்சம் முதன்முறை வாக்காளர்களாக உள்ளனர். பிஹாரில் மொத்தம் 90, 712 வாக்குச்சாவடிகள் உள்ளன. அதில் கிராமப்புறங்களில் 76,801 வாக்குச்சாவடிகளும், நகர்ப்புறங்களில் 13,911 வாக்குச்சாவடிகளும் உள்ளன.

பிகார் சட்டப்பேரவையின் பதவிக் காலம் நவம்பர் 22-ம் தேதி யுடன் நிறைவடைகிறது. இதன் காரணமாக, அம்மாநிலத்துக்கான சட்டப்பேரவை தேர்தல் தேதிகள் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளன. பிஹாரில் மொத்தம் 243 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இதில், கடந்த தேர்தலில் பாஜக 80, ஐக்கிய ஜனதா தளம் 45, ஹெச்ஏஎம்(எஸ்) 4, 2 சுயேட்சைகள் என தேசிய ஜனநாயகக் கூட்டணி 131 தொகுதிகளில் வெற்றிபெற்றது. ராஷ்ட்ரிய ஜனதா தளம் 77, காங்கிரஸ் 19, சிபிஐ (எம்எல்) 11, சிபிஐ(எம்) 2, சிபிஐ 2 என மகாகத்பந்தன் 111 தொகுதிகளில் வெற்றிபெற்றது. இம்முறையும் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், எதிர்க்கட்சிகளின் கூட்டணியான மகாகத்பந்தனுக்கும் இடையேதான் போட்டி கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# “ஒவ்வொரு இந்தியரையும் கோபப்படுத்தியுள்ளது”

## தலைமை நீதிபதி மீதான தாக்குதலுக்கு பிரதமர் மோடி கண்டனம்

**புதுடெல்லி, அக்.7:**

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மீதான தாக்குதலுக்கு பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “இந்திய தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் உடன் பேசினேன். இன்று முன்னதாக உச்ச நீதிமன்ற வளாகத்தில் அவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒவ்வொரு இந்தியரையும் கோபப்படுத்தியுள்ளது. நமது சமூகத்தில் இதுபோன்ற கண்டிக்கத்தக்க செயல்களுக்கு இடமில்லை. இது முற்றிலும் கண்டனத்துக்குரியது.

இதுபோன்ற சூழ்நிலையை எதிர்கொண்டபோது நீதிபதி கவாய் காட்டிய அமைதியை நான் பாராட்டினேன். இது நீதியின் மதிப்புகள் மற்றும் நமது அரசியலமைப்பின் உணர்வை வலுப்படுத்துவதற்கான அவரது உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது” என்று தெரிவித்துள்ளார்.

என்ன நடந்தது? - உச்ச நீதிமன்றத்தில் இன்று தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் ஒரு வழக்கின் விசாரணையை தொடங்கியபோது, அவர் மீது வழக்கறிஞர் ராகேஷ் கிஷோர் என்பவர் காலணியை வீச முயன்றார். ஆனால், அமர்வின் முன்னாலேயே விழுந்தது. இந்தச் சம்பவம் காரணமாக அங்கே பரபரப்பு ஏற்பட்டது. காலணியை வீசிய ராகேஷ் கிஷோர் உடனடியாக நீதிமன்ற அறையிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர், "சனாதன தர்மத்தை அவமதிப்பதை இந்தியா பொறுத்துக் கொள்ளாது" என்று கூச்சலிட்டார்.





### வழக்கறிஞரின் உரிமம் ரத்து

> தலைமை நீதிபதி மீது காலணி வீச முயன்ற வழக்கறிஞர் ராகேஷ் கிஷோரின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது.
>
> ஒழுங்கீனமாக நடந்துகொண்டதால் ராகேஷ் கிஷோரின் வழக்கறிஞர் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுவதாக இந்தியா பார் கவுன்சில் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு உடனடியாக அமலுக்கு வருவதாகவும் பார் கவுன்சில் தெரிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து, ராகேஷ் கிஷோர் உடனடியாகக் கைது செய்யப்பட்டார். அதேநேரத்தில் தலைமை நீதிபதி கவாய் அமைதியாக இருந்து, இடையூறு இல்லாமல் நீதிமன்ற நடவடிக்கைகளை தொடர்ந்தார். மேலும், "இதனால் எல்லாம் திசைதிருப்பப்பட வேண்டாம். இவை எல்லாம் என்னைப் பாதிக்காது, விசாரணையைத் தொடருங்கள்" என்று அவர் கூறினார்.

இதன் பின்னர், இச்சம்பவம் குறித்து விவாதிக்க பொதுச் செயலாளர் மற்றும் பாதுகாப்புப் பொறுப்பாளர் உள்ளிட்ட நீதிமன்ற அதிகாரிகளுடன் கவாய் ஆலோசனை நடத்தினார். ராகேஷ் கிஷோர் 2011 முதல் வழக்கறிஞர் சங்கத்தில் உறுப்பினராக உள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

மத்தியப் பிரதேசத்தில் சேதமடைந்த விஷ்ணு சிலையை மீட்டெடுப்பது தொடர்பான தலைமை நீதிபதியின் கருத்துக்கு எதிராக அவர் இதுபோன்ற செயலில் ஈடுபட்டதாகவும் தெரியவந்துள்ளது. செப்டம்பரில், மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஜவாரி கோயிலில் உள்ள 7 அடி விஷ்ணு சிலையை மீட்டெடுக்கக் கோரிய மனுவை தள்ளுபடி செய்த தலைமை நீதிபதி கவாய், மனுதாரரிடம், "இது முற்றிலும் விளம்பர நோக்கம் கொண்ட வழக்கு. போய் இப்போது கடவுளிடமே ஏதாவது செய்யச் சொல்லுங்கள். நீங்கள் விஷ்ணுவின் தீவிர பக்தர் என்று சொல்கிறீர்கள். எனவே இப்போதே சென்று பிரார்த்தனை செய்யுங்கள்" என்றார்.

# அரசு பொதுத்துறை நிறுவன பணியாளர்களுக்கு 20% வரை போனஸ்

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, அக்.7:**

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில் 202425 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையை வழங்க முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

திருத்தப்பட்ட போனஸ் சட்டம், 2015 படி, மிகை ஊதியம் பெறத் தகுதியான சம்பள உச்சவரம்பு ரூ.21,000 எனவும், இதன்படி மிகை ஊதியம் கணக்கிட மாதாந்திர சம்பள உச்சவரம்பு ரூ.7,000 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உச்சவரம்பை தளர்த்தி, அனைத்து ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் 2024-25ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை கீழ்வருமாறு வழங்கப்படும்:

1. லாபம் ஈட்டியுள்ள பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ’C’ மற்றும் ‘D’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கப்படக்கூடிய உபரி தொகையை கணக்கில் கொண்டு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

2. தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்,




தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் பணிபுரியும் தகுதியுடைய ‘C’ மற்றும் ’D’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

3. ஒதுக்கக்கூடிய உபரி தொகை இல்லாத பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் “C” மற்றும் ’D’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு குறைந்தபட்ச மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 10 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றில் பணிபுரியும் தகுதியுடைய ’C’ மற்றும் ’D’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை வழங்கப்படும்.

5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் தகுதியுடைய ’C’ மற்றும் ’D’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கப்படும்.

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ3,000/- கருணைத் தொகையாக வழங்கப்படும்.

இதனால், மிகை ஊதியம் பெறத் தகுதியுள்ள நிரந்தரத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் ரூ.8400/- மற்றும் அதிகபட்சம் ரூ.16800/- வரை பெறுவர். மொத்தத்தில், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 2,69,439 தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.376.01 கோடி மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையாக வழங்கப்படும்.

இது தவிர, பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

அரசின் இந்த நடவடிக்கை, பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மேலும் ஊக்கத்துடன் செயல்படவும், எதிர்வரும் விழாக்காலங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடவும் வழிவகை செய்யும்.

# 20,378 சிறப்புப் பேருந்துகள் தீபாவளிக்கு இயக்கம்!



**சென்னை, அக்.7:**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 20,378 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்ததாவது: ”தீபாவளி பண்டிகையையொட்டி, அக். 16 முதல் 19 வரை சென்னையில் இருந்து 14,208 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும். பிற ஊர்களில் இருந்து 6,100 சிறப்பு பேருந்துகள் என 20,372 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.

தீபாவளி விடுமுறை முடிந்து சொந்த ஊர் திரும்ப ஏதுவாக, 3 நாள்களுக்கு 10,529 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

அக்டோபர் 16 ஆம் தேதி முதல் தீபாவளி சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும். சென்னை கிளாம்பாக்கத்தில் 10 முன்பதிவு மையங்கள் செயல்படும். தீபாவளி சிறப்புப் பேருந்துகளில் செல்ல இதுவரை 2 லட்சம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

கடந்த ஆண்டைப் போல, இந்த தாண்டும் 300 தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலை தவிர்க்க சிறப்புப் பேருந்துகள், தனியார் வாகனங்கள் மாற்றுப்பாதையில் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது” என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சென்னை உள்ளிட்ட பிற நகரங்களில் வேலை செய்து வருகின்றனர். இந்நிலையில், தீபாவளி பண்டிகையை கொண்டாட தொழிலாளர்கள் சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு வசதியாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

அதேபோல, தீபாவளியை முன்னிட்டு சென்னையிலிருந்து தெற்கு ரயில்வே சார்பில் 108 ரயில்கள் இயக்கப்படும் என்றும் அதன்படி பிறமாநிலங்களுக்கு 54 ரயில்களும், தெற்கு மாவட்டங்கள் உள்ளிட்ட தமிழகப் பகுதிகளுக்கு 54 ரயில்களும் இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல லட்சம் வாசகர்களை கொண்ட தமிழ்நாடு இ-பேப்பரை
https://epaper.tamilnaduepaper.com/
இணையதளத்தில் படித்து பயன்பெறுங்கள்

தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர். பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

Make Money Without Investment Through Mobile
Call :8122664699
Spend just max Hour per day

## திருக்குறள் குறள்-402

**கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற் றற்று**



(கற்றவரின் அவையில்)
கல்லாதவன் ஒன்றைச்
சொல்ல விரும்புதல், முலை
இரண்டும் இல்லாதவள்
பெண் தன்மையை
விரும்பினாற் போன்றது.

## சிந்திக்க ஒரு நொடி



பணம் சம்பாதிப்பது
குண்டூசியால்
மண்ணில் பள்ளம்
தோண்டுவது போல....
செலவழிப்பது அதே
குண்டூசியால் பலூனை
உடைப்பது போல...

**உஷா முத்துராமன்**

## ஸ்ரீ பார்த்தசாரதி பௌர்ணமி புறப்பாடு



சின்னமாடவீதிக்கு ஸ்ரீ பார்த்தசாரதி பௌர்ணமி புறப்பாடு.

## கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள்



சிவகங்கையில் கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும்,மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளையும் அமைச்சர் பெரிய கருப்பன் வழங்கினார்.

## மாணவர்களுக்கு இரண்டாம் பருவ பாடப்புத்தகம் மற்றும் நோட்டுகள்

**பென்னாகரம், அக். 7:**
பென்னாகரத்தைஅடுத்துள்ள சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு இரண்டாம் பருவ பாடப்புத்தகம் மற்றும் நோட்டுகள் வழங்கப்பட்டது.

தலைமையாசிரியர் மா. பழனி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மை குழு தலைவி கங்கா பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் வி.மாதன் மற்றும் ஊர் பொதுமக்கள், மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

பள்ளி மாணவர்கள் இரண்டாம் பருவ பாடப்புத்தகம் மற்றும் நோட்டுகளை நல்ல முறையில் பயன்படுத்தி கற்றல்



நிகழ்வுகளை சிறப்படைய செய்ய வேண்டும். குழந்தைகளின் வாசிப்பை மேம்படுத்த தினமும் வாசிக்கும் பழக்கத்தை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும் என தலைமை ஆசிரியர் கேட்டுக் கொண்டார். நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள் வளர்மதி, பழனிச்செல்வி, கல்பனா, கலைச்செல்வி, ராஜேஸ்வரி, அனுப்பிரியா உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

## முப்பந்தல் காற்றாலை பண்ணையில் புதிய காற்றாலைகள் ஆய்வு



முப்பந்தல் காற்றாலை பண்ணையில் புதிய காற்றாலைகள் மற்றும் சூரியமின் உற்பத்தி நிலையம் அமைப்பது தொடர்பாக தமிழ்நாடு மின்உற்பத்தி, பகிர்மாண கழகத் தலைவர் ராதாகிருஷ்ணன், குமரி கலெக்டர் அழகுமீனா நேற்று ஆய்வு செய்தனர்.

## இரண்டாம் பருவ பாடப்புத்தகம் பயிற்சி புத்தகம்



**மண்டபம், அக். 7:**
கடலோரப் பள்ளி மண்டபம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சின்னப்பாலத்தில் இரண்டாம் பருவ பாடப்புத்தகம் மற்றும் பயிற்சி புத்தகம் பள்ளி தலைமையாசிரியர் செல்லம்மாள் தலைமையில் வழங்கப்பட்டது.

இதற்கான பணிகளை ஆசிரியர்கள் ஜெ.ஜே.லியோன், நிஷா, மிக்கேல் ராணி, ஞானசௌந்தரி, சந்திரமதி, லாரன்ஸ் எமல்டா, நிவேதா, நான்சி, பிரிஸ்கிலா போன்றோர் செய்திருந்தனர்.

## ஸ்ரீ சிவகாமி உடனாய நடராஜப் பெருமானுக்கு மகாபிஷேகம்





**திருவண்ணாமலை, அக். 7:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் புரட்டாசி சதுர்த்தியை முன்னிட்டு ஸ்ரீ சிவகாமி உடனாய நடராஜப் பெருமானுக்கு மகாபிஷேகம், அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ நடராஜர் பெருமானை வேண்டி அருள் பெற்றனர் பிரசாதங்களும் வழங்கப்பட்டன. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## குடவாசலில் அதிமுக பூத் கமிட்டி கூட்டம்

**திருவாரூர், அக். 7:**
குடவாசலில் அதிமுக பூத் கமிட்டி கூட்டம் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் சட்ட மன்ற தொகுதி குடவாசல் வடக்கு ஒன்றியம் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் அதிமுக பூத் கமிட்டி கூட்டம் திருவாரூர் மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சரும் நன்னிலம் சட்ட மன்ற தொகுதி எம்எல்ஏவான ஆர் காமராஜ் தலைமையில் நடைபெற்றது.

குடவாசல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செருக்குடி



S.ராஜேந்திரன் மற்றும் குடவாசல் ஒன்றிய துணை பெருந்தலைவர் MR சண்முகா (எ) தென்கோவன் மற்றும் பூத் கமிட்டி பொறுப்பாளர் ரயில் பாஸ்கர் தகவல் தொழில் நுட்ப பிரிவு தஞ்சை மாவட்ட செயலாளர் விக்னேஷ் இணை செயலாளர் சசிகுமார் மற்றும் ஏராளமான அதிமுக பூத் கமிட்டி நிர்வாகிகளும் அதிமுக தொண்டர்களும் கிளை கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## 1 கோடி மரக்கன்றுகள் நட முடிவு



**விளாத்திகுளம், அக். 7:**
விளாத்திகுளம் தொகுதியை தமிழகத்தின் பசுமையான தொகுதியாக மாற்ற விளாத்திகுளம் தொகுதி முழுவதும் 1 கோடி மரக்கன்றுகள் நட வேண்டும் என்ற இலக்கை அடையும் பொருட்டு மரங்கள் மக்கள் இயக்கம் உருவாக்கப்பட்டு விளாத்திகுளம் பேரூராட்சி நிர்வாகத்துடன் இணைந்து விளாத்திகுளம் தொகுதி முழுவதும் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டு அங்கு மக்களுக்கு பயன் தரும் பல்வேறு மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது .மேலும் பல்வேறு தன்னார்வலர்கள் மூலம் நன்கொடைகள் பெறப்பட்டு பல்வேறு கிராமங்களில் ஆறுகள் குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகளில் சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டு பல்வேறு மரங்கள் நடப்பட்டு வருகிறது.

## அரச மரத்தடியில் அமைந்திருக்கும் ஸ்ரீகோவிந்தராஜ பெருமாள் பூ தேவிஸ்ரீ தேவி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி



**திருவண்ணாமலை, அக். 7:**
திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியம் வேடந்தவாடி கிராமத்தில் அரச மரத்தடியில் அமைந்திருக்கும் ஸ்ரீகோவிந்தராஜ பெருமாள் பூ தேவிஸ்ரீ தேவி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. வருடத்திற்கு ஒருமுறை மூன்றாவது சனிக்கிழமை அன்று அரச மரத்தடியில் அமைந்திருக்கும் ஸ்ரீகோவிந்தராஜ பெருமாளுக்கு நாமம் அலங்காரத்தில் அபிஷேகங்கள், அலங்காரங்கள், பூஜைகள், சக்கரை பொங்கல், வடை நெய்வேத்தியத்துடன் தீபாராதனையும் நடைபெற்றது. மின்விளக்குகளால் அலங்கரித்து வானவேடிக்கையுடன் உற்சவர் திருவீதி உலா நடைபெற்றது. பக்தர்கள் அனைவரும் கோவிந்தா கோவிந்தா என்று முழக்கமிட்டு வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## காவல்துறையினர் வாகன தணிக்கை



திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.சியாமளா தேவி., உத்தரவின்பேரில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கோவிந்தராசு, தலைமையில் மாவட்ட மற்றும் வெளி மாநில எல்லை பகுதியான வெலதிகாமணிபெண்டா மலைப்பகுதியில் மதுவிலக்கு சோதனையிலும், வெலதிகாமணிபெண்டா எல்லை பகுதியில் காவல்துறையினர் வாகன தணிக்கையிலும் ஈடுப்பட்டனர்.

## தமிழக அரசின் விலையில்லா நோட்டு,புத்தகம் வழங்கும் விழா

**சிவகங்கை, அக். 7:**
தமிழக அரசின் விலையில்லா நோட்டு,புத்தகம் வழங்கும் விழா நடந்தது.

முதல் பருவ விடுமுறை முடிந்து பள்ளி திறப்பு . உற்சாகமாக பள்ளிக்கு வந்த மாணவர்கள் .

தேவகோட்டை-சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் இரண்டாம் பருவத்திற்கான தமிழக அரசின் விலையில்லா புத்தகங்கள்,நோட்டுக்களை பள்ளி தலைமை ஆசிரியர்



லெ.சொக்கலிங்கம் தலைமையில் பெற்றோர் ஆசிரியர் கழக பொறுப்பாளர்கள் நாகராஜ் மற்றும் வினிதா ஆகியோர் வழங்கினார்கள். ஆசிரியர்கள் ஸ்ரீதர், முத்துலெட்சுமி ஆகியோர் நிகழ்விற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.ஏராளமான பெற்றோர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ஏ.எம்.ஜேம்ஸ் எழுதிய "அருள் வாக்கு குறள் நோக்கு நூலை கவிஞர் இரா. இரவி வழங்கி வரவேற்றார்



மதுரைக்கு வருகை தந்த மேனாள் தலைமைச் செயலர் இறையன்பு அவர்களுக்கு கலைமாமணி பேராசிரியர் ஏ.எம்.ஜேம்ஸ் எழுதிய "அருள் வாக்கு குறள் நோக்கு " நூலை வழங்கி வரவேற்றார் தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா. இரவி உடன் முனைவர் ஞா.சந்திரன், வெற்றித் தமிழர் பேரவை பால ராமலிங்கம்.

## ரூ.6 கோடி மதிப்பில் அமைக்கப்பட்ட கூடுதல் மருந்து சேமிப்பு கிடங்கு திறப்பு



நெல்லையில் ரூ.6 கோடி மதிப்பில் அமைக்கப்பட்ட கூடுதல் மருந்து சேமிப்பு கிடங்கை காணொளி காட்சி மூலம் முதல்வர் நேற்று திறந்து வைத்தார். சேமிப்பு கிடங்கில் கலெக்டர் சுகுமார், மேயர் ராமகிருஷ்ணன், அப்துல்வகாப் எம்எல்ஏ குத்துவிளக்கேற்றினர்.

## புதுகையில் எட்டாவது புத்தகத்திருவிழா

**புதுக்கோட்டை அக் 07:**
நகர்மன்றம் ஒளிரும் வளர்மதி வளாகத்தில் பிரமாண்டமான புத்தகத் திருவிழா கடந்த அக் 03 ஆம் தேதி துவங்கப்பட்டது.

துவக்கநாளில் மாவட்ட ஆட்சியர் மற்றும் அமைச்சர்கள் ரகுபதி. மெய்யநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவில் அறந்தாங்கி பாரதி முற்றத்தின் நிறுவனர் கவிஞர்.க. அஜய் குமார் கோஷ் எழுதிய மழையின் சாயலில்



எனும் கவிதைநூலினை கவிஞர் ஜீவி வெளியிட்டார். விழா சிறப்பாக நடைபெற்றது இந்த புத்தகத்திருவிழா வருகின்ற அக் 12 வரை நடைபெறும்.

# 300 குழந்தைகளுடன் 'இட்லி கடை' படம் பார்த்தார் மா.சுப்பிரமணியன்



**சென்னை, அக்.7:**

முதலமைச்சரால் தொடங்கப்பட்ட அன்புகரங்கள் திட்டத்தில் சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள 300 குழந்தைகளுடன் ஒரு நாள் சுற்றுலாவாக, அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று அந்த குழந்தைகளுடன் காலை சிற்றுண்டி சாப்பிட்டு, 'இட்லி கடை' திரைப்படம் சிறப்பு காட்சி பார்த்து, தியாகராய நகர் துணிக்கடையில் அவர்களுக்கு பிடித்த உடைகளை வாங்கி தந்து இனிப்புகள் வழங்கி வழி அனுப்பினார்.

தாயுமானவர் திட்டத்தில் அன்பு கரங்கள் எனும் பெயரில் கடந்த செப்டம்பர் மாதம் 15ம் தேதி முதலமைச்சரால் சீரிய திட்டம் ஒன்று செயலாக்கம் பெற்றது. அந்தத் திட்டத்தின் படி 6,082 குழந்தைகளுக்கு மாதந்தோறும் 2000 வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக சைதாப்பேட்டையில் கடந்த மாதம் 24ந் தேதி அன்பு கரங்கள் முகாம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் 399 குழந்தைகள் விண்ணப்பித்திருந்தனர். அந்த விண்ணப்பங்களை எல்லாம் வட்டாட்சியர் ஆய்வு மேற்கொண்டு, அவர்களுக்கு மாதம் தோறும் 2000 வழங்கும் பயனாளிகளை சேர்க்க இருக்கிறார். சைதாப்பேட்டையில் விண்ணப்பித்த குழந்தைகளை மகிழ்ச்சிபடுத்தும் வகையில் ஒரு நாள் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு, காலை சிற்றுண்டி முடித்த பிறகு அவர்களை இட்லி கடை என்ற திரைப்படத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அந்தக் குழந்தைகள் மிக மகிழ்ச்சியோடு அந்த திரைப்படத்தை ரசித்தார்கள். அந்தக் குழந்தைகள் அனைவரோடும் தியாகராயர் நகரில் இருக்கிற ஒரு துணிக்கடைக்கு அழைத்துச் சென்று புத்தாடைகளை வாங்கி தந்து இனிப்புகள் வழங்கி அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழி அனுப்பி வைத்தார்..

# தமிழக அரசு 3% அகவிலைப்படி உயர்வு வழங்க ஆசிரியர் கூட்டணி கோரிக்கை

**சென்னை, அக். 7:**

தமிழக அரசு 3% அகவிலைப்படி உயர்வு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் முதலமைச்சருக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் (பொ) ரெ.ஈவேரா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மத்திய அரசு 2025 ஜூலை மாதத்திற்கான அகவிலைப்படியை 3 சதவீதம் உயர்த்தி அறிவித்துள்ளது. இதுவரை வழங்கப்பட்டு வந்த 55 சதவீதம், இந்த புதிய அறிவிப்பால் 58 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த அகவிலைப்படி உயர்வு ஜூலை 2025 மாதத்தில் இருந்து முன் தேதியிட்டு வழங்கப்படும்என மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் போதெல்லாம் தமிழக அரசும் அந்த அகவிலைப்படி உயர்வை ஏற்று அறிவித்து வருகிறது. அதன்படி மத்திய அரசு அறிவித்துள்ள 3 சதவீத அகவிலைப்படி உயர்வை தமிழக அரசும் ஏற்றுக்கொண்டு அறிவிக்க வேண்டும். இந்த அக்டோபர் மாதம் தீபாவளி பண்டிகை கொண்டாடும் மாதமாகும். தமிழகத்தில் உள்ள மிக பெரும்பான்மையான ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் இந்த பண்டிகையை சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர். தீபாவளி பண்டிகையை ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மகிழ்வுடன் கொண்டாடும்வகையில் தமிழக அரசு அகவிலைப்படி உயர்வை உடனடியாக முன் தேதியிட்டு அறிவிக்க வேண்டும். அதற்கான அகவிலைப்படி நிலுவையினையும் உடனடியாக வழங்கி ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக தீபாவளி பண்டிகையை கொண்டாட உதவிட வேண்டும். இதற்கான உத்தரவுகளை முதலமைச்சர் வெளியிட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பெரியபாளையம் அருகில் உள்ள பென்னார் இரும்பு தொழிற்சாலையில் அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு



**திருவள்ளூர், அக்.7:**

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகில் உள்ள பென்னார் (PENNAR) தொழிற்சாலையில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில்ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை, அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, நான்கு வழித்தட உயர்மட்ட மேம்பாலம் 3.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.621 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

இம்மேம்பால கட்டுமானப் பணியை விரைவில், தரமான முறையில் மேற்கொள்ளும் பொருட்டு, முன்னோக்கிய கட்டமைப்பு முறையில், 16,300 டன் எஃகுக் கட்டமைப்புகள் (PIER, PIER-CAP, GIRDER) மகாராஷ்டிர மாநிலம், மும்பையில் உள்ள எஸ்.ஜி.ஹெவி இரும்பு தொழிற்சாலை, குஜராம் மாநிலம், வதோதராவில் உள்ள கே.பி.கிரீன் இரும்பு தொழிற்சாலை,

ஆந்திரா மாநிலம், ஹைதராபாத்தில் உள்ள குளோபல் இரும்பு தொழிற்சாலை, சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள ஸ்ட்ரக்ரைட் இரும்பு தொழிற்சாலை மற்றும் தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், பெரியபாயைம் அருகில் அமைந்துள்ள பென்னார் இரும்பு தொழிற்சாலை ஆகிய ஐந்து எஃகு தொழிற்சாலைகளில்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், குஜராத், ஆந்திரா, மகாராஷ்ட்டிரா ஆகிய மூன்று மாநிலங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு அமைச்சர் முன்னரே நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

உயர்மட்ட மேம்பால பாலத்திற்கு தேவையான இரும்பு தூண்கள்(பியர்), இரும்பு தூண்களின் தலைப்புப் பகுதிகள் (பியர் கேப்) ஐ-கர்டர் (உத்திரங்கள்) தயாரிக்கப்பட்டு வரும், திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகில் அமைந்துள்ள பென்னார் இரும்பு தொழிற்சாலைக்கு நேற்று (3ந் தேதி) அமைச்சர் எ.வ.வேலு, நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஐந்து தொழிற்சாலைகளிலும் சுமார் 16,300 டன் எடை கொண்ட இரும்பு தூண்கள்(பியர்) மற்றும் தலைப் பகுதிகள் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில், பெரியபாளையம் அருகில் உள்ள பென்னார் தொழிற்சாலையில் சுமார் 1436 டன் எடை கொண்ட இரும்பு தூண்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டுவரும் இரும்பு தூண்கள்(பியர்) மற்றும் தலைப் பகுதிகள் பணிகள் பல்வேறுநிலையில் உள்ளது. இந்த உயர்மட்ட மேம்பாலப் பணிகள் திட்டமிட்ட காலக்கெடுவிற்குள் முடிப்பதற்கு, தினசரி கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இரும்பு தூண்கள் தயாரிக்கப்பட்டவுடன், சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் துறை அரசு செயலாளர் இரா. செல்வராஜ், தலைமை பொறியாளர் (கட்டுமானம்) கு.கோ.சத்தியபிரகாஷ், சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம் மற்றும் பென்னார் தொழிற்சாலையின் தலைமை நிர்வாக அதிகாரி உடனிருந்தனர்.

# நடுக்கடலில் 2 இடங்களில் நாகை மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல்

**நாகை, அக்.7:**

மிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், கடற்கொள்ளையர்களால் தாக்கப்படுவதும் தொடர் கதையாகி வருகிறது. இந்த நிலையில் ஆழ்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்கள் 11 பேர் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி உள்ளனர்.


நாகை நம்பியார் நகர் பகுதியை சேர்ந்த சந்திரபாபு (வயது 60) என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் அதே பகுதியை சேர்ந்த விக்னேஷ் (28), விமல் (26), சுகுமார் (31), திருமுருகன் (31), முருகன்(38), அருண் (27) ஆகிய 6 பேர் நேற்று மதியம் 2 மணிக்கு கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இவர்கள் நள்ளிரவு கோடியக்கரை கிழக்கே நடுக்கடலில் மீன் பிடித்து கொண்டிருந்தனர். அப்போது 2 படகுகளில் வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் 8 பேர் மீனவர்களை கத்தி, இரும்பு கம்பி உள்ளிட்ட ஆயுதங்களால் தாக்கி அவர்களிடம் இருந்து வெள்ளி செயின், மோட்டார் என்ஜின், செல்போன், ஜி.பி.எஸ் கருவி, பேட்டரி, வாக்கிடாக்கி உள்ளிட்ட பொருட்களை பறித்து சென்றனர். இதையடுத்து காயமடைந்த 6 மீனவர்களும் இன்று அதிகாலை 4 மணிக்கு கரை திரும்பினர். இதுகுறித்து மீனவர்கள் நாகை கடலோர பாதுகாப்பு குழும போலீசில் புகார் அளித்தனர். அதன் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேபோல் சசிகுமார் (30) என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் சசிக்குமார், உதயசங்கர் (28), சிவசங்கர் (25), கிருபா (29), கமலேஷ்(19) ஆகிய 5 பேர் நேற்று மதியம் 2 மணிக்கு கடலுக்கு புறப்பட்டு சென்றனர். அப்போது அங்கு 2 படகுகளில் வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் 8 பேர் மீனவர்களை தாக்கி, அவர்களிடம் இருந்து மோட்டார் என்ஜின், ஜி.பி. எஸ் கருவி, இகோ சவுண்டர், 5 செல்போன்கள், மீன்பிடிவலை உள்ளிட்ட பொருட்களை பறித்து சென்றனர். கடற்கொள்ளையர்கள் மொத்தம் ரூ. 4 லட்சம் மதிப்பிலான மீன்பிடி உபகரணங்களை பறித்துச் சென்றதாக கூறப்படுகிறது.

# உத்தரவுகளை பிறப்பிக்கும் நீதிபதிகளையும் விட்டுவைக்காமல் சமூக ஊடகங்களில் விமர்சிப்பதா?: நீதிபதி அதிருப்தி

**சென்னை, அக்.7:**

உத்தரவுகளை பிறப்பிக்கும் நீதிபதிகளையும் விட்டுவைக்காமல் சமூக ஊடகங்களில் விமர்சிப்பதாக கரூர் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய சென்னை ஐகோர்ட் நீதிபதி செந்தில்குமார் அதிருப்தி தெரிவித்துள்ளார்.





கரூர் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கு சென்னை ஐகோர்ட்டில் நீதிபதி செந்தில்குமார் அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி செந்தில்குமார், விஜய் பிரசாரம் செய்த வாகனம் இடித்து, விபத்து நேரிட்டுள்ளதே, அந்த சம்பவத்தில், இடித்துவிட்டு ஓடியதாக விஜய் வாகனம் மீது ஏன் வழக்குப் பதிவு செய்யவில்லை. அவ்வாறு செய்யாவிட்டால் மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும்" என்று கேள்வி எழுப்பினார். தொடர்ந்து வாதங்களைக் கேட்ட நீதிபதி, கரூர் பலி சம்பவம் குறித்து காவல்துறை ஐ.ஜி. அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படும் என உத்தரவிட்டார்.மேலும், "கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள், கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் எல்லாம் சம்பவம் நடந்ததும் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். ஒருவர் கூட பொறுப் பேற்கவில்லை. தலைவர்கள் பலரும் தலைமறைவாகிவிட்டார்கள். விஜய் பிரசாரம் செய்த வாகனம் ஏன் இன்னமும் பறிமுதல் செய்யப்படவில்லை." எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

## விமர்சித்த 2 பேர் கைது

இதையடுத்து, நீதிபதி செந்தில்குமாரின் குடும்பப் பின்னணியைக் குறிப்பிட்டு அவருக்கு எதிராக பல்வேறு அவதூறு கருத்துகளை சமூக ஊடகங்களில் விஜய்யின் ரசிகர்கள் வெளியிட்டனர். அதைத் தொடர்ந்து கரூர் கூட்ட நெரிசல் வழக்குகளில் உத்தரவு பிறப்பித்த நீதிபதிகள் குறித்து சமூகவலைதளங்களில் அவதூறு பரப்பிய கண்ணன், டேவிட், சசி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், பிரபல சமையல்கலைஞரும் நடிகருமான 'மாதம்பட்டி' டி. ரங்கராஜ், ஆடை வடிவமைப்பாளர் ஜாய் க்ரிசில்டாவிற்கு எதிராக சென்னை ஐகோர்ட் உரிமையியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். தனது தனிப்பட்ட வாழ்க்கையை இழிவுபடுத்தும் விதமாக ஊடகங்களில் பொய்யான, தீங்கிழைக்கும் மற்றும் அவதூறான கருத்துகளைத் தெரிவிப்பதைத் தடுக்க இந்த வழக்கை அவர் தொடுத்துள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## நலம் தரும் மருத்துவம்

# சப்பாத்தி சாப்பிட்டு சுலபமாக எடை குறைக்கலாம்.. ஆனால் நிபந்தனைக்கு உட்பட்டு மட்டுமே!



சப்பாத்தி ஆரோக்கியமானது, எடை குறைக்க உதவும் என்ற நம்பிக்கை பரவலாக உள்ளது. அது உண்மையும்கூட. ஆனால், சப்பாத்தி சாப்பிடும் எல்லோருக்கும் எடை குறைகிறதா என்றால், இல்லை என்பதே பதில். ஏனெனில், சப்பாத்தியை எப்படி, எவ்வளவு சாப்பிடுகிறோம் என்பதில்தான் அதன் முழுப் பலனும் அடங்கியுள்ளது.

சப்பாத்தியின் நன்மைகள்!

சப்பாத்தி, குறிப்பாக கோதுமை மாவில் செய்யப்படும்போது, அது ஊட்டச்சத்துக்களின் ஒரு சிறிய பெட்டகமாகவே விளங்குகிறது. இதில், உடலின் ஆற்றலுக்குத் தேவையான பி காம்ப்ளக்ஸ் வைட்டமின்கள், இரும்பு, மெக்னீசியம், பாஸ்பரஸ், துத்தநாகம் போன்ற அத்தியாவசியத் தாதுக்கள் நிறைந்துள்ளன.

இதில் உள்ள அதிகப்படியான நார்ச்சத்து, சீரான செரிமானத்திற்கு உதவுவதோடு, மலச்சிக்கல் வராமலும் தடுக்கிறது. மேலும், நார்ச்சத்து மெதுவாக ஜீரணமாவதால், வயிறு நிரம்பிய உணர்வை நீண்ட நேரத்திற்குத் தந்து, தேவையற்ற நொறுக்குத் தீனிகளைச் சாப்பிடுவதைக் கட்டுப்படுத்துகிறது.

வெள்ளை அரிசியுடன் ஒப்பிடும்போது, கோதுமையின் கிளைசெமிக் குறியீடு குறைவு. அதாவது, இது ரத்தத்தில் சர்க்கரையின் அளவை மெதுவாகவே உயர்த்தும். இது நீரிழிவு நோயாளிகளுக்கு மட்டுமல்ல, உடல் எடையைக் கட்டுப்பாட்டில் வைக்க நினைக்கும் அனைவருக்கும் ஒரு சிறந்த தேர்வாகும்.

நாம் செய்யும் முக்கியமான தவறு!

இவ்வளவு நன்மைகள் கொண்ட சப்பாத்தி, சில சமயங்களில் எடை அதிகரிப்பிற்குக் காரணமாக அமைவதற்கு முக்கியக் காரணம், அதை நாம் தயாரிக்கும் முறைதான். மாவு பிசையும்போதும், சப்பாத்தியைச் சுடும்போதும் தாராளமாக எண்ணெய் அல்லது நெய்யைச் சேர்ப்பது நாம் செய்யும் மிகப்பெரிய தவறாகும்.

வெறும் 140 கலோரிகளைக் கொண்ட இரண்டு சப்பாத்திகள், எண்ணெய் அல்லது நெய் சேர்க்கும்போது, அதன் கலோரி அளவை இருமடங்காக மாற்றிவிடுகிறது. எண்ணெய் சேர்க்கப்பட்ட சப்பாத்தி, சுவையாக இருக்கலாம், ஆனால் அது உங்கள் எடை குறைப்பு லட்சியத்திற்கு வைக்கும் மிகப்பெரிய தடையாகும்.

சப்பாத்தியின் முழுமையான ஆரோக்கியப் பலன்களைப் பெற, சில விதிகளைப் பின்பற்றுவது அவசியம். முடிந்தவரை, சப்பாத்தியை எண்ணெய் அல்லது நெய் சேர்க்காமல், வெறும் கல்லில் சுட்டு எடுங்கள். இது அதன் கலோரி அளவைக் கட்டுப்பாட்டில் வைக்கும். சப்பாத்தி ஆரோக்கியமானது என்பதற்காக, அளவுக்கு அதிகமாகச் சாப்பிடக்கூடாது. எடை குறைப்பு முயற்சியில் இருப்பவர்கள், ஒரு வேளைக்கு இரண்டு சப்பாத்திகள் எடுத்துக்கொள்வதே போதுமானது.

சப்பாத்தியை அதிக கொழுப்பு நிறைந்த குருமா, வெண்ணெய் அல்லது வறுத்த காய்கறிகளுடன் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். அதற்குப் பதிலாக, புரதச்சத்து நிறைந்த பருப்புக் குழம்பு, அவித்த காய்கறிகள், அல்லது குறைந்த கொழுப்புள்ள பன்னீர் கிரேவி போன்றவற்றுடன் சேர்த்துச் சாப்பிடுவது ஆரோக்கியமானது.

சப்பாத்தி என்பது உடல் எடையைக் குறைப்பதற்கான ஒரு அற்புதமான உணவு என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அது ஒரு கருவி மட்டுமே. அந்தக் கருவியை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதில்தான் வெற்றி அடங்கியுள்ளது.

# சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள்: ஸ்டாலின் நேரில் ஆய்வு



**சென்னை, அக்.7:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் டி.டி.கே. சாலை - வீனஸ் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் கழிவுநீர் விரிவாக்கப் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தேனாம்பேட்டை மண்டலம், வார்டு -118, டி.டி.கே சாலை ஆழ்வார்பேட்டையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வரும் இடத்தில், சென்னை குடிநீர் வாரியத்தால் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள குடிநீர் குழாய்களை மாற்றி, 200 மீட்டர் நீளத்திற்கு, புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகளை முதலமைச்சர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். வீனஸ் காலனி 1வது தெரு. 2வது தெரு, சீமான் சீனிவாசன் தெரு, வரதராஜபுரம் பிரதான சாலை, கஸ்தூரி எஸ்டேட் 1வது தெரு, சேஷாத்திரி தெரு மற்றும் முரேஷ் கேட் சாலை ஆகிய தெருக்களில் மழைக்காலங்களில் தண்ணீர் தேக்கம் ஏற்படுகிறது.

மேற்குறிப்பிட்ட தெருக்களில், மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கா வண்ணம், ஜெயம்மாள் சாலை, இளங்கோ சாலை குறுக்கு தெரு, இளங்கோ சாலை, போயஸ் ரோடு, வெங்கடரத்தினம் சாலை, ராஜகிருஷ்ணா ரோடு, நல்லான் போயஸ் ரோடு, வரதராஜபுரம் பிரதான சாலை, ஸ்ரீமான் ஸ்ரீனிவாசன் ரோடு மற்றும் டிடிகே சாலை ஆகிய பத்து தெருக்களில் மழை நீர் வடிகால்கள் சுமார் 2.16 கிமீ நீளத்திற்கு 8.21 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை முதலமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

எதிர்வரும் பருவமழையை யொட்டி, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும், பணிகளை மிக விரைந்து முடித்திட வேண்டும் என்றும் முதலமைச்சர், அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேற்கண்ட மழை நீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தேங்கும் மழை நீரை எல்டம்ஸ் சாலை, சிபி ராமசாமி சாலை, லஸ் சர்ச் சாலை மற்றும் சி.ஐ.டி காலனி ஆகிய நான்கு வழியாக வெளியேற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் எழிலன், சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு, சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## ஜிஎஸ்டி செயல்பாடுகளை நெறிப்படுத்த டிபிஎஸ் வங்கி புதிய நடவடிக்கை

இந்திய ரிசர்வ் வங்கியால் (ஆர்.பி.ஐ.) சரக்கு மற்றும் சேவைவரி (ஜி.எஸ்.டி.) கட்டணங்களை வசூலிக்கும் ஒரு ஏஜென்சி வங்கியாக டி.பி.எஸ். வங்கி இந்தியா அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியிடமிருந்து இந்த அங்கீகாரத்தைப் பெற்ற இந்தியாவில் உள்ள முழு உரிமமுள்ள ஒரே துணை நிறுவனம் என்ற பெருமையை டி.பி.எஸ். வங்கி இந்தியா பெற்றுள்ளது.

இப்போது, டி.பி.எஸ். வங்கி இந்தியா அதன் டிஜிட்டல் வங்கித் தளமான டி.பி.எஸ். ஐடியல் (DBS IDEAL) மூலம் வாடிக்கையாளர் நிறுவனங்கள் தங்கள் ஜி.எஸ்.டி. கட்டணங்களை உடனடியாகச் செலுத்த உதவுகிறது.

இந்தத் தளத்தின் மூலம் கிடைக்கும் வசதிகள்: உடனடிப் பதிவிறக்கம்: வாடிக்கையாளர்கள் ஜி.எஸ்.டி. கட்டண அறிவிக்கையை உடனடியாகப் பதிவிறக்கம் செய்ய முடியும்.

நிகழ்நேர கண்காணிப்பு: பரிவர்த்தனையின் நிலை குறித்த தகவல்களை நிகழ்நேரத்தில் (REAL-TIME) பெற முடியும்.

சிறப்புச் சேவை: ஜி.எஸ்.டி. கட்டணம் தொடர்பான சந்தேகங்களுக்குத் தீர்வு காணச் சிறப்பு வாடிக்கையாளர் சேவை வசதியும் உள்ளது.

டி.பி.எஸ். ஐடியல் தளத்தின் மூலம் செலுத்துவது மட்டுமின்றி, வாடிக்கையாளர்கள் தங்கள் விருப்பத்தைப் பொறுத்து நெஃப்ட் / ஆர்.டி.ஜி.எஸ். (NEFT/RTGS) மூலமாகவோ அல்லது நேரடியாக வங்கிக் கிளைகளுக்குச் சென்றோ ஜி.எஸ்.டி. கட்டணங்களைச் செலுத்தலாம்.

## உயர்ரக டயர்களை முதல்முறையாக இந்தியாவிலேயே தயாரிக்கும் மிச்செலின் நிறுவனம்

சென்னை: மிச்செலின் நிறுவனம் கார்களுக்கான உயர்ரக டயர்களை முதல்முறையாக இந்தியாவிலேயே தயாரித்திருக்கிறது. இவை அடுத்த ஆண்டில் விற்பனைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகனங்களுக்கான டயர் விற்பனையில் சிறந்து விளங்கும் முன்னணி நிறுவனமான மிச்செலின் இந்தியா நிறுவனம் தற்போது எஸ்யுவி, சேடன் கார்களுக்கான உயர்ரக டயர்களை முதல்முறையாக இந்தியாவிலேயே தயாரித்து, அறிமுகம் செய்துள்ளது. இது தொடர்பாக அந்நிறுவனத்தின் இந்திய பிரிவு தலைவர் விட் டோர் சில்வா, மேலாண்மை இயக்குநர் சாந்தனு தேஷ்பாண்டே, மிச்செலின் சென்னை ஆலை இயக்குநர் புளோரன்ட் சாசேட் ஆகியோர் கும்மிடிப்பூண்டியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு முன்பு 900 கிமீ விரைவுச் சாலை மட்டுமே இருந்தது. இன்றைக்கு 5 ஆயிரம் கிமீ மேல் விரைவுச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 2030-ம் ஆண்டுக்குள் விரைவுச் சாலைகள் 16 ஆயிரம் கி.மீட்டரை கடந்திருக்கும். இவை நகரங்களுக்கு இடையேயான தொலைவை குறைக்கின்றன. உதாரணமாக சென்னையில் இருந்து பெங்களூருக்கு செல்வதற்கு 7 மணி நேரமாகும் நிலையில், விரைவில் பெங்களூருவுக்கு வெறும் 2 மணி நேரத்தில் சென்றடையும் வகையில் சாலை வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

# கரூர் துயர சம்பவத்தில் பாதுகாப்பு குளறுபடிகளையும் விசாரிக்க வேண்டும்: எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

**சென்னை, அக்.7:**

கரூர் துயர சம்பவத்தில் அரசு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதில் ஏற்பட்ட குளறுபடி குறித்து அரசின் நடவடிக்கைகளை ஒரு நபர் கமிஷன் முழுமையாக விசாரிக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அண்ணா தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட ‘எக்ஸ்’ பதிவில் கூறியிருப்பதாவது:-

கரூரில் விஜய் வாகனத்தை கூட்ட நெரிசலில் காவலர்கள் உள்ளே கொண்டு வரவும், அதை பாதுகாக்கவும் காட்டிய அக்கறையில் பொதுமக்களை பாதுகாப்பதில் காட்டவில்லை. ஆனால் கூடுதல் டி.ஜி.பி. டேவிட்சன் தேவசீர்வாதம் 20 நபர்களுக்கு ஒரு போலீஸ் போடப்பட்டதாக கூறுகிறார். இது ஒரு வேளை விதிமுறையாக இருக்கலாம்.

ஏனெனில் 500 போலீசார் பாதுகாப்பில் இருந்ததாக ஆரம்பத்தில் இவர் கூறினார்.

அதன்பிறகு எண்ணிக்கையை அவர் குறிப்பிடவே இல்லை. மேலும் உண்மையில் எவ்வளவு போலீசார் கூட்ட நிகழ்வுக்கு பணியமர்த்தப்பட்டனர் என்பதை ஏன் வெளிப்படையாக கூறவில்லை. இந்த சம்பவ நிகழ்வின் போட்டோக்களிலும், வீடியோக்களிலும் குறிப்பாக கூட்டம் நடந்த இடத்தில் அதிகமாக போலீசார் காணப்படவில்லை என்றுதான் மக்கள் பேசுகின்றனர். இது எல்லாம் பாதிக்கப்பட்ட மக்களாலும், சம்பவ இடத்தில் இருந்தவர்களாலும் கூறப்படும் உண்மைகள்.

இவற்றை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதில் குளறுபடி செய்த அரசின் நடவடிக்கைகளை, ஒரு நபர் விசாரணைக்குழு முழுமையாக விசாரிக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார் முன்ஜாமீன் கோரி சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு



**கரூர், அக்.7:**

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார் முன்ஜாமீன் மனுவை சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்த நிலையில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளனர்.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த 27-ந் தேதி த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியானார்கள். இச்சம்பவம் தொடர்பாக கரூர் டவுன் போலீசார் த.வெ.க. கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் (வயது 49), பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், மாநில இணை செயலாளர் நிர்மல்குமார் மற்றும் சிலர் மீது 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சூழலில் கடந்த 29-ந் தேதி திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை அருகே உள்ள கிராமத்தில் உறவினர் வீட்டில் பதுங்கி இருந்த கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகனை தனிப்படை போலீசார் கைது செய்து, கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இதையடுத்து த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், மாநில இணை செயலாளர் நிர்மல்குமார் ஆகியோரை பிடிக்க கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு பிரேமானந்தன் தலைமையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டது. இந்த தனிப்படையினர் புஸ்ஸி ஆனந்த், இணை பொதுச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோரை கைதுசெய்ய தீவிரம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பான பொதுநல வழக்குகள் மற்றும் முன்ஜாமீன் மனுக்கள் சென்னை ஐகோர்ட் மதுரை கிளை விசாரணை நடத்தியது. வழக்கை விசாரித்த நீதிபதி ஜோதிராமன் மற்றும் தண்டபாணி ஆகியோர் அடங்கிய அமர்வு, ஜாமீன் எல்லாம் தர முடியாது என்று கூறி மனுவை தள்ளுபடி செய்திருந்தது. தலைமறைவு: த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார் உள்ளிட்டோர் தலைமறைவாகியுள்ளனர். கடந்த 7 நாட்களுக்கும் மேலாக அவர்களை தேடும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. அவர்கள் எப்போது வேண்டுமானாலும் கைது செய்யப்படலாம் என்கிற நிலை உருவாகியிருக்கிறது. இந்நிலையில், சுப்ரீம் கோர்ட்டில் முன்ஜாமீன் கோரி இருவரும் மேல்முறையீடு செய்திருக்கின்றனர்.

# வரலாறு காணாத உச்சம்: தங்கம் ஒரு சவரன் ரூ.88 ஆயிரத்தை கடந்தது

**சென்னை, அக்.7:**

சென்னையில் நேற்று 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.880 உயர்ந்து ஒரு சவரன் ரூ.88,480க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு ரூ.110 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,060க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை வரலாறு காணாத உச்சத்தை எட்டியிருப்பது மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.



அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பில் சரிவு, உக்ரைன் ரஷ்யா போர், இஸ்ரேல் ஹமாஸ் மோதல் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் பாதுகாப்பு கருதி, தங்கத்தில் மிக அதிக அளவில் முதலீடு செய்து வருவதால், சர்வதேச சந்தையில் தங்கம் விலை உயர்ந்து வருகிறது.

கடந்த 1ம் தேதி தங்கம் விலை ஒரு சவரன் ரூ.87,600 என்ற உச்சத்தை எட்டியது.

நேற்று முன்தினம் தங்கம் விலை கிராமுக்கு, 50 ரூபாய் உயர்ந்து, 10,950 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு 400 ரூபாய் அதிகரித்து, 87,600 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் விலையில் மாற்றம் இல்லாமல் விற்பனை செய்யப்பட்டது.

வாரத்தின் முதல் நாளான இன்று சென்னையில் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.110 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,060க்கும் சவரனுக்கு ரூ.880 உயர்ந்து ஒரு சவரன் ரூ.88,480க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல் 18 காரட் தங்கம் விலையும் கிராமுக்கு ரூ.105 உயர்ந்து ஒரு கிராம் ரூ.9,160க்கும், சவரனுக்கு ரூ.840 உயர்ந்து ஒரு சவரன் ரூ.73,280க்கும் விற்பனையாகிறது.

ஒரு கிராம் தங்கம் விலை ரூ.11 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம் தொட்டு உள்ளது. வரலாறு காணாத தங்கம் விலை உயர்வால் நகைப்பிரியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.1 அதிகரித்துள்ளது. அதன்படி வெள்ளி ஒரு கிராம் 166 ரூபாய்க்கும், ஒரு கிலோ வெள்ளி 1,66,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# ரூ.209 கோடியில் சமூகநீதி விடுதி, பள்ளி கட்டடங்கள்: முதல்வர் ஸ்டாலின் திறந்தார்

**சென்னை, அக்.7:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.209.18 கோடி செலவிலான 20 சமூகநீதி விடுதிகள், 37 பள்ளிக் கட்டடங்கள், தொல்குடி திட்டத்தின் கீழ் 250 வீடுகள், 16 கிராம அறிவுசார் மையங்கள் மற்றும் 9 பல்நோக்கு மையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, ரூ.13.41 கோடி செலவில் 68 வாகனங்களின் பயன்பாட்டினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 137 கோடியே 31 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 20 சமூகநீதி விடுதிக் கட்டடங்கள், 39 கோடியே 29 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் 39 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கான வகுப்பறை கட்டடங்கள், 12 கோடியே 72 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் பழங்குடியினர்களுக்கு தொல்குடி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 250 வீடுகள், 15 கோடியே 93 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கிராம அறிவுசார் மையங்கள், 5 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 பல்நோக்கு மையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மேலும், பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 62 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 23 வாகனங்கள் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து 3 வாகனங்கள், என மொத்தம் 26 வாகனங்கள் மற்றும் பழங்குடியின மக்களின் மருத்துவப் பயன்பாட்டிற்காக 5 கோடியே 78 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில் 25 அவசரகால ஊர்திகள், 4 கோடி ரூபாய் செலவில் 20 நடமாடும் மருத்துவ ஊர்திகள் ஆகியவற்றின் பயன்பாட்டினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பழங்குடியினர் நலத்துறை செயலாளர் க.லட்சுமி பிரியா, தாட்கோ தலைவர் இளையராஜா, ஆதிதிராவிடர் நல ஆணையர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு. கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இப்படியும் சில பேர்!



தினசரி காலை வேளையில் நடைபயிற்சி செய்யும் காந்தி பூங்காவில், நீண்ட நாட்களுக்கு பிறகு நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். எங்கே உங்களை இந்த பக்கம் ரொம்ப நாளாவே காணும் என்று நான் கேட்டதும், அவர் ஆமாம் சார் ! மூன்று மாதம் சென்னையிலுள்ள மகள் வீட்டிற்கு போயிருந்தேன். நேற்றுதான் இங்கு வந்தேன் என்றார் . இங்கு மழையே பெய்யவில்லை போலிருக்கு ! சென்னையில் இரவு நேரத்தில் அடிக்கடி மழை பெய்வதாக தெரிவித்தார். எங்கே நமது நண்பர்கள் காளிதாஸ், வைத்தி, முருகேசன் என்று பட்டியல் போட்டு, நடைபயிற்சி நண்பர்களை விசாரித்தார். எல்லோருக்கும் வயதாகிக் கொண்டே போகிறது... சிலநாட்கள் வருவார்கள்... சிலநாட்களுக்கு நடைபயிற்சிக்கு வருவதேயில்லை என்று விளக்கம் கொடுத்தேன். நடந்து கொண்டே அரசியலை அலசினோம்... ஜனநாயக நாட்டில் தினம், தினம் புதுப்புதுக் கட்சிகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன என்றார்... எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்று யாரோ சொன்னதை நிருபிக்கத்தான் புதுக்கட்சிகள் உருவாகிக் கொண்டே இருக்கிறது.... என்றேன்.. கட்சி ஆரம்பிக்கலாம்... தேர்தலிலும் போட்டியிடலாம்... வோட்டுகளும் வாங்கலாம்.... சீட்டுகள் வாங்கினால் தானே சட்டசபையில் போய் உட்காரலாம்.... என்றார் பாலாஜி... சரி...பணம் இருந்தால் கட்சி ஆரம்பிக்கலாம்... நமக்கேன் வம்பு....என்று சொல்லியபடியே மணி எட்டாகிவிட்டது... புறப்படுவோமோ.... என்று நான் சொன்னதும்,புறப்பட வேண்டியதுதான் என்றபடியே இருவரும் பூங்காவை விட்டு வெளியே வந்தோம்... வீட்டிலிருந்து பூங்காவிற்கு நான் நடந்தே வந்ததால் நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று பாலாஜியிடம் கேட்டேன்...! அதற்கு அவர், நான் அந்தப் பக்கம் போவதாக சொல்லிவிட்டு, அருகிலுள்ள தேநீர் கடைக்குள் வேகமாக நுழைந்தார்... ஆமாம்! என்னை அவர் தேநீர் சாப்பிட வாருங்கள் என்று அழைக்காமல் போனதற்கு அவர்மீது நான் என்ன கோபப்படவா போகிறேன்....?



தமிழ்ச் செம்மல்
**-நன்னிலம் இளங்கோவன்.**

# ஆட்டோல பொருள்

பஸ்ஸ்டான்டுக்கு வெளியே கொஞ்சம் தள்ளி,நடு இரவில் வரும் கோயம்புத்தூர் பஸ்ஸூக்கு காத்து நிற்பது கொடுமையாக இருந்தது காயத்ரிக்கு.எப்போதும் அவள் தந்தைதான் பஸ் ஏத்திவிட்டு போவார்..இன்று அவருக்கு காய்ச்சல் என்பதால் ஆட்டோ பிடித்து வந்துவிட்டாள்.

எப்போதும் நாலைந்து பேராவது இந்த ஸ்லீப்பர் பஸ்ஸூக்காக காத்திருப்பர்.. இன்று யாரையுமே காணோம்..சற்று முன்னமே வந்துட்டோமோ? பேன்ட் ஷர்ட்லாம் போட்டு பையன் போல வளர்த்தாலும் ..இப்படிப்பட்ட வேளைகளில் பெண்மை எட்டிப்பார்க்கதான் செய்கிறது..



மெல்ல தோளில் பேகோடு ஒரு உருவம் வருவது தெரிய ஆசுவாசமாகி ஆளை பார்த்து நெளிந்தாள்..காலேஜில் இவள் பின்னாடி நான்கு வருடமும் ஜொள் விட்டுக்கொண்டு அலைந்த பிரதீப்தான் அது..

அவனும் சற்று ஆச்சர்யத்தோடு பார்த்துவிட்டு, திரும்பி நின்றான்.. சரியாக,அப்போ ஒரு ஆட்டோவில் சில முரடர்களாய் தெரிந்தவர்கள் வந்து இறங்கினர்..நல்ல போதை தெரிந்தது முகத்தில்..

"ஏன்டா ..? பொருளெல்லாம் ஆட்டோல இருக்குல.. உஷாரா இருக்கனும்.. இல்லனா போனவாட்டி முதலாளிக்கிட்ட டோஸ் வாங்குன மாதிரி ,இப்பவும் டைமிங் மிஸ் ஆகிடக்கூடாது சொல்லிட்டேன்.. முதுகுக்கு பின்னால் அரிவாள் தெரிய..காயத்ரிக்கு அடிவயிற்றில் கிலி வந்தது..

ஒரு முரடன் சிகரெட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து உதட்டுக்கு கொடுத்தவன்.. வத்திப்பெட்டிக்கு அனடர்வேர் பாக்கெட்டில் கைவிட்டு துழாவி..இவளிடம் திரும்பி.. " பாப்பா..வத்திப்பெட்டி வெச்சினுகீற?"

அவள் சப்தநாடியும் ஒடுங்கிப்போய் பயத்தில் சட்டென்று பிரதீப்பை நோக்கி ஓடி..அவனருகில் நின்றதோடில்லாமல் இருந்த பயத்தில் முதுகோடு ஒட்டினாள்..

இப்போ ஆண்மை விழிக்கும் நேரம் அல்லவா..

" என்னாங்கடா !பொண்ணு தனியா நின்னா லந்து பன்றீங்களா?",என்று குரல் கொடுக்க..

"பாருடா..பையனுக்கு வீரத்தை !..இருடா ..வர்ரேன்னு, !", ஒரு முரடன் அவர்களை நோக்கி வர..

"டேய் பஸ் வருது..டைமிங் முக்கியம்..சீக்கிரம்டா !", ..என்று அடுத்தவன் ஆட்டோ பக்கம் திரும்ப.. பஸ் நின்ற வேகத்துக்கு பிரதீப் ,காயத்திரி கையினை இறுகப்பற்றி படிகளில் ஏறி.. உள்ளே நுழைந்து விட்டனர்.

கண்டக்டர் அவர்களை ஆச்சர்யமாய் பார்க்க.. அவன் வெளியே அவர்களை கைக்காட்டினான்..

"ஆமாம்பா..இவனுங்களோட தொந்தரவா போச்சி.. வாழைக்காய்..வாழையிலை ஏத்துறேன்னு அட்வான்ஸா ஒரு மாசத்துக்கு பணம் கட்டியிருக்கு..ஆனா நேரத்துல ஏத்தி விடனும்ல?.. இவனுங்களுக்கு எவ்வளவு நேரம் காத்து நிக்கிறதுன்னு ,நேத்து ஏத்தாம போயாச்சி.. அதான் முன்னாடியே இன்னிக்கு நிக்கிறானுங்க.."

ஐஅவசர அவசரமா ஆட்டோவிலிருந்து வாழைக்குலைகளையும் இலை பன்டில்களையும் பஸ் மேல ஏற்றி, சரசரவென்று பறக்காமல் கயிறுபோட்டடு கட்டி விட்டு..தொம் தொம்னு குதித்து ..நகர்ந்த பஸ்ஸூக்கு பின்பக்கமிருந்து சல்யூட்டுடன் டாட்டா காண்பித்த அவர்களை பாத்து மனதுக்குள் நன்றி சொன்னான் பிரதீப்..

"எங்கூட உக்காந்துக்கயேன் பிரதீப்.இப்பவும் மனசு இன்னும் படபடன்னு இருக்கு !", காயத்ரி சொல்ல, அடுத்த இன்னிங்ஸ் பழம்தான்னு நம்பிக்கையோட அவளருகில் அமர்ந்தான் பிரதீப்..



**-உமாதேவி சேகர்**
பியூட்டிஷியன், தஞ்சை

# யாதுமாகி நின்றவள்

பாகம் 28



**▪நிரஞ்சனா**

## லலிதாவின் யூகம்

"அம்மா நீங்களுமா?" என்றான் கிரிஷ்.

"அப்பா எது செஞ்சாலும், உன்னோட நல்லதுக்காக தான் செய்வார். யாழினியை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு".

"நல்ல காலம். நீயாவது புரிஞ்சுக்கிட்டியே. அவனுக்குச் சொல்லி புரிய வை." சொல்லிவிட்டு ஆஃபீசுக்குக் கிளம்பிச் சென்றார் ஈஸ்வர்.

"என்னமா இப்படி பண்ணிட்டீங்க? உங்களுக்குத் தெரியாதா, யாழினியும்..."

"அபியும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறாங்க. எல்லாருக்கும் தெரியுமே. ஆனா இப்போ அவ அதையெல்லாம் புரிஞ்சுக்குற நிலைமையில இல்ல." லலிதா உண்மை நிலையைக் கூறினார்.

"ஆனா, அபி இதை நடக்க விடுவான்னு நினைக்கிறீங்களா? கல்யாணப் பேச்சு பேசினது தெரிஞ்சாலே அவன் என்னைக் கொன்னுடுவான். கல்யாணத்தைப் பத்தி யோசிக்கக் கூட முடியாதுமா." புலம்பினான் கிரிஷ்.

"அவன் குத்தின குத்த, நீ இன்னும் மறக்கவே இல்ல போலருக்கு?" கிண்டலாக சிரித்துக்கொண்டே கேட்டார் லலிதா.

"அம்மா, இது கிண்டல் பண்ற நேரம் இல்ல."

"நீ கவலைப்பட வேண்டிய அவசியமே இல்ல. இந்த தடவை அபியால உன்னை ஒண்ணுமே பண்ண முடியாது. ஏன்னா, யாழினி உன் கூட இருக்கப் போறா. அவ முன்னாடி அவன் நல்லபடியா நடந்துக்கணும்னு தான் நினைப்பான்." லலிதா அவனுக்குத் தைரியம் தந்தார்.

"ஆனா, அம்மா..."

"அபி, யாழினியை எந்த அளவுக்கு நேசிக்கிறான்னு எனக்கு நல்லாவே தெரியும். அவன் உயிரை விட்டாலும் விடுவானே தவிர யாழினியை விடமாட்டான்".



"அம்மா, நீங்க என்னை ரொம்ப குழப்புறீங்க. உங்களுக்கு அபியைப் பத்தி எல்லாமே தெரிஞ்சுருக்கு. ஆனாலும், நான் யாழினியைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்றிங்க. எனக்கு ஒன்னுமே புரியல".

"நீ யாழினியைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னா, ஆதிகேசவன் இந்தக் கல்யாணத்த நிறுத்திடுவார்னு நினைக்கிறாயா? நிச்சயமா இல்ல. அவர் வேற ஒரு மாப்பிள்ளையைத் தேடுவார். யாழினி மாதிரி ஒரு நல்ல பொண்ணு, தப்பான ஒரு ஆள்கிட்ட மாட்டிக்கக் கூடாது."

"நீங்க யாழினியைக் காப்பாத்த நினைக்கிறது சரி தான். ஆனா, அபிகிட்ட இருந்து என்னை யார் காப்பாதுறது?" அவன் சலித்து கொண்டான்.

"நீ இவ்வளவு பயந்தாங்கோலியா இருப்பேன்னு நான் நினைச்சுக் கூட பாக்கல டா." சிரித்துக் கொண்டே கூறினார் லலிதா.

"என் நிலைமை உங்களுக்குக் கிண்டலா இருக்காம்மா? எந்த அம்மாவாவது இந்த மாதிரி சிரிப்பாங்களா?"

"நீ தான சொல்லுவ, நான் ஒரு வித்தியாசமான அம்மான்னு? எனக்கு நல்லா தெரியும், இந்த நேரமே, அபி, இந்த விஷயத்தைப் பத்தி தெரிஞ்சிகிட்டுருப்பான். அவன் தன்னோட அடுத்த அடியை எடுத்து வைக்க ஆரம்பிச்சும் இருப்பான்.

""அம்மா, எனக்கு ஒரு சந்தேகம். உங்களுக்கு நான் பிள்ளையா, இல்ல அபியா? எப்போ அவனைப் பத்தி பேசினாலும், ரொம்ப பெருமையா பேசுறீங்களே. அவன் என்னை ரத்தம் வர்ற அளவுக்கு அடிச்சிருக்கான் மறந்துடாதிங்க."

"நீ இன்னும் வளரணும், கண்ணா. அது நடந்தது எவ்வளவோ வருஷத்துக்கு முன்னாடி. நீ இன்னும் அதையே நெனச்சுக்கிட்டு இருக்க. அதுவும் நீ கண்டிப்பா ஒத்துகிட்டு தான் ஆகணும், அன்னைக்கு நடந்த விஷயத்துல, தப்பு உன்னோடது தான்."

"சரி. அப்ப எதுக்காக அபியோட பாட்டிகிட்ட போய், எனக்காக சண்டை போட்டீங்க?"

"அதுக்கு என்ன பண்றது? பையனோட முகத்துல இரத்தத்தைப் பார்த்தா, எல்லா அம்மாவும் அப்படித்தான் ரியாக்ட் பண்ணுவாங்க. அபியோட கோவத்துல நியாயம் இருக்கத்தானே செஞ்சிது? அவன் மேல தப்பு நிச்சயமா இல்ல".

"மறுபடியும், நீங்க, அவனைப் புகழ ஆரம்பிச்சுட்டீங்க. எதுக்குமா அவன் உங்களுக்கு அவ்வளவு ஸ்பெஷல்? மறுபடியும் சொல்லாதீங்க, சரியான நேரம் வரும் போது உனக்கு நானே சொல்லுவேன்னு." செல்லக் கோபத்தைக் கட்டினான் கிரிஷ்.

"நிச்சயமா, சரியான நேரம் வரும் போது, அவன் ஏன் ஸ்பெஷல்னு, நான் உனக்கு சொல்லுவேன். ஒரு விஷயம் தெரியுமா? ஒருவேளை, அபி உன்னோட இடத்தில இருந்திருந்தா, அவன் ஏன் எனக்கு ஸ்பெஷல்னு, இந்த நேரம் அவனே கண்டு பிடிச்சிருப்பான். உன்னை மாதிரி இருந்திருக்க மாட்டான்." மேலும் கிண்டலடித்து விழுந்து விழுந்து சிரித்தார் லலிதா.

தொடரும்...

# அறம் பாடுதல் என்றால்...



காஞ்சியை ஆட்சி செய்தவர் மூன்றாம் நந்தி வர்ம பல்லவன். இவரது காலம் கி. பி. 825 முதல் 850 வரை. இவரது மாற்றாந்தாய்க்குப் பிறந்தவர் நால்வர். அரசுரிமை வாரிசுப்போரில் நந்தி வர்மன் அந்த நால்வரையும் வென்று விரட்டிவிட்டார். அவர்களுள் ஒருவர் வாழ்க்கையை வெறுத்து துறவு பூண்டுவிட்டார். அவர் அறம் வைத்து செய்யுள் இயற்றுவதிலும், பாடுவதிலும் வல்லவர். அவர் மன்னன் நந்தி வர்மனைப் புகழ்வது போல் ஆனால் இடையிடயே வசைக் குறிப்புகள் வைத்து அறம் பாடி இயற்றியதுதான் "நந்திக் கலம்பகம்" எனும் நூல். கணிகை ஒருத்தி மூலம் இப்பாடலைக் கேட்ட அமைச்சர், மன்னனின் சிறப்பைப் புகழ்ந்துரைக்கும் இப்பாடல் பற்றி மன்னரிடம் தெரிவித்தார். மன்னர் அப்பாடலை இயற்றிய துறவியை அழைத்து பாடச்சொ ன்னார்.

பாடலின் அமுதத் தமிழ் சுவையில் மயங்கிய மன்னர் முழுப் பாடலையும் பாடும்படிப் பணித்தார். இப்போது துறவி தான் யார் என்பதை வெளிப்படுத்தினார். பின்னர் நான் பாடும் பாடல் உனக்கு அழிவைத் தரலாம் என்றார் துறவி. பாடலின் சுவையில் முழுவதும் கிறங்கிபோன மன்னர், பரவாயில்லை பாடு என்றார். பின் துறவி அறம் பாடும் முறையையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் விளக்கினார். அதாவது...........

பச்சை ஓலைகளால் நூறு பந்தல்கள் அமைத்து மன்னர் அரச கோலத்துடன் பந்தலின் கீழமர்ந்து பாடலைக் கேட்க வேண்டும். ஒரு பாடல் முடிந்தவுடன் அப்பந்தல் எரிந்து சாம்பலாகும். அடுத்த பாடலுக்கு மன்னர் அடுத்த பந்தலின் கீழ் அமர வேண்டும்.



அடுத்த பாடல் முடியவும் அப்பந்தல் எரிந்துவிடும். இப்படியே ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு பந்தல் சாம்பலாகும். இறுதிப் பாடல் பாடும் முன் கடைசிப் பந்தலில் விறகுகள் அடுக்கி சிதையில் மன்னர் படுத்துக் கொள்ள வேண்டும். பாட்டு முடிந்ததும் விறகிலும் மன்னர் உடலிலும் தீப் பற்றிக்கொள்ளும். இதற்கு சம்மதமா என்று துறவி கேட்டார். தமிழ்ப் பாடல் மீது பெரும் காதல் கொண்டிருந்த மன்னர் நந்தி வர்மன் அதற்கு ஒப்புக்கொண்டார். இறுதிப் பாடல் வரை கேட்டு முடித்த மன்னர் உயிர் துறந்தார். இது தமிழின் மீது அடங்காக் காதல் கொண்ட மன்னர் ஒருவரின் கதை என்று சரித்திரம் சொல்கிறது. புகழ் மொழிபோல் தோன்றக் கூடியதும், இடையிடையே வசைச் சொற்கள் கொண்டதுமான நயம் மிக்க நூல் நந்திக் கலம்பகம்.

உதாரணம் :

வானுறு மதியை
அடைந்ததுன் வதனம்.
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி.
கற்பகம் அடைந்ததுன்
கரங்கள்.
தேனுறு மலராள் அரியிடம்
புகுந்தாள்.
செந்தழல் அடைந்ததுன்
தேகம்.
நானும் என் கலியும்
எவ்விடம் புகுவேம்?
நந்தியே! நந்தயாபரனே!!
புலவரைச் புறங் கண்ட
புகழ்சேர் கோவே!
பூவலயாந் தனிற் கரியாய்
நின்ற மன்னா!!

கரி என்பதற்கு சான்று எனப் பொருள் கொண்டு, இவ்வுலகுக்கு சான்றாக விளங்குபவனே என்பது நேர் உரை. ஆனால் இதில் எரிந்து கரியாய் சாம்பலாய்ப் போகும் அரசே என்பது வசையாய் மறைந்துள்ளது. வார்த்தைகளின் வலிமையையும், அதற்கு மக்கள் கொடுத்த முக்கியத்துவமும் மகத்தானது.



P.கணபதி
பாளையங்கோட்டை.

# தினம் ஒரு தலைவர்கள் சுசேதா கிருபளானி வரலாறு

சுசேதா கிருபளானி 25 ஜூன் 1908 1 டிசம்பர் 1974 ஒரு இந்திய அரசியல்வாதி மற்றும் சுதந்திர ஆர்வலர் ஆவார் . அவர் இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சராகவும் , 1963 முதல் 1967 வரை உத்தரபிரதேச அரசாங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார் .

ஆரம்ப கால வாழ்க்கை
அவர் பஞ்சாபின் இப்போது ஹரியானாவில் உள்ளது) அம்பாலாவில் ஒரு பெங்காலி பிராஹ்ம குடும்பத்தில் பிறந்தார் . அவரது தந்தை சுரேந்திரநாத் மஜூம்தார், ஒரு மருத்துவ அதிகாரியாகப் பணிபுரிந்தார் , அந்த வேலைக்கு பல இடமாற்றங்கள் தேவைப்பட்டன. இதன் விளைவாக, அவர் பல பள்ளிகளில் பயின்றார் , அவரது இறுதிப் பட்டம் டெல்லியில் உள்ள செயிண்ட் ஸ்டீபன் கல்லூரியில் வரலாற்றில் முதுகலைப் பட்டம் ஆகும் .

நாட்டின் சூழல் தேசியவாத உணர்வுகளால் சூழப்பட்டு , சுதந்திரப் போராட்டம் உத்வேகம் பெற்று வந்த காலம் அது.
அவள் ஒரு கூச்ச சுபாவமுள்ள குழந்தை, தன் தோற்றம் மற்றும் அறிவுத்திறன் குறித்து சுயநினைவு கொண்டவள் என்று அவள் தனது "முடிக்கப்படாத சுயசரிதை" புத்தகத்தில் சுட்டிக்காட்டுகிறாள் . அவள் வளர்ந்த வயதும் அவள் எதிர்கொண்ட சூழ்நிலைகளும் தான் அவளுடைய ஆளுமையை வடிவமைத்தன. 10 வயதில், தானும் தன் உடன்பிறந்தவர்களும் ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி தங்கள் தந்தையும் அவரது நண்பர்களும் பேசுவதைக் கேட்டதாக சுசேதா விவரிக்கிறார். இது அவர்களை மிகவும் கோபப்படுத்தியது, அவர்கள் விளையாடிய சில ஆங்கிலோ-இந்திய குழந்தைகள் மீது , அவர்களைப் பெயர் சொல்லி தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் அரசியலமைப்பு வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிவதற்கு முன்பு, இந்திரபிரஸ்தா கல்லூரி மற்றும் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் படித்தார் . 1936 ஆம் ஆண்டில், இந்திய தேசிய காங்கிரஸின் முக்கிய நபரான ஜே.பி. கிருபளானியை மணந்தார் , அவர் தன்னை விட இருபது வயது மூத்தவர். இந்த திருமணத்தை இரு குடும்பத்தினரும், காந்தியும் எதிர்த்தனர் , இருப்பினும் அவர் இறுதியில் விட்டுக்கொடுத்தார்.

சுதந்திர இயக்கம் மற்றும் சுதந்திரம்
அவரது சமகாலத்தவர்களான அருணா ஆசஃப் அலி மற்றும் உஷா மேத்தாவைப் போலவே, அவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது முன்னணியில் வந்து ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். பின்னர் பிரிவினை கலவரங்களின் போது மகாத்மா காந்தியுடன் நெருக்கமாகப் பணியாற்றினார். 1946 இல் அவர் அவருடன் நோகாலிக்குச் சென்றார். இந்திய அரசியலமைப்பு சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பெண்களில் இவரும் ஒருவர். கான்பூர் தொகுதியிலிருந்து உத்தரபிரதேச மாநிலத்தின் முதல் பெண் முதல்வராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார், மேலும் இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய துணைக்குழுவின் ஒரு பகுதியாகவும் இருந்தார் . இந்திய அரசியலமைப்புக்கான சாசனத்தை வகுத்த துணைக்குழுவின் ஒரு பகுதியாக அவர் ஆனார். ஆகஸ்ட் 14, 1947 அன்று, நேரு தனது புகழ்பெற்ற " டெஸ்டினியுடன் ட்ரைஸ்ட் "






உரையை நிகழ்த்துவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, இவர் அரசியலமைப்பு சபையின் சுதந்திர அமர்வில் வந்தே மாதரம் பாடலைப் பாடினார் . 1940 இல் நிறுவப்பட்ட அகில இந்திய மகிளா காங்கிரஸின் நிறுவனர் ஆவார்.

சுதந்திரத்திற்குப் பிறகு

1949 ஆம் ஆண்டில் (இடமிருந்து வலமாக) உல்லா லிண்ட்ஸ்ட்ரோம் , பார்பரா கோட்டை , கெய்ரின் வில்சன் மற்றும் எலினோர் ரூஸ்வெல்ட் ஆகியோருடன் கிருபளானி .

சுதந்திரத்திற்குப் பிறகும், அவர் அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டார். 1952 ஆம் ஆண்டு நடந்த முதல் மக்களவைத் தேர்தலில், அவர் புது தில்லியில் இருந்து KMPP டிக்கெட்டில் போட்டியிட்டார் : ஒரு வருடம் முன்பு தனது கணவர் நிறுவிய குறுகிய காலக் கட்சியில் சேர்ந்தார். அவர் காங்கிரஸ் வேட்பாளர் மன்மோகினி சாகலைத் தோற்கடித்தார் . ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் அதே தொகுதியிலிருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் இந்த முறை காங்கிரஸ் வேட்பாளராக. அவர் கடைசியாக 1967 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் உள்ள கோண்டா தொகுதியிலிருந்து மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் . இதற்கிடையில், அவர் உத்தரபிரதேச சட்டமன்ற உறுப்பினராகவும் ஆனார் . 1960 முதல் 1963 வரை, அவர் உ.பி. அரசாங்கத்தில் தொழிலாளர், சமூக மேம்பாடு மற்றும் தொழில்துறை அமைச்சராக பணியாற்றினார். அக்டோபர் 1963 இல், அவர் உத்தரபிரதேசத்தின் முதலமைச்சரானார் , எந்தவொரு இந்திய மாநிலத்திலும் அந்தப் பதவியை வகித்த முதல் பெண்மணி. அவரது பதவிக் காலத்தின் சிறப்பம்சம் மாநில ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை உறுதியாகக் கையாண்டது. மாநில ஊழியர்களின் இந்த முதல் வேலைநிறுத்தம் 62 நாட்கள் தொடர்ந்தது. ஊழியர்களின் தலைவர்கள் சமரசம் செய்ய ஒப்புக்கொண்டபோதுதான் அவர் விலகினார். ஊதிய உயர்வுக்கான அவர்களின் கோரிக்கையை நிராகரிப்பதன் மூலம் கிருபளானி ஒரு உறுதியான நிர்வாகியாக தனது நற்பெயரைத் தக்க வைத்துக் கொண்டார். நிர்வாக முடிவுகள் மற்றும் கட்சி அமைப்பில் மூத்த தலைவர் நிர்மல் சந்திர சதுர்வேதி, எம்.எல்.சி., அவருக்கு ஆதரவளித்தார்.

1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் பிளவுபட்டபோது, மொரார்ஜி தேசாய் பிரிவுடன் சேர்ந்து கட்சியை விட்டு வெளியேறி NCO ஐ உருவாக்கினார். 1971 தேர்தலில் பைசாபாத் (லோக்சபா தொகுதி) தொகுதியில் NCO வேட்பாளராக அவர் தோல்வியடைந்தார் . 1971 இல் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற அவர் 1974 இல் இறக்கும் வரை தனிமையில் இருந்தார்.

# ராமேசுவரம் கோவிலில் நடிகர் பிரபு சாமி தரிசனம்




நடிகர் பிரபுவுடன் ஏராளமான பக்தர்கள், கோவில் பணியாளர்கள் ஆர்வமுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

ராமேசுவரம் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.

ராமேசுவரம் கோவிலில் சாமி தரிசனம் செய்வதற்காக நடிகர் பிரபு தனது மனைவி புனிதாவுடன் வந்தார். அவர்கள் கோவிலில் விநாயகர், சாமி, அம்பாள், ஆஞ்சநேயர் உள்ளிட்ட சன்னதிகளுக்கு சென்று தரிசனம் செய்தனர். அவருடன் சிவாஜி மன்ற நிர்வாகிகள் தேவதாஸ், பால்ராஜ், சீனி, கவுன்சிலர் முகேஷ் குமார், கோவில் பேஷ்கார் கமலநாதன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். கோவிலுக்கு வந்த நடிகர் பிரபுவுடன் ஏராளமான பக்தர்கள், கோவில் பணியாளர்கள் ஆர்வமுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

தரிசனம் முடிந்து வெளியே வந்த பிரபு நிருபர்களிடம் கூறியதாவது:- நடிகர் சூர்யாவின் தம்பி கார்த்தி நடிக்கும் மார்ஷல் திரைப்பட சூட்டிங் கீழக்கரையில் நடக்கிறது. அந்த படத்தில் நடிப்பதற்காக ராமநாதபுரம் வந்துள்ளேன். இத்திரைப்பட இயக்குனரும் ராமேசுவரத்தை சேர்ந்தவர்தான். ராமேசுவரம் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# Bigg Boss Season 9: போட்டியாளராக நுழைந்த 'அகோரி' கலையரசன்



நடிகர் விஜய் சேதுபதி தொகுத்து வழங்கும் பிக்பாஸ் சீசன் 9 நாளை முதல் தொடங்குகிறது. இதற்கான ஏற்பாடுகள் பிரம்மாண்டமாக செய்யப்பட்டுள்ளன.

சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் ரியாலிட்டி நிகழ்ச்சியான பிக்பாஸ் பல்வேறு மொழிகளிலும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

பிக்பாஸ் சீசன் 9 தமிழில் இன்று முதல் தொடங்கும் நிலையில், நேற்று போட்டியாளர்களின் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது.

15 போட்டியாளர்கள் பல்வேறு டாஸ்க்குகளுடன் 100 நாட்கள் தங்கியிருப்பார்கள். டாஸ்க்குகளை கடந்து வெற்றியாளர்கள் இறுதியில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இந்த சீசனில் புதிய மாற்றங்களுடன், நிகழ்ச்சியை கூடுதலாக விறுவிறுப்பாக்கும் வகையில் பல்வேறு அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இன்று நடைபெற்ற போட்டியாளர்கள் அறிமுக நிகழ்ச்சியில் ஒவ்வொருவரையாக விஜய் சேதுபதி அழைத்து அறிமுகம் செய்து பிரம்மாண்ட வீட்டிற்குள் அனுப்பி வைத்தார்.

இதில், தேனி மாவட்டத்தை சேர்ந்த 'அகோரி' கலையரசன் போட்டியாளராக அறிமுகம் செய்யப்பட்டார்.

தேனி மாவட்டம் போடி புதுக்காலனி அன்னை இந்திரா ஆதரவற்றோர் இல்லத்தில் வாழ்ந்து வந்தவர் கலையரசன். இவர் இங்குள்ள சந்தனமாரியம்மன் ஆசியால் அருள்வாக்கு கூறும் சித்தராக மாறி தற்போது அகோரி சாமியாராக உருவெடுத்துள்ளார்.

காசிக்கு சென்று அங்குள்ள பெரியவர்களிடம் தீட்சை பெற்று அகோரியாக மாறியதாக அவர் கூறுகிறார்.

இவருக்கு திருமணமாகி 2 மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். இவருக்கும் அவரது மனைவிக்கும் இடையே நடந்த சண்டை இணையத்தில் பேசுபொருளான நிலையில், தற்போது பிக்பாஸ் வீட்டிற்குள் கலையரசன் நுழைந்துள்ளார்.

## போட்டியாளராக நுழைந்த கேரளா மாடல் யார் இந்த திருநங்கை அப்சரா சிஜே?



சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் ரியாலிட்டி நிகழ்ச்சியான பிக்பாஸ் பல்வேறு மொழிகளிலும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

பிக்பாஸ் சீசன் 9 தமிழில் இன்று முதல் தொடங்கும் நிலையில், நேற்று போட்டியாளர்களின் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது.

15 போட்டியாளர்கள் பல்வேறு டாஸ்க்குகளுடன் 100 நாட்கள் தங்கியிருப்பார்கள். டாஸ்க்குகளை கடந்து வெற்றியாளர்கள் இறுதியில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இந்த சீசனில் புதிய மாற்றங்களுடன், நிகழ்ச்சியை கூடுதலாக விறுவிறுப்பாக்கும் வகையில் பல்வேறு அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இன்று நடைபெற்ற போட்டியாளர்கள் அறிமுக நிகழ்ச்சியில் ஒவ்வொருவரையாக விஜய் சேதுபதி அழைத்து அறிமுகம் செய்து பிரம்மாண்ட வீட்டிற்குள் அனுப்பி வைத்தார்.

இதில், கேரள மாநிலம் திருவனந்தபுரத்தை சேர்ந்த திருநங்கையான அப்சரா சிஜே போட்டியாளராக அறிமுகம் செய்யப்பட்டார்.

மாற்று பாலினத்தவர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து செயல்பட்டுவரும் அப்சரா சிஜே மாடலிங் துறையிலும் தற்போது அசத்தி வருகிறார்.

மாடலிங் தவிர, சினிமாவிலும் தனது முத்திரையைப் பதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், அப்சரா சிஜே நடிப்பிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

இதற்கு முன்னர் நமீதா மாரிமுத்து, ஷிவின் ஆகிய திருநங்கை போட்டியாளர்கள் பிக்பாஸ் போட்டியில் கலந்துகொண்ட நிலையில், இந்த முறை திருநங்கை போட்டியாளராக அப்சரா சிஜே களமிறங்கி இருக்கிறார்.



விஜய் டிவியில் இருந்த சிவாங்கி தற்போது சன் டிவியின் டாப் குக் டூப் குக் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வருகிறார்.

தற்போது அவர் விருது விழா ஒன்றுக்கு செம கவர்ச்சியாக வந்திருக்கும் ஸ்டில்களை பாருங்க.



வீரம் உள்ளிட்ட பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் யுவினா பார்த்தவி. அவர் வளர்ந்துவிட்ட நிலையில் ஹீரோயினாக தற்போது நடித்து வருகிறார்.

அவரது லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்கள் இதோ.

# நம் வேர்தேடி பயணிப்போம்... 'இட்லி கடை' படம் பார்த்து பாராட்டிய சீமான்



தனுஷ் இயக்கி நடித்துள்ள இட்லி கடை படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இட்லி கடை படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

தனுஷ் இயக்கத்தில் 4-வது படமாக 'இட்லி கடை' உருவாகியுள்ளது. இது தனுஷின் 52-வது திரைப்படமாகும்.


தனுஷ் இயக்கி நடித்துள்ள இத்திரைப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இந்த படத்தினை டான் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

இப்படத்தில் நித்யா மேனன், ஷாலினி பாண்டே, அருண் விஜய், சத்யராஜ், ராஜ்கிரண் உள்ளிட்டோர் நடித்து உள்ளனர். 'இட்லி கடை' நேற்று முதல் திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இந்நிலையில், இட்லிக்கடை திரைப்படத்தை பாராட்டி பேசிய சீமான், "வாழ்வதற்குதான் பணம் தேவை. பணமே வாழ்க்கை இல்லை. தன் இட்லி கடை படத்தில், நிறைய செய்திகளை கவித்துவமாக, உணர்ச்சி குவியலாக சொல்லியிருக்கிறார் தம்பி தனுஷ், இளம் வயதில் முதிர்ந்த படைப்பாற்றல் திறன் கொண்டுள்ளார். இப்படத்தை பார்த்தபின், நாம் எல்லோரும் நம் வேர்தேடி பயணிப்போம்" என்று தெரிவித்தார்.

# காந்தாரா படத்தின் பின்னால் உள்ள உண்மை சம்பவம் - ரிஷப் ஷெட்டி சொன்ன சீக்ரெட்



2022-ம் ஆண்டு கன்னடத்தில் வெளியாகி தென்னிந்திய மொழிகளில் வரவேற்பை பெற்ற படம் 'காந்தாரா'. இப்படத்தின் இரண்டாம் பாகமாக 'காந்தாரா சாப்டர்1' கடந்த அக்டோபர் 2 வெளியாகி வரவேற்பை பெற்று வருகிறது.

இந்நிலையில் சமீபத்திய நேர்காணலில் பேசிய படத்தின் இயக்குனரும் கதாநாயகனுமான ரிஷப் ஷெட்டி, 'காந்தாரா' உருவாக்கத்தின் பின்னணியில் உள்ள கதையை பகிர்ந்து கொண்டார்.

அவர் கூறியதாவது, "சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு, எங்கள் கிராமத்தில் ஒரு விவசாயிக்கும் வன அதிகாரிக்கும் இடையே விவசாய நிலம் தொடர்பாக ஒரு பெரிய மோதல் ஏற்பட்டது. அதை நான் இரண்டு பேருக்கு இடையிலான சண்டையாகப் பார்க்கவில்லை.

அதை இயற்கைக்கும் மனித தேவைகளுக்கும் இடையிலான மோதலாகப் பார்த்தேன். 'காந்தாரா' கதையின் விதை அந்த யோசனையிலிருந்துதான் விதைக்கப்பட்டது. விவசாயத்தைச் சுற்றி நமது கலாச்சாரம் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பதைப் பற்றி நான் சிந்திக்கத் தொடங்கினேன்.

காந்தாரா படத்தில் எல்லோரும் கிளைமாக்ஸைப் பற்றிப் பேசுகிறார்கள். அந்தக் காட்சிகளை நான் கற்பனை செய்து பார்த்தேன். எனக்குப் பின்னால் ஏதோ இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி இருந்து அந்தக் காட்சிகளை எழுத வைத்தது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

படைப்பு சாமானியர்கள் கூட புரிந்துகொள்ள எளிதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது பிராந்திய எல்லைகளுக்கு அப்பால் அனைவரையும் சென்றடையும். காந்தாரா மீதான எனது நம்பிக்கை மீண்டும் ஒருமுறை உண்மையாகிவிட்டது" என்று அவர் கூறினார்.

# சென்னையில் ஸ்ட்ரீட் ரேசிங் நடத்தியதற்கு நன்றிக்கடன்..!- மனம் திறந்த அஜித்




நடிகரும், ரேசருமான அஜித் குமார் சர்வதேச போட்டியின் போது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) Logo-வை, கார்- ரேஸிங் உபகரணங்கள் மற்றும் ஜெர்சியில் பயன்படுத்தியதற்காக, தமிழ்நாடு அரசு சார்பில் நன்றி தெரிவித்து மகிழ்கிறோம் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவரது எக்ஸ் தள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து நடிகரும், ரேசருமான அஜித் குமார் மனம் திறந்துள்ளார்.

அவர் கூறியதாவது:-

இந்தியாவின் முதல் ஸ்ட்ரீட் ரேசிங்கை தமிழ்நாடு அரசு சென்னையில் நடத்தியது மோட்டார் ஸ்போர்ட்ஸ் விளையாட்டுக்கே மிகப்பெரிய ஊக்கமாக அமைந்தது.

ஒரு மோட்டார் ஸ்போர்ட்ஸ் ரசிகனாக அதற்கு நன்றிக்கடன் செலுத்தும் விதமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) லோகோவை பயன்படுத்துவதற்கான அனுமதியை நான் அரசிடம் கேட்டுப் பெற்றேன்.

அவர்கள் எனக்கு ஸ்பான்சர் செய்யவில்லை, யாரிடமும் நான் ஸ்பான்சர்ஷிப் கேட்பதும் இல்லை. இந்த விளையாட்டு மட்டுமல்ல அனைத்து விளையாட்டுகளுக்கும் பல நல்ல விஷயங்களை SDAT செய்து வருகிறது.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## DISTRIBUTORS WANTED
PREMIUM WATER SODA & JUICE

250ml Bottle @ Just Rs 3/-




87789 30420

---

## JOB VACANCY
**Kumbhat Holographics**

- Flexo Printing Machine Operator - 2 Nos.
- Assistants Flexo Operator - 3 Nos.
- Slitting Machine Operator - 2 Nos.
- Flatbed Die - Cutting Operator - 2 Nos.
- Rotary Die - Cutting Operator - 2 Nos.
- Quality Check With Excel Knowledge - 2 Nos.
- Helpers (Below 30 yrs) - 5 Nos.

Experience: Minimum 3 years
Gender: Male/ Female
Date: 29.09.2025 to 11.10.2025
Time: 10.00 Am - 3.00 Pm
Place: KUMBHAT HOLOGRAPHICS
Plot No: 22A, 7th Street, Phase-3, Ambattur Industrial Estate (North), Chennai - 600098
Contact: 98844 55532 / 86675 66980

---

A creative CBSE school with a difference

## PHYSICAL EDUCATION TEACHERS

Basket Ball, Table Tennis and Kabaddi
கூடைப் பந்து, மேசைப் பந்து மற்றும் கபடி

விளையாட்டில் சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

Apply with your photo
புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெண்களுக்கு மட்டும் தங்கும் இடம் அளிக்கப்படும்.

kavibharathi@gmail.com

KAVI BHARATHI VIDYALAYA
கவி பாரதி வித்யாலயா
#792, T.H. Road
Thiruvottriyur, Chennai - 600019.

---

## TVS 2 Wheeler Showroom @ Chennai
Req. Exp.

- Sales Manager
- Sales Executives (Male / Female)
- Service Advisors
- Technicians
- PDI Technicians
- Floor In-Charge
- Spare Parts In-Charge

Free Accommodation*/Attractive Salary
ESI/PF/Incentives/Annual Bonus

Ct: 73051 87222

---

## அடகு / ஏல நகை மீட்க.விற்க
மார்க்கெட் விலையை விட மிக அதிக விலை

பணம் தேவையா

## மோனிகா கோல்டு
1070, கிராஸ்கட் 4 வது வீதி
காந்திபுரம், கோவை-12
98422 39186
0422 2481179

---

## SUKDHA INDUSTRIES PVT LTD
Mullipakkam Junction, Periya Irumbedu
Chengalpet -603 105.

Auto Corrugated Box Manufacturing Unit Requires

- GENERAL MANAGER (Age 50-60 yrs) Min 25yrs Exp. in administration
- MARKETING MANAGER
- PRODUCTION & PLANNING MANAGER
- CIVIL SUPERVISOR (Diploma in Civil Engineering)

9840 44 5294

Apply Immediately to :
sukdhaindustries@gmail.com

---

enmac 25 years

A leading South India based MEP Engineering company requires

## HVAC Site Engineer
Qlfn : Diploma or BE
Exp : 2 Years Plus
Salary : Best in the Industry

Ph: 73388 42074
www.enmac.in

---

## WANTED
REQUIRED OFFICE ASSISTANT WITH TALLY KNOWLEDGE FOR A OFFICE IN CHETPET, CHENNAI - 31

ANY BASIC DEGREE

WITH 1 YEAR WORK EXPERIENCE WITH GOOD COMMUNICATION SKILLS

SALARY: 15K ONWARDS

Email: hrgp12@gmail.com

---

## டி.ஜே.எஸ். கல்விக் குழுமம்
பெருவாயல், கவரைப்பேட்டை
கும்மிடிப்பூண்டி
திருவள்ளூர் மாவட்டம்

பள்ளி மற்றும் கல்லூரி பேருந்துகளை இயக்க அனுபவம் உள்ள

ஓட்டுநர்கள் தேவை

வழித்தடம் :
சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டம்

வயது : 40 முதல் 60 வரை

அனுபவத்திற்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்

தொடர்புக்கு : 9788877774
9486183985/ 7373730820

---

## தனியார் கடன் வசதி
- கோவை எல்லைக்குட்பட்ட வீடு, R.C.C. & ஓட்டு வீடு, சிமிண்ட் சீட் வீடு, காலிமனை, இடம், பூமி, தோப்பு போன்ற சொத்து பத்திரங்களின் பெயரில் கடன் வசதி செய்து தரப்படும்.

10 L முதல்...

- பத்திரம், மூலபத்திரங்கள், EC போன்ற தேவையான அனைத்து ஆவணங்களும் தயாராக இருந்தால் விரைவாக கடன் வசதி செய்து தரப்படும்.
- புதிய Loan Sanction Letter - ன் பெயரில் ஏற்கனவே வங்கியில் உள்ள கடன் பத்திரத்தை மீட்க கடன் வசதி செய்து தரப்படும்.
- சிறு/குறு உடனடி கடன் வசதி (Cash Loan) (10000 முதல் 50000) வரை செய்து தரப்படும்.
- DSA & ஏஜெண்டுகளும் அணுகலாம்.

Ph : 99436 33559

VV FINSERVE
No.40, First floor, SVL Complex, Olymbus, Ramanathapuram, Coimbatore - 641045.

---

## WANTED
Experienced
MARKETING EXECUTIVE
required immediately for a reputed Interior Firm operating in Chennai

90925-66293

-CKNB-

---

A Chemical Manufacturing company at MM Nagar REQUIRES

1. SENIOR MANAGER
BE Chemical / Mechanical, 8-10 years experience in chemical process industry
2. MANAGEMENT TRAINEES
Degree/ Diploma in Chemical/ Mechanical Engg.
3. ACCOUNTANT - B.Com with Tally knowledge

Apply to
nuca1610@gmail.com

---

## WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.

Sal.23,000/-

161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

---

## டிரைவர் தேவை
Chairman க்கு Automatic கார் ஓட்ட அனுபவமுள்ள டிரைவர் தேவை

98414 41844
93455 31270

---

## கடன் வசதி
வீடு, காலி இடம் மற்றும் சொத்தின் மீது அடமானக் கடன் (வட்டி 1 ரூபாய் முதல்)

விக்டரி ஏஜென்ஸி,
129,பரணி காம்ப்ளக்ஸ், தடாகம் ரோடு, இடையர்பாளையம், கோவை 25

Call: 89 40 40 40 70

MMA

---

## repute
Requires to Market Water & FMCG Products

MARKETING MANAGER
Male, Age: 40 Yrs, Should have 5-10 Yrs FMCG Field Exp & Lead Sales Team.

SALES EXE / OFFICER
Male, Age: 20 - 35 years
FMCG Field Sales Experience Must.

GOOD SALARY + INC + ALLOWANCE

Send bio-data thru
Ct. M. IBRAHIM
Whatsapp 9094005900
Email: gm-fmcg@repute.in

---

## ACCOUNTS ASSISTANT
Tally & MS Office knowledge

## OFFICE ASSISTANT
With 2 wheeler, MS Office knowledge

ARCOT MILK TRANSPORT OPERATORS
1, 54th St, 2nd flr, 9th Avenue, Ashok Nagar, Ch-83
Ph: 9841674632 / 9841038333
revaidhyanathan@gmail.com

---

கோவூர் அருகாமையில் உள்ள தொழிற்கூடத்திற்கு

## BILL COLLECTOR
தேவை உடனே அணுகவும்

CALL @
89258 18582

---

## ஆட்கள் தேவை
பிரபலமான MNC கம்பெனிக்கு

CNC-VMC ஆப்ரேட்டர்
டர்னிங் ஆப்ரேட்டர்
புரோக்கிராம்மர் & செட்டர்

பணிபுரியும் இடம் : காஞ்சிபுரம்

7010776807

---

## ஸ்ரீ வீராஸ் கிரியேஷன்ஸ்
பல ஜவுளிக்கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்

எம்.சி. ரோடு, வண்ணாரப்பேட்டை
சென்னை - 600 021.
போன் : 25901771-74

www.facebook.com/sriveerascreations www.sriveeras.com

---

URGENTLY REQUIRED

- AC DUCTMAN
- AC TECHNICIAN
- CHILLER ELECTRICIAN
- COPPER PIPE BRAZING
- PIPE FITTER
- PIPE WELDER
- MECHNICAL FITTER
- HVAC PROJECT MANAGER
- MEP HELPER

Last drawn Salary 20% hike

RAPID HVAC SOLUTIONS PVT LTD
Poonamalle, Chennai 600123

enquiry@rapidhvac.co
vivekpandian@rapidhvac.co
90439 49587,78458 29587

---

SRM

தங்கி பணிபுரிய

## பெண்கள் தேவை
வயது : 25 முதல் 45 வரை

கார்ப்பரேட் ஹவுஸ் கீப்பிங் சூப்பர்வைசர்
சம்பளம் :ரூ. 30,000/-
கல்வித்தகுதி : Any Degree

ஹவுஸ் கீப்பிங் ஸ்டாப்
சம்பளம் :ரூ. 20,000/-
கல்வித்தகுதி : 12th Std

Call : 99400 77012
044 - 27453147

---

## ஆட்கள் தேவை
எங்கள் உணவகத்திற்கு அனுபவமுள்ள

தென் இந்திய சமையல்காரர் தேவை.

காலை உணவு/ஸ்நாக்ஸ்:
இட்லி, தோசை (பிளைன், மசாலா, ரவா), வடை (மெது வடை, மசாலா வடை), உப்புமா, பொங்கல், பேசரட்டு, பரோட்டா.

சம்பளம், உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

முகவரி:
MCN நகர் விரிவாக்கம்,
துரைப்பாக்கம், சென்னை - 97.
தொடர்புக்கு: 9500549097

---

## கடன் தேவைகளுக்கு
- ரூ.5,000 முதல் ரூ.2,00,000 வரை ஆதார், பான்கார்டு & பேங்க் பாஸ்புக் இருந்தால் ஒரே நாளில் மாத தவணை முறையில் உடனடி லோன் பெறலாம்.
- அனைத்து வகையான EMI Card / Credit Card க்கு உடனடி கடன்.
- தனிநபர் கடன், தொழிற்கடன், வாகனக்கடன், சொத்தின் பெயரில் பேங்க் & பைனான்ஸில் கடன் உதவி செய்து தரப்படும்.

EASY FINANCIAL SERVICES
97, 5th St. Ext., DEVA ANBU SELVAM COMPLEX
GANDHIPURAM, COIMBATORE - 12.
99408 50431

---

## உடனடி கடன் உதவி
QUICK PROCESS

- தனிநபர் கடன் வியாபாரக் கடன்
ஆதார் கார்டு, பேன் கார்டு போதும்
10 ஆயிரம் முதல் 2 லட்சம் வரை
ஒரே நாளில் கடன் உதவி
- சிபில் 750 மேல் இருந்தால் ஆதார் கார்டு, பேன் கார்டு போதும் 5 லட்சம் வரை உடனடி கடன்
- பென்சன்தாரர் கடன் மத்திய மாநில அரசு
- அரசு ஊழியர் & தனியார் மாத சம்பளதாரர் கடன் (சிபில் தேவையில்லை)
- வீடு, காலி இடம், சொத்துக் கடன்
- அனைத்து EMI Card (டிஜிட்டல்) மற்றும் Credit Card Swipe க்கு

உடனடி பணம்

TEJAAS CREATIONS
Near Chennai Silks, Crosscut Road
Gandhipuram, Coimbatore - 12
6385712034
முன்பணம் தேவையில்லை






### காலமெல்லாம் காத்திருப்பேன்

மௌனத்தின் நடுவே
நம்பிக்கையாய் நின்ற ஒரு
மனம்...

காத்திருக்கிறேன்...
இன்னும்
காத்துக்கொண்டிருக்கிறேன்...
இன்னும் எவ்வளவு நாள்
காத்திருப்பேன் எனக்கே
தெரியவில்லை.

ஏன் காத்திருக்கிறேன்?
உன் பதிலுக்காகவா...
உன் அழைப்புக்காகவா...
அல்லது உன்
பார்வைக்காகவா...

நீ பதில் தராவிட்டாலும்,
உன் மௌனத்தில் ஏதோ ஒரு
அர்த்தம் இருக்கிறது.
நீ அழைக்காவிட்டாலும்,
என் மனசு சிறு
குழந்தை போல உன்
கையைப் பிடித்து
நின்றுகொண்டே
இருக்கிறது.

உன் பார்வை என் மீது
படாவிட்டாலும், நீ என்னை
பார்த்துக்கொண்டுதான்
இருக்கிறாய் என நான்
நம்புகிறேன்.


மணி இல்லாத கொலுசு
போல, உன் மனசு நடந்து
கொண்டுதான் இருக்கிறது,
ஆனால் அந்த மணி ஓசை
மட்டும் கேட்கவில்லை.
வானத்தில் சூரியன்
இருந்தாலும், நிழல் போலே
நான்தான் உன்னை
தொடர்ந்து வருவேன்.

நீ விட்டு சென்றாலும்,
நீ விட்டுச் சென்றதை
உன்னிடம் கொண்டு வந்து
சேர்ப்பேன்.

நீ என்னை
சேர்க்காவிட்டாலும்—
சேர்ந்தே இருக்கிறேன்,
உன் நிழலில்...
உன் நினைவில்...
உன் மௌனத்தின்
மெல்லிய ஓசையில்...
காலமெல்லாம்
காத்திருப்பேன்



**ஜனனி அந்தோணிராஜ்**
திருச்சிராப்பள்ளி



### கவிதைக்கு அழகு !!

கவிதை என்றால் கருத்து
வேண்டும் கருத்தில்லா
கவிதை பாழ் கவிதைக்
கருத்து பயன்தர வேண்டும்
கவிப்பயனற்ற கவியும் பாழ் !!

பெண்ணழகைப் புகழ்வதே
கவியாகாது புன்னகை
மழலையைப் பாடுவதும்
கவியாகும் !!
கண்ணழகையேப் பாடுவதும்
கவியாகாது
கருத்தழகும் கவியழகுமே
நற்கவியாகும் !!

**சண்முக சுப்பிரமணியன்**
திருநெல்வேலி



### அகிம்சை

அன்பை நாளும் அவனியில்
தந்தவர்//

அறத்தை மறவாத
அகத்தைக் கொண்டவர்//

எளிமையை எண்ணத்தில்
எழிலாய் உடையவர்//

சுதந்திரக் காற்றைச்
சுவாசிக்க செய்தவர்//

வெள்ளை மனம் பிள்ளைக்
குணமுடையவர்//

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து
எழுச்சிக் கெண்டவர்//

வாய்மையே வெல்லுமென
வாய்மையுடன் இருந்தவர்//

வன்மையை விடுத்து
வண்மையை வளர்த்தவர்//

அகிம்சையே அறமென்று
என்றும் நினைத்தவர்//

**கவிஞர் மா. கணேஷ்,**
கொன்னையூர்.

### பிடிவாதம் !

வாதம் செய்வது திறமை !
பிடிவாதம் செய்வது மடமை !

கை கால்களை
முடக்கும் வாதம் !
மூளையை முடக்கும்
பிடிவாதம் !

வாதத்தை விட கொடிய
நோய் வேண்டாம் பிடிவாதம்!

பெரிய மனிதர்களின்
வீழ்ச்சிக்கு காரணம்
பிடிவாதம் !

விட்டுக் கொடுத்தால்
வாழ்க்கை சிறக்கும் !
பிடிவாதம் ! வாழ்வை
அழிக்கும் !

**கவிஞர் இரா .இரவி .**



### ஹைக்கூ

நானே பெரியவன்
நினைக்கும்போதே
மிகச் சிறியவனாவாய்

சிந்திச் சென்றது
குப்பையோடு மணத்தையும்
குப்பைவண்டி

காசாக்கலாம் குப்பையையும்
பெயர் எடுத்துவிட்டால்

மணத்தோடு அவள் மனமும்
பரப்பியது மலர்ந்த மலர்

ஒளிப் பாய்ச்சியது
ஓடியது இருள் விளக்கு

நீண்ட பிரிவிக்குபின்
சந்திப்பு கூடுதல் இன்பம்

வெட்கப் பட வேண்டும்
வல்லரசுகள்
சோமாலியா சோகம்.

**கவிஞர் இரா .இரவி**

### உலகம்

எனக்கான நியாயங்களை
நீயே உருவாக்குகிறாய்
எனக்கான முகமூடிகளை
நீயே தயாரிக்கிறாா்
எனக்கான எண்ணங்கள்
உன்னாலேயே
உருவாக்கப்படுகின்றன
என்னுடைய செயல்கள்
உன்னைச் சுற்றியே
சுழல்கிறது
உலகே!
நான் நானாக
இருப்பது
என்று?



**ஜி ஏ பிரபா**
கோவை

### ஆணவம் !

அழிவுக்கு அறிகுறி
வீழ்ச்சிக்கு அறிகுறி
ஆணவம் !

என்னைத் தவிர யாராலும்
முடியாது ஆணவம் !

எனக்கு நிகர் எவரும்
இல்லை ஆணவம் !

நானே பெரியவன் மற்றவர்
சிறியவர்கள் ஆணவம் !

எல்லாம் தெரியும்
எனக்கு ஆணவம் !

எதுவும் தெரியாது
மற்றவருக்கு ஆணவம் !

ஆளப் பிறந்தவன்
நான் ஆணவம் !

நானே பணக்காரன்
மற்றவர் ஏழை ஆணவம் !

நானே அறிவாளி
மற்றவர் முட்டாள் ஆணவம் !


நானே வெல்வேன்
மற்றவர் தோற்பார்ஆணவம் !

என்னைவெல்ல எவனும்
இல்லை ஆணவம் !

மனதில் தோன்றும்
கொடிய அரவம் ஆணவம் !

அழிக்கா விட்டால்
அழித்துவிடும் ஆணவம் !

**கவிஞர் இரா .இரவி**



### பார்க்க பார்க்க ஆனந்தம்

பார்க்க பார்க்க ஆனந்தம்,
குயில் பாடும் பாடல்,
பூக்களின் வாசம் பரவி
உள்ளத்தை கொள்ளை
கொள்ளும், அம்புலியின்
ஒளி நனைத்து, நெஞ்சம்
நிறையும். தென்றலின் ஓசை
கேட்டவுடன் கனவுகள்
வருகிறதே. கடலின்
அலை சிரித்து, கரையை
தொட்டு செல்கிறதே,
புள்ளினங்களின் குரல்
ஒலித்து, காலை பொழுதை
அழகாக்குதே
மலர்கள் போல புன்னகை,
வாழ்க்கையை அலங்கரிக்க,
விண்மீன் போல பிரகாசம்,
ராத்திரியில் வர
ஒவ்வொரு காட்சியும்
நோக்குகையில் பரவசமே ,
பார்க்க பார்க்க ஆனந்தம்,
இதயத்தில்
நிறையும்
மகிழ்ச்சி என்ற
மகத்துவம்




**உஷா முத்துராமன்**



உன்னை தவிர
வேறெங்குச்
சரணாங்கதி
அடைவேன்
இப்பிரபஞ்சத்தில்
யாதும் நீயே!



**லி.நௌஷாத் கான்**



### ஹைக்கூ !


அன்று இங்கிலாந்திடம்
இன்று உலக நாடுகளிடம்
இந்தியா !

தீமையிலும் நன்மை
தெரியவில்லை தொடர்கள்
மின்தடை !

தாலி ஆசிர்வாதம்
மணவிழாவில்
கையில் பிடித்தபடி !

வந்தது ஒளி மின்சாரமின்றி
மின்னல் !

கண்
சிமிட்டுகின்றாள்
வானிலிருந்து
நட்சத்திரம் !



**கவிஞர் இரா .இரவி !**

### உரிமையாய் மட்டும் வாழ்

காம்பை விட்டு உதிர்ந்த பூ வாழ்வதில்லை...!
தேவையில்லாத சினம் அன்பை பெறுவதில்லை...!

கிளையும், இலையும் இல்லாத மரம் காற்றுக்கு
அஞ்சுவதில்லை....!

அலை பல முறை தோற்றாலும் அதன் முயற்ச்சியை
விடுவதில்லை....!

நகத்தை எத்தனை முறை வெட்டினாலும் அது வளர்ச்சி
நின்றதில்லை...!




ஆசையால்தான் கவிஞன் சொன்னான்
கடமையாய் செய்...
பலனை எதிர்பார்க்காதே....!

எதுவும் எதுக்கும் சொந்தமில்லை... எதுவும்
நமக்கு தேவையில்லை... உணர்ந்து வாழ்...
உன் பெயரும், புகழுகலும் செல்லும் மேல்....!!

**பொன்.கருணா,** நவி மும்பை

### தங்கமும் தரித்திரம் தரும்!!



தங்கம் அணிந்தால் அங்கம் அழகு
தங்கம் அணிந்திட விதிமுறை யுண்டு !!

தங்கம் என்பது லக்ஷமிதேவி அம்சம்
தங்கத்தை இடுப்புக்கு மேலே அணியலாம் !!

காலில் தங்கக் கொலுசுமெட்டி அணிவது
கறையும் செல்வச் செழிப்பு என்பர்

தங்க ஒட்டியாணம் இடுப்பில் அணிந்து
தங்க ஆபரணம் கைகளில் கழுத்தில்


தங்கம் காதுகளில் தலையில் மூக்கில்
தகதகக்க அணியலாம் தவறேதும் இல்லை!!

தங்கத்தை கால்களில் அணிவது தரித்திரம்
தந்திடும் என்பர் கவனமாய் அணிவோம் !!



தரித்திரம் தவிர்ப்போம் தலைமுறை காப்போம்
அரிதினும் அரிதான குறிப்புகளைக்
பரப்புவோம்!!

**சண்முக சுப்பிரமணியன்,** திருநெல்வேலி



### காந்தியும் கால மாற்றமும் !!

காந்தி மகானின் சத்தியம் காந்தி மகானின் அகிம்சை
காந்தி மகானுக்கு வெற்றி தந்தது !!

காந்தி மகானின் உப்பு சத்தியகிரகம்
காந்தி மகானின் அந்நியத்துணி பகிஷ்காரம்
காந்தி மகானின் கள்ளுக்கடை மறியல்
காந்தி மகானின் வெள்ளையனே வெளியேறு மந்திரம்
காந்தி மகானுக்கு வெற்றி தந்தது
இந்தியச் சுதந்திரம் பெற்றுத் தந்தது !!

காலங்கள் எதையும் மாற்றிவிடும் காலமே மறக்க வழியாகும் !!

நாட்டுக்குள் வெளிநாட்டுத் துணி புகுந்தது
நாட்டுக்குள் மதுபானம் ஆட்சிக்கு உதவுகிறது !!

காலமே எந்த மாற்றமும் செய்துவிடும்
காலமே சக்தி வாய்ந்த மருந்தாகும் !!

வெள்ளையனே வெளியேறுப் போராட்டம் – அன்று
வெளிநாட்டவனே வர்த்தகம் செய்ய வா – இன்று !!

காலமே மாற்றம் தந்திடும் காலமே ஏற்றமும் தந்திடும் !!

**சண்முக சுப்பிரமணியன்,** திருநெல்வேலி



### ஜக்கம்மா சொல்றா!

பூம்பூம் மாட்டுக்காரன் வந்தான், மாடு வர வில்லை பதிலாக
கழுதைக்கு மேக்கப்போட்டு அழைத்துவந்துள்ளானாம்.
மாடு எங்கே என காரணம் கேட்டால் கேரளா சந்தையில்
அடிமாடு சந்தையில் சேல்ஸாகிவிட்டதாம்.
கழுதைக்கு மேக்கப் பொருத்தமாய் இல்லை யாம்,
சில்லறை காசு கொடுத்தேன், நோட்டாய் கொடுசாமி
கட்டுப்படியாகவில்லை.கழுதைவாடகை வேறு பாக்கியாம்.
குடுகுடுப்பைக்காரன் வந்தான் காசு போட்டேன்,
தலையைச்சுத்தி வேட்டிகொடு எனக்கேட்டான்,
வேட்டியில்லை என்றேன், ஜக்கம்மா சொல்றா!
ஜக்கம்மாசொல்றா! குடும்பம் விளங்காது,
நாசமாத்தான் போகுமாம், சரி என பயந்து வேட்டிகொடுத்தேன்
மீண்டும் ஜக்கம்மாதான் வாக்கினில் வந்தாள்.
நல்ல காலம் பொறக்குமாம். எனக்கு,
நானோ லட்சாதிபதி ஆவேனாம் . இடைமறித்தேன்!



நாசமாய் பூடுவேன்னு சொன்னியே
எனக்கேட்டேன். அதற்கும் ஜக்கம்மாவே
சொல்லியது, சாரி, சாரி உனக்கு கேடு
செய்யறவன் நாசமா போய்டுவானாம்,
ஆளை விடுடாசாமி இந்த கேம் எனக்கு
வேண்டாம் ஆளைவிடுப்பா என நழுவினேன்.

**நா.புவனாநாகராஜன்** செம்பனார்கோவில்

## நூல் விமர்சனம்:

நூலின் பெயர் :
மின்மினி – கனிகா
ஆசிரியர்: ரிஷபன்
வெளியீடு: புஸ்தகா
விலை : ₹100
தொடர்புக்கு: 7418555884

*தமிழ் நாடு இ பேப்பர் இதழில் "ரிஷபன்" கவிதைகளை அறியாதோரே இல்லை எனலாம்.*


*இவரின் நண்பர் அவருக்கு எழுதவே தோணாது சலிப்பு ஏற்பட்ட நேரத்தில் தலைப்பும் கொடுத்து அதற்கேற்ற படமும் தந்ததால் வந்த கவிதைகளின் தொகுப்பாம் இது. (இரு தலைப்பிலும் 30 நாட்கள் 30 கவிதைகள்)*

*அதில் இரு கவிதைகள் இங்கே:*

*மின்மினி - 6*

*சாத்தியமில்லாத ஒன்றை எப்படிச் செய்வது என்றேன் மின்மினியிடம் அப்படியா என்றாள் அலட்டிக் கொள்ளாமல் இன்றைய வருகையில் அவளை ஏதேனும் ஒரு வழியில் வெற்றிகொள்ளத் தவித்தது என் ஆணவம்.*

*உனக்குஇப்போதென்னசிரமம் என்றாள் கண் பார்த்து உன்னைப் போலவா நான்.... நினைத்தால் பறந்து வர சிறகுகள் இரண்டுண்டு... நடந்து வந்தால் நான் ஆயுளே முடிந்து விடும் என் கேலிச் சிரிப்பு*




*ஸ்தம்பித்தது பாதியிலேயே எனக்கு முளைத்திருந்தன... இல்லை... தந்தே விட்டாள் தன் இறக்கைகளை அன்பில் அவள் ஜெயிப்பதும் நான் தோற்பதுமே இல்வாழ்க்கை ரகசியம்.*

*( இதில் " நான் நடந்து வந்தால் ஆயுளே முடிந்துவிடும்" என இருக்க வேண்டுமோ? எனத் தோன்றியது)*

*இனிகா -25*

*எதைக் கேட்டாலும் வேண்டாம் என்கிறாய் உன் விருப்பம் தெரிந்து பரிசளிக்கவே ஆர்வம் சொல்லேன் எது வேண்டுமென்று.*

**ஸ்ரீகாந்த் திருச்சி**




### சமநிலை பெற வேண்டும்

" பிறப்புக்கும் இறப்பிற்கும்
நடுவில் பெரும்
போராட்டம்..."

தூங்குவது இல்லை
இதயம் உதயமான பீரங்கிகள்
வலம் வரும் எக்காலமும் ....."

போர் அவசரகால நிலை
அழுகுரல் பசி பஞ்சம்
பட்டினி ......"

ஏவுகணைகள் தாக்கி
தாக்கி ஏலத்திற்கு
வந்தது மனிதம் .... "

உயிர்கள் பலி
நாடு நகரம் நாசம்
அகதிகளாய் மக்கள் ..."

இன்னும் பிற்போக்கு
சிந்தனை ,காலம்
மாறினாலும் காட்சிகள்
மாறவில்லை ..."

அதிகாரம் காட்டும்
ஆதிக்கம் அடங்காத
இரத்தத்தை உறிஞ்சும்
ஒட்டுண்ணி ... "

அமைதியை தேடியே
உலகம் , வெள்ளைக்
கொடிக்கு உண்டு
மகத்துவம் .... "



உலகம் சமநிலை
பெற வேண்டும் அதில்
உயர்வு
தாழ்விலா நிலை
வேண்டும்..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

### விலகிய உறவை விட்டுவிடுங்கள்

விட்டுப்போன உறவு திரும்ப வருவதை புதுப்பிப்பிக்காதே!
அதுநல்லதல்ல . அதற்கு பதிலாக கருநாகத்தின்
வாயில் கை வைப்பதே மேல்!
பாத்திரமறிந்து பிச்சைபோடுவதே
மேல்அதை கடைபிப்பதே நல்லது.
சுயநலமாய் பழகி உடலுக்குள்ளேயே நாக்கை வழிக்கும்
உறவுகளிடம் கொஞ்சம் நிதானித்து பழகுவதே மேல்.
நல்லவர்கள் என நாம் நினைக்கும் சிலர்
நல்லவர் வேஷத்தில் உலா வரும் நயவஞ்சக
நரிகளிடம் நமக்கு எச்சரிக்கைதான் தேவை.



ஆடி அடங்கும் வாழ்க்கை ,ஆறடி நிலமே
சொந்தம், அதை நினைத்துப் பார்த்தால்
அனைவருக்கும் நல்லதே!முதியோா
தேவையில்லை பாரம் என
நினைக்கும்வாரிசுகளே! முதுமை பொதுவானதே
அனைவருக்கும் வருமே அது விதிவிலக்கல்ல

**நா.புவனாநாகராஜன்** செம்பனார்கோவில்



### ஸ்ரீ ரங்கா ஸ்ரீரங்கா ஸ்ரீரங்கா

இரு கண்ணாலே உன்னை
நான் காண வேண்டும்
இரு காதாலே உன் புகழை
எப்போதும் கேட்க வேண்டும்
மூக்காலே உன் துளசி மனம்
தினம் நுகர வேண்டும்
வாயாலே உன் திருநாமம்
நித்தம் பாட வேண்டும்
இரு காலாலே உன்
திருக்கோவில் தினமும்
நாட வேண்டும்
தலையாலே உன்னை நான்
தினம் வணங்க வேண்டும்
இரு கை கூப்பி உன்னை
நான் தொழ வேண்டும்
போதுமய்யா போதும் எனக்கு
இந்த உலக வாழ்க்கை
உன் திருவடியை விரைவில்
நான் அடைய நீ எனக்கு
கருணைகூர்ந்து



அருள
வேண்டும்
ஸ்ரீ ரங்கா
ஸ்ரீரங்கா
ஸ்ரீரங்கா

**S லலிதா சுப்ரமணியன்**
ஸ்ரீரங்கம்

### சாதி வெறி ! சாகடிக்கும் தீ !

மோதி வீழ்வது மிருககுணம்
கூடி வாழ்வது மனிதகுணம்
கூடிவாழ் மனிதனாக !

சதியில் பிறந்தது சாதி
சாதியை மறந்து சாதி
சாதி வெறிக்கு வை தீ !

குழந்தைக்குத் தெரியாது
குழந்தையிடம் கூறாதே
குழந்தைக்கு வேண்டாம்
சாதி!

ஆதியில் இல்லை
பாதியில் வந்த தொல்லை
சாதி !

கணினி யுகத்தில்
காட்டுமிராண்டித்தனம்
தீண்டாமை !

வேண்டும் சமூக நீதிக்கு
வேண்டாம் சமூக அநீதிக்கு
சாதி !

மூளையற்ற மூடத்தனம்
சமூக அவமானம்
சாதிக்கலவரம் !

சிந்தித்துப் பார்த்து
செயலினை மாற்று
மாறு மனிதனாக !

விவேகம் உணர்ந்து
வீண் சண்டை நிறுத்து
வேண்டாம் வெட்டுக் குத்து !

சாதிக்காக கொல்வது
மதத்திற்காக கொல்வது
கொல்வது மடமை !

மனிதனுக்கு அழகு
வன்முறை அல்ல
மனிதநேயம் !

மூளைச் சலவைக்குப் பலி
முட்டாளாகி உயிர்கள் பலி
பயன்படுத்து பகுத்தறிவை !

அயல் நாடுகளில் இல்லை
நம் நாட்டில் தொல்லை
சாதி !

உள்ளத்தால் உயர்ந்தவனே
உயர்ந்தவன்
சாதியால் உயர்ந்தவன்
இல்லை
உயர் உள்ளத்தால் !

கோடிப் பணம் கொடுத்தாலும்
கொன்ற உயிர் திரும்பாது
திருந்து !



கற்பிக்கப் பட்ட கற்பனை
போதிக்கப் பட்ட
போதனை
சாதி !

**கவிஞர் இரா .இரவி !**

### வேண்டாம் சாதி வெறி!

மனிதனை விலங்காக்கும்
சாதி வெறி வேண்டாம் !
மனிதனைக் கொல்லும்
கொலைவெறி வேண்டாம் !

விலை மதிப்பற்ற மனித
உயிர்களை
வீண் சண்டை இட்டுப்
பறிப்பது முறையோ ?

எந்த உயிரும் உயர்ந்ததுதான்
உலகில் ! எந்த உயிரும்
மலிவானது அல்ல !

அன்பு செலுத்துவது மனிதன்
குணம் ! வம்பு செய்வது
விலங்குகள் குணம் !

உன்னுயிர் போல மற்ற உயிர்
நேசி ! உயிரைப் பறிப்பது
மடமை நீ யோசி !

கனிவோடு நடந்திட்டால்
சண்டை வராது !
கணினியுகத்தில்
காட்டுமிராண்டி ஆகலாமா ?

சாதியின் பெயரால் கலவரம்
ஏனோ ? சாதிக்கும் வயதில்
மோதல் சாவு ஏனோ ?

வெட்டியும் குத்தியும் வீழ்வது
ஏனோ ? வேதனையை
குடும்பத்திற்கு தருவது
ஏனோ?

சிந்தித்துப் பார்த்து
செயலினை மாற்று !
சிந்திப்பவன்தான் மனிதன்
மனிதனாக மாறு !


**கவிஞர் இரா .இரவி .**

உறங்க மடிகெட்டதில்லை
அணைக்க கைகள்
கேட்டதில்லை தலைகோத
விரல்கள் கேட்டதில்லை நான்
கேட்டதெல்லாம் ஈரமான
உன் நெஞ்சின் ஓரமாக ஓர்
இடந்தான். முரண்பாடுகளே
முத்துக்களாய் முத்தங்களாய்
இருந்த காலங்கள் மலை
ஏறி முரண்பாடுகளே
முட்களாய் முற்றுப்புள்ளி
களாய் வாழ்க்கை நடை
போடுகிறது பழகிய
நடையோ தடுமாறுகிறது
தடம் புரள்கிறது ஏன் இந்த
முரண்பாடுகள்? காதலி



மனைவி
ஆகிவிட்டாள்.

**எஸ். சந்திரசேகரன் அமுதா**
செஞ்சி
கோட்டை.



### நடைபயிலும் கரடிப்பூனை!!

வழக்கமாய் நடைப்பயிற்சிக்கு
வருவார் எதிரிலுள்ள
மாநகரப் பூங்காவுக்கு
பக்கத்து வீட்டுக்காரர்.

கூடவே வரும்
நடைப்பயிற்சியின் போது
அவர் வீட்டுக் கரடி ரோமப்
பூனை !!


சில நாளாய் கரடிப்
பூனையின்றி வந்தார்
பூனை எங்கே என்ற போது
பூனை " குட்டி போடப்
போகிறது " பயத்தில்
தெருவுக்கு வருவதில்லை
போர்ட்டிக்கோவில்
சுற்றுமென்றார் குட்டி போடப்
போகும் கரடி பூனை !!

ஆறறிவு இல்லாத பூனைக்கு
எவ்வளவு அறிவு பாருங்கள்!!

சாலைக்கு வந்தால்
குட்டிக்கும்
சாவு வருமென்ற பயம் !!

குட்டி போட்டபின்
கரடிப் பூனை பூங்கா வரும்
பாதுகாப்பாகக் குட்டியுடன் !!

**சண்முக சுப்பிரமணியன்**



எதிர் படு...பூக்கோலமே...
முகம் காண ஆவல்...
பலகோடி...

நீதானே என்.... உயிர் நாடி..



கண்கள்
குளிர
தரிசனம்...
தா...
சித்திரை
முழுநிலவே...
கரிசனம்...
தா.....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

அறிவுடையோர் நட்பை
அகத்தில் வை!

நயவஞ்சகரின் நட்பை
நகத்தில் வை!

அறிவுசார் கருவூலத்தை
இல்லத்தில் வை!

பனித்துளியின் தூய்மையை
உள்ளத்தில் வை!

பாறையின் உறுதியை
உடலினில் வை!

எறும்பின் சுறுசுறுப்பை
எண்ணத்தில் வை!

மலர்களின் கணத்தை
வார்த்தைகளில் வை!

சிங்கத்தின் கம்பீரத்தை
நடையில் வை!

குதிரையின் நேர்மையை
ஓட்டத்தில் வை!

எதிரிகளை விடாமல்
ஆட்டத்தில் வை!

காக்கையின் பழக்கத்தை
வழக்கத்தில் வை!

தேனீயின் குணத்தை
வாழ்க்கையில் வை!

செய்யும் செயலை என்றும்
சிந்தையில் வை!



### கயல் விழியாள் !

உன் கண்களை மலர்கள்
என்று நினைத்து
சுற்றி சுற்றி வரும்
வண்டுக்குத் தெரியாது
நீ பார்வையற்றவளென்று!

பார்த்து மலைப்பவர்களுக்குத்
தெரியாது இடுப்புக்குக்
கீழ் வரை தொங்கி
ஊஞ்சலாடும் பின்னல்
சவுரியென்று !

உனக்கிணையாக
அன்ன நடை பயிலும்
அன்னம் பிறகுதான்
விழித்துக் கொண்டது
நீ மானிடப் பிறவியென்று!

பார்வையற்ற கயல்
விழியாளான நீ



சவரி அணிந்து
கொண்டு
பழக்கப் பட்ட
இடத்தில்
அன்ன நடை
பயில்வது
யாருக்காக ?

**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
சென்னை




### என்னவனே...

இரவெல்லாம்
கண்களை மூடி
உன்னை காண்கிறேன்...
என்னெதிரில் நீ வராத
நாட்களில்...
கண்களை கடந்து
ஓடும் வலிகளை...
உள்ளத்தில்
தேக்கி வைக்கிறேன்...
உன்னை எதிர்பார்த்து
காத்திருக்கும் இதயத்திற்கு...
தினம் தினம் சொல்கிறேன்

அவன் வந்துவிடுவான்
என்று...என் உதடுகள்
சொல்கிறது பொய்...
என் இதயமும்
நம்புகிறது உண்மையென...

என் வாழ்வில
வசந்தம் வீசிவிட...
வந்துவிடுவாயா நீ
மீண்டும் என் வாழ்வில்.....

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்



### உயிரானவளே...

காலங்கள் ஓடிக்கொண்டு
இருந்தாலும்...

சில பசுமையான நினைவுகள்
என்றும் மாறுவதில்லை...

என் வலிகளின் நடுவே
நீ வந்தாய் பேரின்பமாக...

இதுதான் வாழ்க்கை என்று
நான் உணரும் நேரம்...

நீயும் எனக்கு கொடுத்து
சென்றுவிட்டாய் வலிகளை...

உன் நினைவுகளோடு நான்
இருப்பதால் என்னவோ...

நானும் காதல் கிறுக்கன்
ஆகிவிட்டேன்...

தொலையாத நினைவுகளாய்




நம் காதல்
நினைவுகள்...
என்
உள்ளத்தில்
இன்றும்
பசுமையாக.....

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

### நிராகரிப்பு

நிராகரிப்பின் துயரம்:
நான் அதை நன்கறிவேன்.
நுனி விரலால்
இலை முனைக்கு நகர்த்தும்
கருவேப்பிலை போல்;
கடித்த பச்சை மிளகாயை,
நாகரிகமாக துப்புவது
போல்; மூலையில் இருத்தப்
படும் வாரியல் போல்;
நாசூக்காக நிராகரிக்கப்பட..
மனம் ஆம்பல் போல்
கூம்பும். தொட்டாற்
சிணுங்கி என, சுருங்கும்.
புறங்கை கொப்பளத்தின்
வேதனை அது.
நானே வாயால் ஊதிதான்
ஆற்ற வேண்டும்.
விண்டுரைக்கவோ,
விழுங்கவோ ஏலாமல்
அரும்பும் கண்ணீரை
கவனிக்க, ஒரு
மனதில்லாமல் போக;
கண் இமையா அமைய,
கண்ணீரை வெளியிடாமல்



இருக்கும்
கலை கற்று
தேர்ந்துள்ளேன்!
கொடுமையடா;
சாமி!

**சசிகலா விஸ்வநாதன்**

### அருமைப் பெண்கள்


வடுக்கள்தாம் முகம்தன்னில் பதிந்தபோதும்
வாட்டம்தான் வந்துவந்து சூழ்ந்தபோதும்
படுத்துகின்ற மாமியாரின் சொற்கள் கேட்டும்
பழிதூற்றும் நாத்திமாரின் கொடுமை தாங்கிக்
கடுகடுக்கும் பகல்கணவன் கடுப்பை ஏற்றும்
கனிவுவொன்றே தன்னுடைய பண்பாம் என்றே
அடுத்தவரின் பசிதன்னைப் போக்குதற்கே
அடுப்பாக எரிகின்றாள் நாளும் பெண்தான் !

வந்தபோது இளமைதுள்ள இருந்தவள்தான்
வாய்த்திட்ட கணவனொடு பிறந்தவர்கள்
சந்தமொழித் தம்பியரைத் தங்கை மாரைச்
சந்தனமாய்த் தன்பிள்ளை போலப் பேணிச்
சிந்தைதனில் தான்குழந்தை பெறுவ தற்கும்
சிந்திக்கா மலிளமைதான் கழிந்த போதும்
பந்தமுடன் புகுந்தவீட்டைக் கட்டிக்காக்கப்
பரிதாப உருவானாள் தேய்ந்தே பெண்தான் !



பிறந்தவீட்டின் உறவுகளைத் தோழிமாரைப்
பிரிந்துபுது வீட்டிற்குள் புகுந்த பின்பு
மறந்திட்டாள் தாய்வீட்டைச் சுற்றத்தாரை
மனமெல்லாம் கணவனவன் குடும்பம் எண்ணிப்
பறந்தவாறு நாளெல்லாம் பணிகள் செய்து
பக்குவமாய் அனைவரிடம் நடந்தபோதும்
சிறந்தவளென் றேற்காமல் தாழ்வுசெய்தும்
சிதையாமல் உழைப்பவள்தான் அருமைப் பெண்கள் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



### அப்பாவைப் போலாகுமா.?

ஆகாச வீதியின் பூக்களைக் கொய்து தா வென்று
சொன்னாலும் தருவாரே.!

ஏகாந்த பொழுதிலும் எப்போதும்
பெண்பிள்ளை நினைவோடு என்றும் இருப்பாரே.!

தேகத்தின் உயிராக.. திகட்டாத நினைவாக..
தினந்தோறும் தூங்காது உழைப்பாரே..

தோள்மீது தூங்கியொரு பார்க்காத உலகத்தை
பார் என்று பாசமாய் அழைப்பாரே! கசங்கிய உடையோடு
கரியோடு.. தழும்போடு தன்பெண்டு பிள்ளையை வளர்ப்பாரே!

நிசமான உறவாக.. நிழலாக கனவாக.. தானாடா விட்டாலும்
தசையாக ஆடியே பெண்பிள்ளையை நினைப்பாரே!

திசைக்காட்டி மரமாக வழிகாட்டும் ஒளியாக வசைகண்டும்
தயங்காது தனைத் தந்தாரே!

விசையாக எதிர்பார்ப்பு எதுவே இல்லாது.. அசைகின்ற
தெய்வமாய் அப்பா ஒருவர்தான் நிலைப்பாரே!

**வே.கல்யாண்குமார்.**



### ஆசை

சுடச் சுடக்கவிதை படிக்க
வேண்டுமென்று எனக்கு
ஆசை வந்தால் உன்
மு த் த ங் க ளை த்தவிர
வேறு வழியில்லை

### வேலை

என்னை அடிக்கடி உன்
அடிமையாக்குவதையே
வேலையாக வைத்திருக்கிறது
உன் மு த் த ங் க ள்!

### ஆக்ரமிப்பு

கிடைக்கும் நேரத்தில்
அவ்வப்போது
கொஞ்சம் கொஞ்சமாகக்
கா த லி த் தா லு ம் நம்
இ த ய ங் க ளை
முழுமையாக
ஆக்ரமித்திருக்கிறது
அன்பே இந்தக்காதல்!

### இறுதி

தயக்கத்துடன்
தொடங்கினாலும்
இறுதியில் எண்ணிக்கையில்
எங்கேயோ போய் விடுகிறது
நம் மு த் த ங் க ள்!

### வரம்

வரம் வாங்கி வர
ஆசைப்படுகின்றன
என் கனவுகள்
அதில் கூட நீ
மட்டுமே
வர வேண்டுமென்று!

### ராசி

நீ என்ன ராசியென்று
எனக்கும் நான் என்ன
ராசியென்று உனக்கும்
தெரியவே தெரியாது!
ஆனால் நம் இருவரையும்
ஒன்று சேர்த்து வைத்து
விட்டது நம் காதல் ராசி!

### நேரம்

உன்னுடன் இருக்கும்
பொழுதுகளில் மட்டுமே
நேரமே நகரக் கூடாது
என்று மிகப் பேராசையான
ஒரு வரத்தைக் கேட்கிறது
அன்பே என் மனம்!

### கவிதை

உன் அழகை நான்
ரசிக்கத் தொடங்கும் போது
காத்திருக்க ஆரம்பித்து
விடுகின்றன நான்
உன்னைப் பற்றி
எழுதப் போகும் கவிதைகள்!

### இ த ய ம்

உன் காதல் தொடப்போகும்
அந்த வினாடிக்காக
எல்லா நொடியும் ஆசையுடன்
காத்திருக்கிறது
என் இ த ய ம்!

### முயற்சி



நீ விலகிச் செல்லச்
செல்ல
இன்னும் அதி(க)
வேகமாய்
வளர்கிறது என் காதல்!

**முத்து ஆனந்த்** வேலூர்

# வாசகர் கடிதம்

அன்பார்ந்த தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் வாசக சொந்தங்கள் அனைவருக்கும் இதய வணக்கம்.

வாசகர் கடிதம் பகுதியில் தொடர்ந்து எழுதி முத்திரை பதித்து வரும் அன்பான உள்ளங்களுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகள்! தரமான விமர்சனம் தரமான படைப்புக்குச் சமம் என்பதை மெய்ப்பிக்கும் விதமாக வாசகர் கடிதங்கள் வெளி வந்து கொண்டிருப்பது சிறப்பான விஷயம்.

இந்த தருணத்தில் வாசகர்களும், படைப்பாளர்களும் சுதந்திரமாக இயங்கும் வண்ணம் களம் அமைத்துக் கொடுத்து வரும் சீப் எடிட்டர் அவர்களுக்கு நன்றி கூறா விட்டால், நாகரீகம் பிறழ்ந்த குற்றத்துக்கு ஆளாகி விடுவோம்.

நேற்றைய வாசகர் கடிதத்தில், நக்கீரப் பார்வையில் எப்போதும் நேர்த்தியுடன் எழுதி வரும் பாளையங்கோட்டை திரு.பி.கணபதி அவர்கள், போரில்லா உலகம் காணும் உயரிய இலட்சியத்தில் தொடர்ந்து உறுதியுடன், பொட்டல் புதூரை மையமாகக் கொண்டு இயங்கி வரும், நமது பேரன்பு பற்றி உணர்ச்சி நயத்துடன்- லயத்துடன உள்ளன்போடு குறிப்பிட்டு எழுதி, பெருமைப் படுத்தி இருந்தார். பேரன்பு சார்பாக ஆத்மார்த்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க வளமுடன்.

தொடர்ந்து நமது தமிழ் நாடு இ பேப்பரில், போரில்லா உலகம் பேரன்பு கொள்கை முழக்கத்தை, லோகோவோடு அனைவரையும் ஈர்க்கும் வகையில், நான்கு திசைகளிலும் சென்றடைய வேண்டும் என்ற பேரன்பு உள்ளத்தில், நான்காம் பக்கத்தில், வெளியிட்டு வரும் சீப் எடிட்டர் அவர்களுக்கு என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம்.


தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் உயரிய சமூக நல சிந்தனைக்கு இதுவே சத்திய சாட்சி!

தமிழ் நாடு இ பேப்பர் குழுமம் மேன்மேலும் வளர்ந்தோங்கிட எல்லாம் வல்ல இறைவனை தொழுது வணங்குகிறேன்.



-நெல்லை குரலோன்
பொட்டல் புதூர்

கரூர் விஜய் கூட்டத்தில் நடந்த இடங்களை புலனாய்வுத் துறை ஆய்வு செய்து வருகிறது. உக்ரைன் மீது ரஷ்யா ஐம்பது ஏவுகணைகள் 500 ட்ரோன்கள் மூலம் தாக்குதல். டார்ஜிலிங்கில் ஏழு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. ஆன்மீக செய்திகள் அனைத்தும் அருமையாக உள்ளது. விஜய் கட்சியை கூட்டணிக்குள் கொண்டுவர சீமான் முயற்சி செய்து வருகிறார்.வரட்சியான கண்களை பாதுகாப்பது எப்படி என்ற கட்டுரை நல்ல தகவல் சென்னையில் தேவையற்ற வீட்டு உபயோக பொருட்களை அப்புறப்படுத்த மாநகராட்சி முடிவு. கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் திறக்கப்பட்டது. திருவிளையாடல் புராணம் பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது. பிரம்மதேசம் கோவில் பற்றிய கட்டுரை நன்றாக இருந்தது பாராட்டுக்கள். புதுக்கவிதைகள் அனைத்து சூப்பர் ரகம். செவ்வாழை மாலைக்கண் நோயை குணமாக்கும் குழந்தைகளுக்கு இருமல் மருந்து அவசியமா என்ற கட்டுரை நல்ல விழிப்புணர்வு பகுதியாகும். கரூர் வலிக்கு விஜய் பொறுப்பேற்க வேண்டும் தினகரன் அறிக்கை. விஜய் பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்ய உத்தரவு. தூங்கும் வசதி கொண்ட பாரத் ரயில் அடுத்த மாதம் வரும். அரவிந்த் ஸ்ரீனிவாஸ் இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரர் பட்டியலில் சேர்ந்துள்ளார். பிறப்பால் குடியுரிமையை ரத்து செய்ய முடியாது அமெரிக்க நீதிமன்றம் அறிவிப்பு. நெல்லை குரலோன் அவர்கள் தலைமையில் நடைபெறும் பேரன்பு பகுதி மிகவும் சிறப்பாக செயல்படுகிறது. போர் இல்லா அமைதியான வாழ்க்கையை வாழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு இது. இந்த அமைப்பு வெற்றி பெற வாழ்த்துக்கள். அதற்கு உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு இ பேப்பர் கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

வணக்கம். 6 .10. 25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் சிறப்பு புலனாய்வு குழு நெரிசல் ஏற்பட்ட இடத்தில் தீவிர ஆய்வு செய்வது மிகவும் சிறந்தது. இதனால் அங்கு நடந்த உண்மை புலப்படும் இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக அமைய எனக்கு உதவியது பாராட்டுக்கள்.

திருக்குறள் மிக அற்புதமான பொருளுடன் படிக்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. பாராட்டுக்கள். புரட்டாசி மாதத்தில் மூன்றாவது சனிக்கிழமை முன்னிட்டு காட்பாடி ஸ்ரீ வரதராஜ பெருமாள் சர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தது மிகவும் அருமையான காட்சியாக மெய்சிலிர்க்க வைத்தது.

நலம் தரும் மருத்துவம் பகுதியில் வறட்சியால் கண்களுக்கு தீர்வு என்று அருமையான தகவலை படித்தவுடன் ஆரோக்கியத்தின் பாதையாக உணர்ந்து மகிழ்ந்தேன்.

கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் ஜனவரி மாதம் திறக்கப்படும் என்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் அறிவித்தது நல்ல செய்தி பாராட்டுக்கள்.

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் கேளப்பன் நாயர் வரலாறும் அவருடைய புகைப்படம் மிகவும் அருமை வரலாற்றுச் செய்தி மிக அருமையாக தினம் ஒரு தலைவர்கள் என்ற தலைப்பில் கொடுப்பது பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயம்.

பல் சுவை களஞ்சியம் மிகவும் அருமை அதில் வந்த மீம்ஸ் எனக்கு மகிழ்ச்சியை கொடுத்து சிரிக்க வைத்தது. விடுகதை விடைகளை கண்டுபிடித்து மகிழ்ந்தேன்.

பன்முகம் பக்கத்தில் வந்த மாலைக்கண் நோயை குணமாக்கும் செவ்வாழைப்பழம் என்று நல்ல தகவல்களாக இருந்ததால் ஆவலுடன் படிக்க முடிந்தது.

ஸ்ரீ கேசவர் மற்றும் ஸ்ரீ பெரியாழ்வார் பவித்ர உற்சவம் என்ற படங்களும் செய்தியும் மற்ற ஆன்மீக தகவல்களும் மிக அருமையாக இருந்தது ஆவலுடன் படித்தேன்.

சுற்றுலா பக்கத்தில் வந்த பருவ மழை காலத்தில் மழை ஏற்றம் செய்யும்போது கவனிக்க வேண்டிய செய்திகள் என்று பட்டியலிட்டது அவ்வாறு ள்பவர்களுக்கு மிகவும் பயனுள்ள தகவல் பாராட்டுக்கள்.

உயர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து தவெக தலைவர் விஜய் அவர்கள் பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்யும் நடவடிக்கை தீவிரமாக நடக்கும் செய்தி படித்தவுடன் அதிர்ச்சியாக இருந்தது.

தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் அடுத்த மாதம் இறுதியில் பயன்பாட்டுக்கு வரும் என்று அதிகாரிகள் சொன்ன தகவல் மிகவும் அருமை. இதனால் வயது முதிர்ந்தவர்கள் அதுபோன்ற சொகுசான வாகனத்தில் தூங்கிக் கொண்டே பயணம் செய்யலாம் என்று தோன்றியது.

நேபாளத்தில் கனமழை ஏற்பட்டதால் நிலச்சரிவு ஏற்பட்டது என்ற செய்தி அதிர்ச்சியாக இருந்தது உக்கிரன் மீது ரஷ்யா தாக்குதல் என்று போர் செய்தியையும் உலக தகவல்களையும் மிக அருமையாக புரிய வைத்த கடைசி பக்கம் பிரமாதம். பாராட்டுக்கள்.

திங்கட்கிழமை விடியலை தித்திக்கும் விடியலாக மலர வைத்த தமிழ்நாடு இ பேப்பர் ஆசிரியர் குழுமத்தின் அரிய பணிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.



-உஷா முத்துராமன்

தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் வாசக சொந்தங்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம்.

மதிப்பு மிக்க ஆசிரியர் குழுமத்தின் அற்புதமான பணியின் மகத்துவத்தை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் நெகிழ்கிறது. மலர்கிறது. இலக்கை அடைய வேண்டும் என்றால் இரவு பகல் பாராது எழுச்சி உணர்வோடு எதிர்வரும் தடைகளை யெல்லாம் தகர்த்தெறிந்து, தளர்வோ, சோர்வோ இல்லாமல் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எதார்த்த வாழ்க்கைப் பாடம் உரத்த சிந்தனை வழி புரிகிறது. புது ரத்தம் பாய்கிறது.

என்னுள் ஆழ்ந்து தோய்ந்த இதே நல்லுணர்வு, நம் வாசக சொந்தம் தென்காசி வெங்கடாசலபதி அவர்களுக்கும் இதே கனத்தில் வெளிப்பட்டு வருவது, மிகுந்த ஆச்சரிய அனுபவம்...

எந்தவித எதிர்பார்ப்பும் இல்லா மன நிலையில் தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தினை வழி நடத்தி, செயல் படுத்தி வருகின்ற சீப் எடிட்டர் அவர்களின் உள் உணர்வு ஓட்டத்தையும் இந்த தருணத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.

எல்லாம் வல்ல இறை ஆற்றல் துணையால் ஏதோவொரு இனந் தெரியாத ஒற்றுமை இணைப்பு, இழைந்தோடி இருப்பதை கூர்மைப் பார்வையில் கவனப் படுத்த முடிகிறது.

எதையும் ஆய்ந்து தெளிந்து, அடி எடுத்து வைக்கும் வல்லமை மிக்க நம் வாசக சொந்தங்கள் இந்த நுட்பமான எண்ண அலைகளின் அலைவரிசையை, மிகச் சரியாக புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு.

ஆகவே தான், கூறியது கூறல் பிழையாகாது என்று தெளிந்து, உயரிய நோக்கத்திற்காக திரும்பத் திரும்ப இந்த விஷயத்தில் அக்கறை செலுத்தி வருகிறேன்.

தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் வெற்றியை தனிநபர் வெற்றியாக கருதி இருந்தால், இந்த மாதிரியான சிந்தனை களை நிச்சயம் முன் நிறுத்த மாட்டேன்.

சமூக வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கின்ற ஒரு கூட்டு முயற்சியாகவே இந்த வெற்றியைப் பார்க்கும் ஒரே காரணத்திற்காகத் தான் வாசகர் கடிதம் பகுதியின் மூலமாக கண்ணுக்குத் தெரியாத இந்த கனமான -- வளமான மகசூலுக்காக மன்றாடுகிறேன்.

இலட்சிய இலக்கு கைக் கெட்டும் தூரத்தில் என்பது நிச்சயம் ஆகி விட்ட நிலையில், வாசக சொந்தங்கள் சற்று விரிந்த இதயத்துடன் விழித்தெழுந்து விட்டால் போதும்... எட்ட வேண்டிய இலக்கை வெகு விரைவில் எட்டிப் பிடித்து விடலாம். நாம் வாழும் இந்த சமுதாயத்தோடு சேர்ந்து நாமும் தனித் தனியாக செழித்து வளம் பல காணலாம். வளம் என்று இங்கே நான் குறிப்பிடுவது பொருள் சம்பந்தப்பட்ட சராசரி லௌகீக எல்லைகளைத் தாண்டிய விரிவுநிலை என்பதை தயவு செய்து நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் வேண்டுகிறேன்.

இன்று குறிப்பாக படைப்பாளர் பக்கம் சற்று முனைப்புடன் கவனம் குவிக்க முயல்கிறேன்.

தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் வெளியீடுகளில் பிரசுரமாகி வரும், கதை, கவிதை, கட்டுரை, இன்ன பிற படைப்புகள் கூடுதல் வெளிச்சம் கண்டு விசேஷ அந்தஸ்து பெற்று வரும் ஆரோக்கியமான சூழ்நிலை இங்கே மலர்ந்திருக்கிறது. இந்த அற்புதமான சந்தர்ப்பத்தை மிகச் சரியாக பயன் படுத்தி அடுத்த கட்டத்திற்கு நம்மை நகர்த்த வேண்டும்.

சுவர் இருந்தால் தானே சித்திரம்! தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் விரிந்த தளம் செழித்தோங்கி வளர்ந்து நிலைத்தால் தானே நாம், நாம் என்றால் நம் படைப்புகள் நிலைத்து நெடிய வரலாறு படைக்க முடியும். மதிப்பு மிக்க படைப்பாள நண்பர்கள் இந்த கோணத்தில் சிந்தித்து தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் தொடர்ந்த வளர்ச்சிக்கு தொடர்ந்து முனைப்புடன் புதுப்புது சிந்தனைகளால் செழிக்க வைத்து துணை புரிய வேண்டும். இது நம் எல்லோரின் கடமையாகவே எண்ண வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.



-பி.சிவசங்கர்
கோவை

# வாசகர்

நெரிசல் ஏற்பட்ட இடத்தில் சிறப்பு புலனாய்வுக் குழு தீவிர ஆய்வு
ஆளுநருக்கு எதிராக திமுக போராடும்#முதல்வர் ஸ்டாலின்
உக்ரைன் மீது 5 ஏவுகணைகள் 500 டிரோன்கள் வீச்சு#ரஷிய தாக்குதலில் ஐந்து பேர் உயிரிழப்பு
டார்ஜிலிங் ஏழு இடங்களில் நிலச்சரிவு#இருபது பேர் பலி
மகளிர் உலகக் கோப்பை #பாகிஸ்தானை எளிதில் வீழ்த்தியது இந்தியா
தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையுமாறு விஜய்க்கு எந்த அழைப்பும் விடுக்கப் படவில்லை#குஷ்பு
கரூர் 41 பேர் பலி #விஜய்யை பாஜக கூட்டணிக்குள் கொண்டு வர முயற்சி #சீமான்
டெங்கு பரவல் அதிகரிப்பு#சுகாதாரத் துறை எச்சரிக்கை
சென்னை வந்த எக்ஸ்பிரஸ் ரயிலில் திடீர் புகை
வீட்டிலுள்ள பழைய பொருட்களை அகற்ற வேண்டுமா ?#சென்னை மாநகராட்சி புதிய சேவை
வீராணம் ஏரியில் 63.50 கோடியில் வெள்ளத் தடுப்பு பணிகள்#அமைச்சர் துவக்கி வைத்தார்=ஆற்றில் போட்டாலும் அளந்து போடு#பழமொழி

சிவகாசியில் 30% உற்பத்தி குறைவு#பட்டாசு விலை அதிகரிக்கும்
புதுக் கவிதைகள் தரம் உயர்வு
நூல் விமர்சனம் அருமை
வாசகர் கடிதங்கள் ுத்திசாலித்தனமானவை
குழந்தைகளுக்கு இருமல் மருந்து வசியமா#மருத்துவர்கள் அறிவுரை
கரூர் பலி தார்மீகப் பொறுப்பு தவெகவுக்கே#டிடிவி தினகரன் குமுறல்
எடப்பாடி பழனிச்சாமியின் பிரச்சாரம் ஒத்தி வைப்பு
உயர்நீதி மன்ற உத்தரவைத் தொடர்ந்து தவெக பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்ய முஸ்தீபு
டெலிவரி பாய் போல நோட்டமிட்டு சென்னையில் உ.பி. கொள்ளையர்கள் கைது
கலைஞர் பல்கலை மசோதா விவகாரத்தில் ஆளுநருக்கு எதிராக உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு ரிட் மனு தாக்கல்
கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட யூடியுபர், கல்லூரி மாணவர் உட்பட நால்வர் கைது.
12மணி நேர தொடர் மழை#ஏழு இடங்களில் நிலச்சரிவு/17 பேர் பலி=டார்ஜிலிங் விரைகிறார் மம்தா பானர்ஜி
பீஹார் தேர்தல்# புதிய சீர்திருத்தங்களை அறிவித்த தேர்தல் ஆணையம்
அரபிக் கடலில் துறைமுகம் அமைக்க பாகிஸ்தான் திட்டம்
இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாக ஆறு பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றிய ஈரான்
பிறப்பால் குடியுரிமையை ரத்து செய்ய முடியாது#அமெரிக்க நீதிமன்றம்
ஐரோப்பாவில் விமான நிலையம் அருகே பறந்த மர்ம பலூன்கள்# விமான சேவை நிறுத்தம்



**-பி. சுரேகா**
**சென்னை**

---

வாசகர் அனைவருக்கும் வணக்கம்.
தி. மு. க. வினர் என்றால் ஏவல் துறை. அப்பாவிகள் என்றால் அராஜகத்துறையா? திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் கேள்வி. த. வெ. க. தலைவர் திரு. விஜய் அவர்களின் பிரச்சார வேன் பறிமுதல் செய்யப்படும். இந்த இரண்டு செய்திகளும் இன்றைய அரசியலின் நிதர்சனத்தைத் தெரிவிப்பவையாக உள்ளன.
ரூபாய் 100 கோடி மதிப்பிலான நிலக்கரி மாயம். இதுகுறித்து விசாரித்த மின் தொடரமைப்பு கழக மேலாண்மை இயக்குனரின் அறிக்கை வெளியிடப் படாதது பல சந்தேகங்களுக்கு வித்திடுகிறது.
வீட்டின் பழைய பொருட்களை அப்புறப்படுத்த சென்னை மாநகராட்சியின் புதிய முயற்சி பாராட்டற்குரியது.
மடிப்பாக்கம் திருமதி. பிரபாவதி அவர்களின் சிறுகதை மனநிறைவை அளித்த படைப்பு. பாசத்தின் ஆணிவேர் குடும்ப உறுப்பினர் அனைவர் மனத்திலும் ஆழமாக ஊடுருவி உள்ளதை படம்பிடித்து காட்டியுள்ள பாசிட்டிவ் narration. அருமை.
பல்சுவைக் களஞ்சியப் பகுதியின் எட்டு ஜோக்ஸ்களும் A க்ளாஸ். சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது.

பழம் சிறந்ததா பழச்சாறு சிறந்ததா? கட்டுரை சிறப்பு.
மருமகனுக்கு மரண தண்டனை வழங்கிய சேதுபதி மன்னனின் வரலாறு நீதியின் ஆட்சியை நிலைநிறுத்திய மாண்பை அழகாக விவரித்துள்ளது. தான் மகனையே தேர்காலில் இட்டு பசுவுக்கு நீதிமுறை செய்த மனுநீதிச் சோழன், தன் தசையே அரிந்து கொடுத்து பருந்துக்கு பரிவு காட்டிய சிபி சக்கரவர்த்தி வாழ்ந்த வரலாறுகளும் நம்மிடையே உள்ளன.
மீண்டும் நாளை சந்திப்போம். நன்றிகள்.



**-P.கணபதி**
**பாளையங்கோட்டை**

---

மடிப்பாக்கம் பிரபாவதி எழுதிய " பந்தபாசம்" - அண்ணன் தங்கை இடையேயான பாசத்தை உணர்த்தி நெகிழ வைத்தது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையும் படி விஜய்க்கு எந்த அழைப்பும் விடுக்கவில்லை என குஷ்பு சொன்னதை நம்பிட்டோம்.



**-ஸ்ரீகாந்த்**
**திருச்சி**































FOR SALE
2BHK FLAT
K.K. PUDUR.P.O.
SAIBABA COLONY
96009 22463

குடோன் LEASE/ வாடகைக்கு
Industrial / Prime area-வில் Industrial குடோன் with (EB-Power) சகல வசதிகளுடன் வாடகைக்கு உள்ளது. (For all kind of Manufacturing, warehousing and Logistics use)
Ph: 85269 25168

குடோன் வாடகைக்கு
900 sqft
✣ GODOWN
✣ OFFICE ROOM
✣ WORKSHOP
with 10HP Line
Near Singanallur ESI
98420 44110

WANTED
Kasturi ITI in Kuniamuthur requires
TEACHING STAFF
Qualification: B.E. (Mech) / Dip. in Automobile Engg / Mechanical Engg
Apply with resume to:
cmdcorpoff@yahoo.in
94422 77777

தி புரொபஷனல் கூரியர்ஸ்
கோவை
டிரைவர்கள் தேவை
லைட் / EV
காலை 8.00 - 8.00
3 or 4 சக்கர வாகனம்
ரூ.20,000/-
காலை: 9.30 - 6.30
3 or 4 சக்கர வாகனத்தில் டெலிவரி மட்டும் செய்ய
ரூ.17,500/-
தங்கும் வசதி இலவசம்
ஒரிஜினல் லைசென்ஸ், ஆதார் நகல் போட்டோவுடன் நேரில் அணுகவும்
தலைமை அலுவலகம்
56/2, சுங்கம் பை-பாஸ் ரோடு, சுங்கம், கோவை-45
89393 77709
98433 21677

இடம் விற்பனைக்கு
ஈச்சனாரி பொள்ளாச்சி சாலை
மிக அருகில் 50சென்ட் வடக்கு 30அடி தார்ரோட்டின் மேல் அமைந்துள்ளது.
L&T Bye Pass
கற்பகம் யுனிவர்சிட்டி மற்றும் L&T Tech Park அருகில்
மிக குறைந்த விலையில் விற்பனைக்குள்ளது.
98422 14096
SAA

குடோன் வாடகைக்கு
காளப்பட்டி ரோடு Tax Park அருகில்
30 அடி ரோட்டில் கிழக்கு பார்த்த
1800 Sq Feet-ல் குடோன் வாடகைக்கு
98942 21416

ஏர்போர்ட் அருகில் வீடு விற்பனைக்கு
கோவை Airport பின்புறம் இருகூரில் 4 சென்ட் மேற்கு சைட் வடக்கு வாசல் 3200 ச.அடி
3 போர்சன் புதிய வீடு 1.50 Cr
வாடகை வருமானத்துக்கு உகந்தது
மொத்த வாடகை வருமானம் 60,000
gated community
Ph: 88705 21041

Aachi
The Mother of Good Taste
நிறுவனத்திற்கு டிரைவர்கள் தேவை
நல்ல சம்பளம்
உணவு, தங்குமிடம்
சீருடை, காப்பீடு இலவசம்
எண்.1, காமராஜ் தெரு, பொன்னியம்மன் நகர், கீழ் அயனம்பாக்கம், சென்னை - 95
99410 12110

FOR SALE
INDUSTRIAL LAND
3.42 ACRES
@SRIPERUMBUDUR
• IDEAL FOR FACTORY SETUP
• CLEAR TITLE
JBM HOMES
INDUSTRIAL | RESIDENTIAL | PLOTS | VILLAS
6369521526/
8883042819

DTCP Sites For Sale
@ KALAPATTY
North Facing Sites
5.5Cent
Direct Sale !!!
90471 87197
SAA

பாப்பம்பட்டியில் இடம் விற்பனைக்கு
பாப்பம்பட்டி ஸ்ரீ கிருஷ்ணா கார்டனில் வீட்டுமனைகள் விற்பனைக்கு
வடக்கு பார்த்த 3.5சென்ட் DTCP வீட்டுமனைகள் விற்பனைக்கு
1சென்ட் 7.80 லட்சம்
Ph: 88705 21041

WANTED
TELECALLERS
Female 4 nos
Sidco
Attractive Salary + incentive
Ph: 99527 35557
SAA

செக்யூரிட்டிகள் தேவை
செக்யூரிட்டிகள் அதிக அளவில் உடனடி தேவை
சம்பளம்: ரூ.14,000 to 18,000
வாரம் அட்வான்ஸ் உண்டு
கணபதி, சரவணம்பட்டி, சீரநாயக்கன் பாளையம், காளப்பட்டி
செக்யூரிட்டி – 25 நபர்கள்
ASO – 5 நபர்கள்
உணவு, தங்குமிடம் சலுகை விலையில் வழங்கப்படும்
63802 81047
63699 77639

ஹோட்டல்/ லாட்ஜ் விற்பனைக்கு
திருச்சி மாவட்டம் சமயபுரம் மாரி அம்மன் கோவில் தேரடி வீதியில்
8500 சதுர அடி
26 ரூம்ஸ் கொண்ட
10 கார் பார்க்கிங் வசதி உள்ளது.
பத்திர பதிவு செய்யும்போது உடனடி பணம்.
Clear Title with Bank Loan.
No Brokers.
Call: 99945 62553, 99945 62554, 90032 30032

ராணிப்பேட்டை-ல்
100 ஏக்கர் மாந்தோட்டம் நீச்சல் குளத்துடன் கெஸ்ட் ஹவுஸ் விற்பனைக்கு
புரோக்கர்கள் தவிர்க்கவும்
73972 73555 / 73973 69555
73396 49555

பூமி லீசுக்கு தேவை
அன்னூர் (ஒதிமலை, ரங்கம்பாளையம் புளியம்பட்டி, இரும்பொறை) சுற்றுவட்டாரத்தில்
CT: 81229 93179

OFFICE SPACE FOR RENT
TRICHY ROAD
(Near Nanjappa Nagar)
Ground Floor: 1750 Sqft.
Prime Location with all amenities
98422 22725

REQD ENGINEERS
B.E. / D.M.E, - Mech., Elect., ECE (Freshers/1-3yrs Exp.) for Engineering Company Tiruvanmiyur Chennai.
CTC: 2.5 to 3 Lakhs p.a with Accommodation,
Basic Computer knowledge.
vtc600041@gmail.com
Mob: 9444296562

மகாராணி தியேட்டர் அருகில்
2 கடை வாடகைக்கு உள்ளது
94444 13395
044-48609138

நிலம் விற்பனைக்கு
கோவை to பொள்ளாச்சி (ஆச்சிப்பட்டி) மெயின் ரோட்டில் இருந்து 700 மீட்டர் தொலைவில் மேற்கு பார்த்த
3½ Cent DTCP நிலம் அவசர விற்பனைக்கு
மொத்தம் விலை 12.5 லட்சம் மட்டுமே.
95788 16871

தென்னந்தோப்பு விற்பனைக்கு
கிணத்துகடவு செட்டிகாபாளையத்தில் பஸ் ரோடு மேல்
1 ஏக்கர்
தென்னந்தோப்பு விற்பனைக்கு
போர் 3A1 அக்ரிசர்வீஸ் உண்டு.
முழுவதும் சொட்டுநீர் பாசனம் நல்ல காய்ப்பு 80 மரங்கள், பஸ்ரோடு 221 அடி, இரு வழிபாதை உள்ளது.
விலை 1.5Cr.
99949 27777
98411 58008


The Dairy & Spice People
BAKERS
Magic in your Cuisine
bakersspicesindia@gmail.com www.bakersspices.in
We are Hiring!
DTP / GRAPHIC DESIGNER
with working Knowledge in CorelDRAW, Photoshop etc.
CALL
+91 9363210849
+91 9585159864

டிரைவர் தேவை
வீட்டு டிரைவர் ஆக முன் அனுபவம் கொண்ட 40 வயதிற்குக் குறையாத நபர்கள் அணுகவும்
திருச்சி ரோடு சுங்கம் அருகில் வேலை
வேலை நேரம்:
காலை 8 மணியிலிருந்து மாலை 8 மணி வரை
நேரில் வர அழைக்கவும்:
99 44 44 75 67

ஏத்தர் பைக் ஷோரூம் இடம் தேவை
தரை மட்டும் பில்ட் ஏரியா: 2500 சதுரடி அடி
ஷோரூம்: 1000 சதுர அடி
சர்வீஸ் சென்டர்: 1500 சதுர அடி
தேவையான வசதிகள்: மெயின் ரோடு நேர் முன், குறைந்தபட்சம் 20அடி முன்புறம் கார்/பைக் பார்கிங் வசதி அவசியம்.
விருப்ப இடங்கள்:
சோழிங்கநல்லூர், கூடுவாஞ்சேரி, திருவொற்றியூர், வாசர்மேன் பேட்டை
Contact: 87126 00676



# பல்சுவை களஞ்சியம்




## அரிசி தேங்காய் பால் பாயிசம்



ஒரு மூடி தேங்காய் துருவல்
அரைகப் பச்சரிசி
ஒரு லிட்டர் பால்
ஒன்றரை கப் பொடித்த வெல்லம்
ஒரு ஸ்பூன் ஏலப்பொடி
தேவையான முந்திரி திராட்சை

செய் முறை

பச்சரியை வெது வெதுப்பான நீரில் ஒரு மணிநேரம் ஊறவைத்து தேங்காயுடன் சேர்த்து மிக்ஸியில் நன்கு அரைத்துக் கொள்ளவும்.

ஒரு லிட்டர் பாலை காய்ச்ச வேண்டும். ஒரு கரண்டி போட்டு கிளற வேண்டும். அதிலிருந்து கொஞ்சம் பாலை ஒரு கிண்ணத்தில் எடுத்து அரைத்த விழுதை கட்டிகள் இல்லாமல் கரைத்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாக காய்ச்சும் பாலில் விட்டு கைவிடாமல் கிளற வேண்டும்.

மற்றொரு அடுப்பில் வெல்லத்துடன் அரைகப் தண்ணீர் சேர்த்து ஒரு கொதி விட்டு வடிகட்டி பாலுடன் சேர்க்கவும். ஏலப்பொடியும் சேர்த்து விடவும். ரொம்ப கெட்டியாக இருந்தால் தண்ணீரோ காய்ச்சிய பாலோ சேர்க்கலாம். நன்கு வெந்தபின் இறக்கி முந்திரி திராட்சை அலங்கரித்து நைவேத்யம் செய்யலாம்.

பின் குறிப்பு: முந்திரி 2 பாதாம் 4 ஊறவைத்து சேர்த்து அரைக்கலாம். மில்க் மெய்டு, மில்க் பவுடர் சேர்க்கலாம். அவரவர் விருப்பம். நன்றி.

-வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

## சாப்பிட்ட பிறகு செய்யக்கூடாதவைகள்



1. சாப்பிட்டவுடன் தண்ணிரை வயிறுமுட்ட குடிக்க கூடாது. இதனால் ஜிரணநீர் நீர்ந்து போய் அஜிரணமாகும் பல நோய்கள்வர இது முக்கிய காரணமாக அமையும்.

2. சுமார் 40 நிமிடம் கழித்து தண்ணீர்தாகம் எடுக்கும் அப்போது குடிக்கவேண்டும்.

3. சாப்பிட்டதும் படுத்து விடக்கூடாது. காரணம், குடல் தனது செயல்பட மிகவும் சிரமப்படும். ஜீரணம் முறையாக நடக்காது.

4. குறைந்தது ஒரு மணிநேரம் கழித்தே உறங்க வேண்டும். இது மதியம் ஓய்வு எடுப்பவர்களுக்கும் பொருந்தும்.

5. சாப்பிட்டதும் குளிக்க கூடாது குறைந்தது 2 மணிநேரம் கழித்தே குளிக்க வேண்டும்.

6. சாப்பிட்டு முடித்ததும் எந்த பழங்களையும் சாப்பிடக்கூடாது. காரணம், உணவின் ஜீரண நேரம் குறைந்தது 5 மணிநேரங்களாகும். பழங்களின் நேரம் அதிகபட்சம் 2 மணி நேரம்தான். இந்த வித்தியாசத்தால் நாம் சாபிட்ட பழம் வாயுவாக மாற்றம் பெரும். இதில் ஒரு பழத்துக்கு மட்டும் விதிவிலக்கு அது பேரீச்சம்பழம்.

7. சாபிட்ட உணவு ஜீரணமாகாத நிலையில் வேறு உணவுகள் எதையும் உண்ணக்கூடாது. காரணம், இவ்வாறு சாப்பிட்டால் ஏற்கனவே சாபிட்ட உணவு ஜீரணத்தை கடுமையாக பாதிக்கும். இதனால் சுகர் வர காரணமாக அமையும்.

8. குளிர்பானங்கள், ஐஸ்கீரீம், ஐஸ்வாட்டர் இவைகளையும் குடிக்க கூடாது. காரணம், உணவு ஜீரணமாக நமது குடலில் வெப்பம் இருக்கவேண்டும். அந்த வெப்பத்தை இந்த குளிர்பானங்கள் இல்லாமல் செய்துவிடும்.

9. சாப்பிட்டதும் பரபரப்பாக இயங்குவதோ நடப்பதோ பளுவானவற்றை தூக்குவதோ கூடாது. காரணம், அவ்வாறு செய்தால் உணவு கீழ்நோக்கி செல்லாமல் மேல் நோக்கி வரும். இதனால் நெஞ்சு எரிச்சல், வாயு தொல்லைகள் ஏற்படும்.

-A.s.Govinda rajan
Kodambakkam Chenna

## மீம்ஸ்










## விடுகதை

| | |
|---|---|
| உடம்பெல்லாம் தங்கநிறம், தலையில் பச்சை கிரீடம் அது என்ன? | அன்னாசிப் பழம் |
| குண்டுச் சட்டியில் கெண்டை மீன். அது என்ன? | நாக்கு |
| கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்? | மெழுகுத்திரிவத்தி |
| நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன? | நாய் |
| நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன்? | ரயில் |
| எடுக்க எடுக்க வளரும். எண்ணெயைக் கண்டால் படிந்துவிடும். அது என்ன? | முடி |

## ஜோக்ஸ்



- (1)"நம்ப மாப்பிள்ளை நம்ம 'அகிலாவை தங்கத் தாம்பாளத்துல வச்சு தாங்குவேன்'னு சொல்றாரு.. அப்படியே புல்லரிச்சுப் போச்சுங்க... உங்களுக்கு..?!".
*"அடி மண்டு.... சீர்வரிசையில பித்தளை தாம்பாளத்துக்கு பதிலாக...தங்கத்துல தாம்பாளம்... வேணும்னு பூடகமா கேட்கறாங்களோன்னு நானே பதறிப்போய் நிக்கறேன்..நீ வேற.."****

===================


(2)"கல்யாணத்தின் போது எம்மவளை குத்துவிளக்கு மாதிரி இருக்கான்னு சொன்னாங்க.. சந்தோசப்பட்டேன்... ஆனா
இப்ப அதுக்கு வருத்தப்படறேன்' அப்படீங்கறீங்களே என்னாச்சு..?"
*"அதை ஏன் கேட்கறீங்க.... அவளுக்கு குளியல் சோப்புக் கூட வாங்கித்தராம வெறும் உப்பும்..புளியும் தேய்ச்சி குளிக்க சொல்றாங்களாம்... சம்பந்தியம்மா.. அதனாலதான்..".
****

===================

*(3)"அந்த ஆர்கானிக் ஷாப் காரங்க ரொம்ப தில்லுமுல்லு பார்ட்டிங்க..னு எப்படி சொல்றீங்க.?".
*"அதை ஏன் கேட்கறீங்க... நேத்து ஒருகிலோ கொள்ளும்...
ஒருகிலோ குதிரைவாலியும் பேக் பண்ணிகுடுங்கன்னு வாங்கிட்டு போய் வீட்ல பார்த்தா குதிரை வாலி மட்டும் தான் இருக்கு...திரும்பிவந்து கேட்டா...
தனித்தனியா கொண்டுபோகலாம்ல... கொள்ளை குதிரை சாப்பிட்டு இருக்கும்னு...கூலா சொல்றாங்களே..".

===================

(4)"வெளிநாட்டுல இருக்குற பையனுக்கு பலகாரம் பண்ணி அனுப்புனியே... என்ன சொன்னான் போன்ல...பார்வதி.?".
*"என் தலைமுடி முப்பத்தாறு அங்குல நீளம் இருக்காம்... ஒண்டியா பராமரிக்க கஷ்டப்படுவ..ஒரு தடவை திருப்பதி போய் மொட்டை போட்டுட்டு வான்னு சொன்னான் ரேவதி.!".
*** *





# சமையல் அறை ஸ்பெஷல்





# புரதச் சத்து நிறைந்த மல்டி கிரைன் சுண்டல்

| | |
|---|---|
| பச்சைப் பயறு | கால் கப் |
| காராமணி | கால் கப் |
| கொண்டைக்கடலை | கால் கப் |
| பட்டாணி | கால் கப் |
| கொள்ளு | கால் கப் |
| வேர்க்கடலை | கால் கப் |
| உப்பு | தேவையானது |
| தனியா | ரெண்டு ஸ்பூன் |
| கடலைப்பருப்பு | ஒரு ஸ்பூன் |
| மிளகாய் | ரெண்டு |
| பெருங்காயம் | சிறு துண்டு |
| கொத்தமல்லி | சிறிது |
| தேங்காய் துருவல் | சிறிது |



பயிறு வகைகள் அனைத்தையும் களைந்து தனித் தனியாக முளை கட்டவும். முளை வந்த பருப்புகளை சேர்த்து உப்பு போட்டு குக்கரில் இரண்டு விசில் விட்டு எடுக்கவும்.

வாணலியில் தனியா, கடலைப்பருப்பு, மிளகாய், பெருங்காயத் துண்டு ஆகியவற்றை வறுத்து சிறிது ஆறியதும் கரகரப்பாக பொடித்து வைக்கவும்.

வாணலியில் கடுகு, கருவேப்பிலை தாளித்து வெந்த பயறு வகையை நீரை வடித்து சேர்த்து கிளறவும். அத்துடன் பொடித்து வைத்துள்ள தனியா பொடியையும் சேர்த்து நன்கு கலந்து தேங்காய் துருவல் பொடியா நறுக்கிய கொத்தமல்லி கலந்து விட சத்தான சுண்டல் தயார்.

**பச்சைப்பயிறு இனிப்பு சுண்டல்:**

| | |
|---|---|
| பச்சைபயிறு | 200 கிராம் |
| வெல்லம் | 150 கிராம் |
| ஏலக்காய் | 4 |
| தேங்காய் | துருவல் அரை கப் |
| உப்பு | ஒரு சிட்டிகை |

பச்சை பயறை இருமுறை நன்கு கழுவி முங்கும் அளவு தண்ணீர் விட்டு குக்கரில் நான்கு விசில் விட்டு எடுக்கவும். வெல்லத்தை பொடித்து வாணலியில் அரை கப் தண்ணீர் விட்டு வெல்லத்தையும் சேர்த்து வெல்லம் கரைந்ததும் வடிகட்டி திரும்பவும் வாணலியில் விட்டு கொதிக்க விடவும். ஏலக்காயை பொடித்து வைக்கவும்.

வெந்த பச்சை பயறை சிறிது கரண்டியால் மசித்துக்கொண்டு வெல்லக் கரைசலில் சேர்த்து கலந்து கிளறவும்.

அடுப்பை நிதானமான தீயில் வைத்து கிளறவும். நன்கு சேர்ந்து வரும்போது பொடித்த ஏலக்காய், தேங்காய் துருவல் சேர்த்து இறக்க ருசியான பச்சை பயறு இனிப்பு சுண்டல் ரெடி.

# சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற சத்தான உணவு: மூக்குத்தி அவரை பொரியல்!

காம்பு கத்தரி, மூக்குத்தி அவரை எனப்படும் ஒரு வகை கொடி காய்கறியில், பச்சை மூக்குத்தி, சிவப்பு மூக்குத்தி எனமொத்தம் இரண்டு வகை உள்ளது. இது கிராமப் புறங்களில் தானாகவே முளைக்கும் காய்கறியாகும். நமது பாரம்பரிய காய்கறிகளில் ஒன்றான இந்த மூக்குத்தி அவரையை காலப்போக்கில் மக்கள் பயன்படுத்துவதை குறைத்துக் கொண்டதால், இதைப்பற்றி பெரும்பாலானோருக்குத் தெரிவதில்லை.

ஆனால், தற்போது அதன் மகத்துவத்தை மீண்டும் உணர்ந்த மக்கள் தங்கள் உணவில் சேர்த்து வருகின்றனர். மூக்குத்தி அவரையில் ஏகப்பட்ட மருத்துவகுணங்கள் உள்ளது. குறிப்பாக நமது ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும் அற்புத சக்தி இதற்கு உண்டு. இந்த பதிவில் மூக்குத்தி அவரையை பயன்படுத்தி பொரியல் எப்படி செய்வது என்பது பற்றி பார்க்கலாம்.

தேவையான பொருட்கள்

மூக்குத்தி அவரை - 1 கப்.
சின்ன வெங்காயம் - 15.
பச்சை மிளகாய் - 2.
சீரகத்தூள் - ½ டீஸ்பூன்.
தேங்காய் - துருவியது சிறிதளவு.
எண்ணெய் - தேவையான அளவு.
உப்பு - சிறிதளவு.
கடுகு - ½ டீஸ்பூன்.
உளுந்து - ½ டீஸ்பூன்.



மஞ்சள் தூள் - ½ டீஸ்பூன்.
கருவேப்பிலை - சிறிதளவு.

**செய்முறை:**

முதலில் மூக்குத்தி அவரைக்காயை தண்ணீரில் நன்றாக கழுவிக்கொள்ளவும். பின்னர் அதை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அடுப்பில் சிறிய கடாய் வைத்து தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும் உளுந்து, கடுகு, கருவேப்பிலை சேர்த்து வதக்கவும். பின்னர் அதில் நறுக்கி வைத்த வெங்காயத்தை சேர்த்து நன்றாக வதங்கியதும், அதில் பொடியாக நறுக்கிய மூக்குத்தி அவரைக்காய் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து கிளறவும். அதன் பிறகு மஞ்சள் தூள், சீரகத்தூள் மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்றாகக் கிளறவும். இறுதியில் மூக்குத்தி அவரை நன்றாக வெந்ததும், அதில் துருவி வைத்துள்ள தேங்காயை தூவி மெதுவாக கிளறி அடுப்பை அணைத்தால் மூக்குத்தி அவரை பொரியல் ரெடி.

# அடுப்பங்கரை டிப்ஸ்: சமையல் வல்லுநர்கள் போல் மிளிரலாம்!



ஊறுகாய் வகைகளை மரக்கரண்டியால் எடுத்து உபயோகிக்க நீண்ட நாள் கெடாமல் இருப்பதுபோல் உப்பிற்கும் மரக்கரண்டி அல்லது பீங்கான் கரண்டி உபயோகிக்க துருப்பிடிக்காமல் நீண்ட நாள் அப்படியே இருக்கும்.

சிகப்பு மிளகாய் தாளிக்க மிளகாயை இரண்டாக வெட்டி டப்பாவில் வைத்துக்கொள்ள தாளிக்கும்போது சுலபமாக இருக்கும்.

வாழைக்காய், வாழைப்பூ நறுக்கும்போது கையிலும், கட்டிங் போர்டிலும் எண்ணெய் தடவிக்கொண்டு பின் நறுக்க கறை ஏற்படாது.

சமையலின்போது பயன்படுத்தும் கரண்டி, ஸ்பூன்களை அப்படியே பரிமாற உபயோகிக்காமல் கழுவிய பின் உபயோகிக்க பார்க்க நீட்டாக இருக்கும்.

கேசரி, அல்வா போன்றவற்றை பரிமாறும்போது குழி கரண்டியில் உள்பக்கம் எண்ணெய் அல்லது நெய் தடவிக்கொண்டு பின் எடுத்து பரிமாற அழகாக குழியாக வரும்.

பாத்திரங்களை சூடாக இருக்கும்போது கழுவாதீர்கள். பாத்திரத்தின் வடிவம் மாறிவிடும். சற்று சூடு ஆறியதும் கழுவ வடிவம், நான்ஸ்டிக் எனில் கோட்டிங் மாறாமல் இருக்கும்.

பாத்திரம் துலக்க தரமான வாசிங்பவுடர், லிக்விடை உபயோகிக்க கை சொரசொரப்பு, கீறல் இல்லாமல் நன்றாக இருக்கும்.

வரும் பண்டிகை சீசனில் இனிப்பு செய்வோம். அதற்கு வெல்லப்பாகு, சர்க்கரை பாகு தேவைப்படும். ஒரு கம்பி பதத்தில் சர்க்கரை, வெல்லப்பாகை செய்து ஃப்ரிட்ஜில் வைத்துகொள்ள சட்டென செய்ய சுலபமாக இருக்கும்.

சர்க்கரை கேரமல் செய்து வைத்துக்கொண்டு பாயஸம், புட்டிங் போன்றவை செய்ய கலரும், சுவையும் நன்றாக இருக்கும்.

நட்ஸ், வறுத்த கடலை, முளைவிட்ட பயறு வகைகளை சமைக்கும் போதே இல்லத்தரசிகள் சாப்பிட்டுக்கொள்ள சத்து சேருவதோடு, அசிடிட்டி பிரச்னைகள் வராது.

சுண்டல் வகைகளை அப்படியே தாளித்து வைக்காமல், முதல் நாள் ஊறி, முளைகட்டிய பயறு வகைகளாக செய்ய சுவையோடு சத்தும் சேரும். புட்டும் வழக்கமான அரிசிமாவில் செய்யாமல் பருப்பு வகைகளில் செய்வதோடு சிறுதானிய மாவு, சிறுதானிய வரையில் செய்ய சுவையோடு சத்தும் சேரும்.

பருப்பு பாயசம் வைக்கும்போது பருப்பை வறுத்துவிட்டு ரவையாக்கி இரண்டாம் பாலில் வேகவிட்டு வெந்ததும், மில்க் மெய்ட், வறுத்த நட்ஸ், தேவையெனில் வெல்லம், ஏலத்தூள், நெய்யில் வறுத்த தேங்காய் துண்டுகள் சேர்த்து கலந்து இறக்க ரிச்சான பருப்பு பாயசம் சுவையாக இருக்கும்.

இனிப்பு பலகாரங்கள் செய்யும்போது சுக்கு, ஜாதிக்காய் ஏலக்காய் கிராம்பு சேர்த்து பொடி செய்து சேர்த்துக் கொள்ள சுவை அதிகரிக்கும்.

# ஆவியில் வேகவைத்த வாழைப்பூ வடை!



**தேவையான பொருட்கள்:**

சிறிய வாழைப் பூ - ஒன்று
பெரிய வெங்காயம் - ஒன்று
பச்சை மிளகாய்- 5
சோம்பு - அரை ஸ்பூன்
பட்டாணிப் பருப்பு - 200 கிராம்
உப்பு தேவையான அளவு
கருவேப்பிலை, மல்லித்தழை சிறிதளவு

**செய்முறை:**

பட்டாணிப் பருப்பை கழுவி விட்டு, 2 மணி நேரங்களுக்கு நீரில் ஊறவைக்கவும். வாழைப்பூவை சுத்தம் செய்து நரம்பு, மற்றும் வெள்ளையாக இருக்கும் களைகளை நீக்கி பொடியாக அரிந்து மோர் கலந்த நீரில் போடவும். பட்டாணி பருப்பை மிக்ஸி ஜாரில் போட்டு, சிறிதளவு உப்பு, சோம்பையும் சேர்த்து கொரகொரப்பாக அரைத்து எடுக்கவும். வாழைப்பூவை நீரின்றி பிழிந்துவிட்டு பருப்புடன் போட்டு ஒரே ஒரு சுற்று சுற்றி எடுக்கவும். வெங்காயத்தை பொடியாக அரிந்து கொள்ளவும். பச்சை மிளகாயையும் பொடியாக அரிந்து, கருவேப்பிலை கொத்தமல்லி தலையையும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இவை அனைத்தையும் அரைத்த மாவில் கலந்து கொள்ளவும். துளி பெருங்காயம் சேர்த்துக் கொள்ளவும்.

இவற்றை வடைகளாக தட்டி இட்லிப் பானைத் தட்டுகளில் லேசாக எண்ணெய் ஊற்றி அதன் மேல் இந்த வடைகளை வைக்க வேண்டும். 15 நிமிடம் ஆவியில் வேகவைத்து எடுத்தால் மிகச்சுவையான வாழைப்பூ வடை ரெடி. ஆவியில் வேக வைப்பதனால் இதன் சத்து அப்படியே நமக்கு கிடைக்கும். ரத்த அழுத்தம் உள்ளவர்கள், சர்க்கரை நோயாளிகள் என யார் வேண்டுமானாலும் இதை விரும்பி சாப்பிடலாம்.


## உங்கள் வீட்டு சமையல் அறையில் இதை மட்டும் செய்யுங்கள்..

# உணவுப்பஞ்சம் வராது

நாம் உண்ணும் உணவு ருசியோடு இருப்பதோடு ஆரோக்கியத்தை தருவதாகவும் இருக்க வேண்டும். எத்தனையோ நாடுகளில் ஒருவேளை உணவு கூட கிடைக்காமல் வறுமையில் வாடுகிறார்கள். இந்தியாவில் இலவச அரிசி, கோதுமை உள்ளிட்ட பல திட்டங்களாலும் பள்ளிகளில் வழங்கப்படும் இலவச உணவுகளாலும் பலரும் பசியாறுகின்றனர். நம்முடைய வீட்டில் உணவு பஞ்சம் வராமல் இருக்க குறைவில்லாமல் பொருட்கள் இருக்க என்ன செய்ய வேண்டும் எனறு பார்க்கலாம்.

**சமையல் அறை வாஸ்து:** நம்முடைய வீட்டில் எத்தனையோ அறைகள் இருந்தாலும் சமையல் அறை முக்கியமானது. அங்குதான் நம்முடைய எல்லோருடைய ஆரோக்கியமும் பாதுகாக்கப்படுகிறது. அம்மாவின் கை பக்குவ ருசியை மட்டும் கொடுப்பதில்லை நம்முடைய ஆரோக்கியத்தையும் நிர்ணயம் செய்கிறது. பொதுவாக வீடுகளில் வாஸ்து படி சமையல் அறை அக்னி மூலை எனப்படும் தென்கிழக்கு மூலையில்தான் இருக்க வேண்டும் அதுதான் சிறப்பானது.

**கிச்சன் மேடை:** கேஸ் ஸ்டவ் அல்லது அடுப்பு வைக்கும் மேடை தென்கிழக்கு மூலையில் தெற்கு கிழக்கு சுவரை ஒட்டி அமைக்க வேண்டும். சூரிய ஒளிக்கதிர்கள் சமையல் அறைக்குள் வரும் வகையில் ஜன்னல் அமைப்பது சிறப்பானது. சமைப்பவர் கிழக்கு நோக்கியே சமைக்க வேண்டும். சமையலறையில் பாத்திரம் கழுவும் குழாய் வடகிழக்கில் அமைப்பது நல்லது. வடகிழக்கு மூலை மட்டுமே



தண்ணீர் குழாய் அமைக்க நல்ல இடம் இல்லாவிட்டால் பெண்களுக்கு ஆரோக்கிய குறைபாடு ஏற்படும்.

**சரியான திசை:** எந்த திசையில் சமையல் அறை வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது போல எந்த திசையில் சமையல் அறை கண்டிப்பாக இருக்கக்கூடாது என்றும் வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. வடகிழக்கில் சமையலறை வைத்தால் குடும்பத்தின் பொருளாதார நிலை பாதிக்கும். வடகிழக்கு எனப்படும் ஈசான்ய மூலையில் சமையல் அறை வரவே கூடாது. இது தண்ணீருக்கு மட்டும் ஏற்ற இடம். இங்கே அக்னி வைக்க கூடாது. சமையலறை இருப்பது தோஷத்தை கொடுக்கும். குடும்பத்தலைவியின் உடல் நலம் பாதிக்கப்படும். அக்னியில் தண்ணீர் எப்படி கொதிக்குமோ அதுபோல இங்கே சமையலறை அமைத்துவிட்டால் அந்த குடும்பத்தின் பொருளாதார நிலையில் பாதிப்பு ஏற்படும்.

**உடல் நல பாதிப்பு:** தென்மேற்கு எனப்படும் கன்னி மூலையில் சமையலறை வைக்கவே கூடாது. உடல் நல பாதிப்பு வரும். துஷ்ட சக்திகளால் பாதிப்பு வரும் கடன் பிரச்சினை திருமண தடை, திருமண வாழ்க்கையில் பிரச்சினை ஏற்படும். அதே போல மேற்கு சமையலறையும் வரவு செலவு சரியாக போகும். நண்பர்கள் கூட விரோதிகளாவார்கள். நல்ல வாய்ப்புகள் கூட தட்டிப்போகும். தென்கிழக்கு பகுதிக்கு எதிர் மூலையான வடமேற்கு வாயுமூலலை பகுதியில் சமையல் அறை வைக்கலாம் ஆனால் அவ்வப்போது லேசாக உடல் நல பாதிப்பு ஏற்படும். தொழில் முன்னேற்றம் வரும் வாஸ்துபடி கட்டிடம் அமைந்தால் தோஷம் வர வாய்ப்பு இல்லை.


சமையலறையில் இதை மட்டும் வைக்காதீங்க..கிச்சனில் இந்த பொருள் இருந்தாலே வீட்டில் பணக்கஷ்டம் வந்துருமாம்

**வாஸ்து தோஷம் நீங்க:** வீட்டுக்குள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு பகுதிக்கு சமையலறையை மாற்ற இயலாத பட்சத்தில், இருக்கிற சமையலறைக்குள் சின்ன சின்ன மாற்றங்களை செய்யலாம். குறிப்பாக அடுப்பு மேடை கிழக்கு நோக்கி தென்கிழக்கு மூலையில் இருக்க வேண்டும். தவறான சமையல் அறை அமைப்பில் குடியிருப்பவர்கள் ஏழைகளுக்கு அன்னதானம் கொடுக்கலாம். குடும்பத்தில் வறுமை ஏற்படாது. இரவு நேரத்தில் உணவு கொஞ்சமாவது வைக்க வேண்டும்.

**உப்பு பாத்திரம்:** நம்முடைய உணவில் அதிகம் பயன்படுத்தப்படும் உப்பு மகாலட்சுமியின் அம்சம் நிறைந்தது. அந்த உப்பினை நாம் தினமும் கைகளால் எடுத்துதான் வணங்கி விட்டு சமையலுக்கு போட வேண்டும். அந்த உப்பினை நாம் சரியான இடத்தில் வைக்க வேண்டும். அப்போதுதான் உணவுப்பொருட்கள் நம்முடைய வீட்டில் குறைவில்லாமல் இருக்கும். பொதுவாக சமையல் அறையில் உப்பு போட்டு வைக்கும் பாத்திரத்தை மேலே செல்பில் வைக்கவே கூடாது. சமையல் செய்யும் மேடைக்கு கீழே குனிந்து எடுக்கும் வகையிலோ, கைக்கு எட்டும் இடத்திலோதான் வலது கை பக்கத்தில்தான் உப்பு வைக்க வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் கல் உப்பு வாங்கி கொட்டி வைப்பது செல்வ வளத்தை அதிகரிக்கும்.

**அன்னபூரணி:** நம்முடைய உணவில் ருசி கூடவும் ஆரோக்கியம் அதிகரிக்கவும் நாம் அன்னபூரணி தாயாரின் படத்தை சமையல் அறையில் மாட்டி வைப்பது சிறப்பானது. இதன் மூலம் வாஸ்து தோஷங்கள் இருந்தாலும் நீங்கும். காசி அன்னபூரணி உலகிற்கே உணவு கொடுப்பவள் எனவே நாம் அன்னபூரணியின் படத்தினை மாட்டி வைப்பதன் மூலம் உணவு தோஷங்கள் இருந்தாலும் நீங்கும். செல்வ செழிப்பு அதிகரிக்கும். எதையும் நம்பிக்கையோடு செய்தால் நல்லவை தேடி வரும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No

8122664699

## மயிலை ஆதி கேசவன் பெருமாள்



சிறப்பு அலங்காரத்தில் சென்னை மயிலை ஆதி கேசவன் பெருமாள்.

## திருப்பூர் மாநகராட்சி மன்ற கூட்டம்




திருப்பூர் மாநகராட்சி மன்ற கூட்டம் மேயர் தினேஷ்குமார் தலைமையில் நேற்று நடந்தது.

## 2 வகுப்பறை கட்டிடம் திறப்பு



தஞ்சாவூர் மாவட்டம் மானோஜிப்பட்டி அரசு உயர் நிலைப்பள்ளியில் 2 வகுப்பறை கட்டிடத்தினை முதல்வர் ஸ்டாலின் காணொளிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அந்தப் பள்ளியல் கலெக்டர் பிரியங்கா பங்கஜம், குத்துவிளக்கேற்றினார்.

## மாணவிகளுக்கு கலெக்டர் சான்றிதழ் வழங்கினார்



உலக சுற்றுலா தினத்தையொட்டி நடத்தப்பட்ட ஓவியப்போட்டி, கவிதை, கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பரிசு, பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

## முதலமைச்சர் கோப்பைக் கான கேரம் விளையாட்டுப் போட்டி



சேலம் நேரு கலையரங்கில் முதலமைச்சர் கோப்பைக் கான கேரம் விளையாட்டுப் போட்டி நேற்று தொடங்கியது. 250க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

# நிலக்கோட்டை அருகே உச்சணம்பட்டியில், ரூபாய் 32 இலட்சம் மதிப்பிலான புதிய ஊராட்சி மன்ற கட்டிடம் திறந்துவைக்கப்பட்டது

**நிலக்கோட்டை,அக்.07:** நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உச்சணம்பட்டியில் ரூபாய் 32 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நரியூத்து ஊராட்சி மன்ற புதிய கட்டிடத்தை ஒன்றிய செயலாளர் சௌந்தரபாண்டியன் திறந்து வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட நரியூத்து ஊராட்சி உச்சணம்பட்டியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பழனி எம்எல்ஏவும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான ஐபி. செந்தில்குமார் பரிந்துரைப்படி, ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவுப்படி ரூபாய் 32 லட்சம் ஒதுக்கப்பட்டு புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கட்டப்பட்டது.

அதனை நேற்று நிலக் கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் சௌந்தரபாண்டியன் பொது



மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து குத்து விளக்கேற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் குமரவேல், உதவி பொறியாளர் வேல்மணி, ஊராட்சி செயலர் கணேசன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஆரோக்கியம், அழகேசன்,இளைஞரணி அமைப்பாளர் செம்பர் சுரேஷ், மாணவரணி துணை அமைப்பாளர் பெனிட் மற்றும் திமுக நிர்வாகிகள் பதினெட்டாம்படி,பால்ராஜ்,குமரவேல், கணேசன், தங்கவேல், ராஜேந்திரன், நாகரத்தினம், சேகர்,அஜித், சுப்ரமணி, முருகேசன்,குணா, கணேசன் ,ராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சீர்காழியில் பசுமை சேவை சங்கம் சார்பில் 1 லட்சம் பனை விதை நடும் பணி துவக்கவிழா

**சீர்காழி , அக் , 07 :** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் பசுமை சேவை சங்கம் சார்பில் 1லட்சம் பனை விதை நடும் பணி துவக்க விழா சீர்காழி உப்பனாற்று கரை அருகே நடைப்பெற்றது. விழாவிற்கு பசுமை சேவை சங்க தலைவர் பொறியாளர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

நகர் மன்ற உறுப்பினர் எஸ்.வேல்முருகன் முன்னிலை வகித்தார். சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், மயிலாடுதுறை முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஜெக. வீரபாண்டியன் ஆகியோர் ஒரு லட்சம் பனன விதை நடும் பணியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள்.

சீர்காழி தாலுக்கா வியாபாரிகள் சங்க பொது செயலாளர் கே.துரைராஜ் , மாநில ஊழல் தடுப்பு இயக்க தலைவர் ஜெக.சண்முகம் மற்றும் கோடங்குடி சங்கர் , பேராசிரியர் எஸ்.ஜெயராமன், சமூக ஆர்வலர் அப்பர் சுந்தரம், சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர், இராம. சிவசங்கர், சுற்று சூழல் பாதுகாப்பு இயக்கம் மதிவாணன் , சமூக ஆர்வலர் தில்லை நடராஜன் , தமிழக வாழ்வுரிமை கட்சியின் சீர்காழி தொகுதி செயலாளர் ரமேஷ், பசுமை சேவை சங்க நகர செயலாளர் சம்பத் கணேஷ் , பொருளாளர் சத்தியநாராயணன் , மயிலாடுதுறை மாவட்ட அனைத்து நாட்டுப் புற கலைஞர்கள் நல சங்க மாவட்ட செயலாளர் கிங்பைசல் ஆகியோர் வாழ்த்து தெரிவித்து விழாவில் கலந்து கொண்டார்கள்.

பசுமை சேவை சங்கத்தின் பொது செயலாளர் மதியழகன் நன்றி கூறினார்.



# காமதேனு சாரீட்டீஸ் நிர்வாகிகளுக்கு ஆளுநர் ரவி பொன்னாடை போர்த்தினார்

**சென்னை, அக். 7:** காமதேனு சாரிட்டீஸ் சார்பாக திருவருட்பிரகாச வள்ளலாரின் 202வது ஜெயந்தியை முன்னிட்டு சென்னை ஆளுநர் மாளிகையில் நடந்த விழாவில் காமதேனு சாரீட்டீஸ் நிர்வாகிகளுக்கு நமது சேவையைப் பாராட்டி மேதகு ஆளுநர் திரு. R. N. ரவி அவர்கள் பொன்னாடை போர்த்தி திருவருட்பா நூல் பரிசாகப் வழங்கி கவுரவித்தார்கள் .

காமதேனு சாரிட்டீஸ் சார்பாக கவர்னருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. மேலும் காமதேனு சாரிட்டீஸ், திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் வள்ளலார் ஆசிரம வளாகத்தில் அன்ன சத்திரம் கட்டி கொடுக்கப்பட்டது மற்றும்



ஜவ்வாது மலை பழங்குடியினர் வாழும் பகுதியில் நான்கு கல்வி தான மையம் சாது ஜானகிராம சுவாமிகளின் வேண்டுகோள் படி காமதேனு சாரிட்டீஸ் மூலம் நடைபெற்று வருகிறது.

# ஊர்வலம் வந்த புனித தெரேசா சொரூப்



புதுச்சேரி மாநிலம் மாஹே பிராந்தியத்தில் ஊர்வலம் வந்த புனித தெரேசா சொரூப்.

## புதிதாக கட்டப்பட்டுள்ள பாலம் திறப்பு



தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி அருகே புதிதாக கட்டப்பட்டுள்ள பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் கீதா ஜீவன் திறந்து வைத்தார்.

## அனைத்து மாணவர்களுக்கும் தமிழ்நாடு அரசின் விலையில்லா பாடநூல்கள் மற்றும் நோட்டுகள்



**புதுக்கோட்டை,அக். 7:** அரசுப் பள்ளிகளில் இரண்டாம் பருவம் தண்டலை நடுநிலைப் பள்ளியில் விலை இல்லா பொருட்கள் வழங்கப்பட்டன

நேற்று முதல் பருவம் விடுமுறைக்கு பின்பு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளும் திறக்கப்பட்டன. புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் சந்திரசேகரன் தலைமையில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களுக்கும் தமிழ்நாடு அரசின் விலையில்லா பாடநூல்கள் மற்றும் நோட்டுகள் வழங்கப்பட்டன.

முதல் நாளில் மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு வருகை புரிந்து இருந்தனர் நிகழ்வில் ஆசிரியர்கள் மு.சீனிவாசன் தேன்மொழி , மாலதி, மற்றும் சரண்ராஜ், பிரதீபா ஆகியோர் இருந்தனர்.

## பழங்குடியின விவசாயிகளுக்கு ஆடுகளை கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார்



காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகத்தில் பழங்குடியின விவசாயிகளுக்கு தொல்குடியினர் வேளாண்மை மேலாண்மை கால்நடை வளர்ப்பு மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ஆடுகளை கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார்.

## மக்களிடம் கலெக்டர் குறைகளை கேட்டறிந்தார்



காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று மக்களிடம் கலெக்டர் கலைச்செல்வி குறைகளை கேட்டறிந்தார்.




# தொழில்நுட்ப கல்லூரியில் தமிழ் மன்ற விழா

**திருவாரூர், அக். 7:** வலங்கைமான் அரசினர் பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் தமிழ் மன்ற விழாசிறப்பாக நடைபெற்றது .

இதில் முதல்வரின் நேர்முக உதவியாளர் இராம . வேல்முருகன் வரவேற்புரை நிகழ்த்தினார்கள் . அனுஷா செல்வரத்தினம் கனடா தலைமை தாங்கி நடத்தினார்கள். கல்லூரி முதல்வர் Er. ட. ஜான் லூயிஸ் வழி நடத்திச் சென்றார் . சிறப்பு விருந்தினர் குத்து விளக்கை ஏற்றி தலைமை உரை ஆற்றினார். ஜெயலட்சுமி உதயகுமார் இலங்கை சிறப்புரை வழங்கினார்கள். முதலாம் ஆண்டு துறைத் தலைவர் டாக்டர் .கே. முருகன் முன்னிலை வகித்து பேசினார் .பல கவிஞர்கள் புலவர்கள் கவி மன்றத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் . கல்லூரி மாணவ




மாணவிகள் கவியரங்கத்தில் கலந்து கொண்டார்கள் . தமிழ் மன்ற பொறுப்பாளர் மதன் விரிவுரையாளர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மாணவன் ஆனந்த் சர்மா தவில் வாசித்து விழாவை சிறப்பித்தான்.

கல்லூரி மாணவிகள் ரங்கோலி வரைந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாடினர்.

இவ்விழாவில் 250 க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் மற்றும் நாட்டு நலப்பணி திட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. சீத்தாராமன் நன்றியுரை வழங்கினார்கள் .

விழா தொகுப்பாளர்களாக திருமதி சுகந்தி தமிழ் ஆசிரியை மற்றும் புவனேஸ்வரி இருவரும் தொகுத்து அளித்தார்கள் . நாட்டுபண் ஒலிக்க விழா நிறைவு பெற்றது .

விழா ஏற்பாடுகளை முதல்வரின் நேர்முக உதவியாளர் இராம. வேல்முருகன் செய்தார்கள் .

# சுற்றுலா: இரவே இல்லாத நாடு, தலைநகரம் இல்லாத குடியரசு ஒரு பார்வை!

உலகில் 195 க்கும் மேற்பட்ட நாடுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒரு சுவாரஸ்யமான விஷயங்களை கொண்டுள்ளது அவற்றில் சில இங்கே உங்கள் பார்வைக்கு...

சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்ட்ரியா நாடுகளை தனது அரணாகக் கொண்டிருக்கும் நாடு லிச்டென்ஸ்டெய்ன். ஐரோப்பியாவின் மிகப் பணக்கார நாடான இது. மிகச் சிறியநாடுமட்டுமல்ல, இந்த நாட்டுக்கு என்று தனி விமான நிலையம் கிடையாது, சொந்தமாக பணமோ நாணயமோ வெளியிட்டது இல்லை. அவ்வளவுஏன், உள்ளூர் மொழி என்று எதையும் அறிவித்ததில்லை. ஆனால், உலகிலேயே லிச்டென்ஸ்டெய்ன் நாடுதான், மிகவும் பணக்கார நாடாகவும் பாதுகாப்பான நாடாகவும் அறியப்படுகிறது.

3 கோடி மக்கள் தொகை கொண்ட நாடு நேபாளம். இங்கு முழுவதும் ஒரே ஒரு பயணிகள் ரயில் மட்டுமே இயங்கிறது என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா?. ஆம். உண்மைதான். இந்த ரயில் மிக மெதுவாக செல்லுமாம். சுமார் 38 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகும் என்று கூறப்படுகிறது.

தலைநகரம் இல்லாத ஒரு நாடு இருக்கிறது என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா? இந்த நாட்டின் பெயர் நவ்ரு (NAURU). இது மைக்ரோனேஷியா தெற்கு பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள சிறிய மற்றும் பெரிய தீவுகளின் குழுவால் ஆன ஒரு தீவுக்கூட்டம் ஆகும். இந்த நாடு 21 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. தலைநகரம் இல்லாத உலகின் ஒரே குடியரசு நாடு இதுவாகும். இங்கு பழங்குடியினர் பாரம்பரியமாக ஆட்சி செய்கின்றனர்.



லக்சம்பர்க் ஐரோப்பாவில் மிகவும் செல்வாக்கு பெற்ற நாடுகளில் ஒன்றாக கருதப்படுகிறது, இங்கு ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பயணம் செய்வது முற்றிலும் இலவசம். இது அந்த நாட்டு மக்களுக்கு மட்டும் அல்ல அங்கு சுற்றுலா வரும் அனைத்து மக்களுக்கும் தான்., அனைத்து வகையான பொதுப் போக்குவரத்து சேவைகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் உலகிலேயே முதல் நாடு இதுதான். இதில் பேருந்து, ரயில் மற்றும் டிராம் ஆகியவை அடங்கும்.

நார்வேதான் இந்த பூமியில் கடைசி நாடாகும். பூமி தனது அச்சில் சுழலும் வட துருவத்திற்கு அருகில் இந்த நாடு அமைந்துள்ளது. அழகான நாடான இங்கே இரவே இல்லை என்பது பலருக்கும் தெரியாது. வடக்கு நார்வேயில் உள்ள ஹேவர்ஃபெஸ்ட் நகரில், சூரியன் 40 நிமிடங்கள் மட்டுமே மறைகிறது. எனவே, இது நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு என்றும் அழைக்கப்படுகிறது. இங்கு 40 நிமிடங்கள் மட்டுமே இருட்டாக இருக்கும், மீதமுள்ள 23 மணி நேரம் 20 நிமிடங்களுக்கு இந்த நகரம் ஒளியால் நிறைந்துள்ளது.

உயரமான மலைகளால் சூழப்பட்ட ஒரு ஆப்பிரிக்க நாடுதான் லெசாதோ. இந்த நாடு கடல் மட்டத்தில் இருந்து 3,500 அடி உயரத்தில் உள்ளது. இந்த நாட்டின் மொத்த மக்கள் தொகை 22 லட்சம் பேர். லேசாதோ முழுக்க பசோதா என்னும் ஆப்பிரிக்க சமூகத்தினர் 99.7% உள்ளனர். உலகில் ஒரு நாடு முழுக்க ஒரே ஜாதியினர் இருப்பது இங்கு மட்டும்தான். இந்த மக்கள் பண்டு எனப்படும் ஆப்பிரிக்க மொழியை பேசுகின்றனர். தலையில் மொகார்ட்லோ என்ற தொப்பியை அணிகிறார்கள். இந்தத் தொப்பிதான் அவர்களின் தேசிய பாரம்பரியத்தின் சின்னம். அதனால்தான் அவர்களின் தேசியக் கொடியிலும் இந்தத் தொப்பியின் சின்னம் உள்ளது.

நதிகளின் நிலம் என்று அழைக்கப்படும் வங்கதேசத்தில் பத்மா மற்றும் ஜமுனா போன்ற 700-க்கும் மேற்பட்ட ஆறுகள் பாய்கின்றன. இந்த அனைத்து நதிகளிலும் வெயில் காலமானாலும், மழைக்காலம் ஆனாலும் எப்போதும் வற்றாமல் தண்ணீர் பாய்ந்து ஓடிக்கொண்டே இருக்கும். வங்கதேசத்தில் மிக முக்கியமான நதியான மேக்னா, இதன் பரந்த நீர்ப்பரப்பு இது உப்புநீர் மற்றும் இனிப்புநீர் கலந்த சிறப்பு சூழலியலை வழங்குகிறது.

உலகின் பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அன்டோரா . இங்கு குற்றச்சம்பவங்கள் நடப்பதே கிடையாது. இந்த நாட்டில் இதுவரை குற்றம், மோசடி, வன்முறை என எதுவுமே பதிவானது கிடையாது. பிக்பாக்கெட், திருட்டு, பணப்பையை பறித்தல் போன்ற சிறிய சிறிய குற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. உலகில் ராணுவமே இல்லாத 21 நாடுகளில் அண்டோராவும் ஒன்று.

## வேலைவாய்ப்பு கார்னர்

### அருங்காட்சியகத்தில் அலுவலக உதவியாளர் வேலைவாய்ப்பு

நிறுவனம் : Visvesvaraya Industrial & Technological Museum (VITM)

வகை : மத்திய அரசு வேலை

காலியிடங்கள் : 12

பணியிடம் : இந்தியா

ஆரம்ப தேதி : 20.09.2025

கடைசி தேதி : 20.10.2025

விஸ்வேஸ்வரய்யா தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகத்தில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களை நிரப்ப தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. பதவி: Exhibition Assistant ‘A’

சம்பளம்: மாதம் Rs.59,600/-

காலியிடங்கள்: 01

கல்வி தகுதி: Graduate in Visual Art / Fine Arts / Commercial Arts.

வயது வரம்பு: 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2. பதவி: Technician ‘A’

சம்பளம்: மாதம் Rs.38,908 /-

காலியிடங்கள்: 06

கல்வி தகுதி: SSC/10th or Matriculation with certificate

வயது வரம்பு: 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. பதவி: Office Assistant (Gr.III)

சம்பளம்: மாதம் Rs.38,908/- காலியிடங்கள்: 05

கல்வி தகுதி: 12th or its equivalent.

வயது வரம்பு: 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 25 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப கட்டணம்:

Women/ ST/ SC/ Ex-s/ PWD கட்டணம் கிடையாது

Others Rs.750 + 18% GST (Rs.135.00)

தேர்வு செய்யும் முறை:

முக்கிய தேதிகள்:

விண்ணப்பிக்க ஆரம்ப தேதி: 20.09.2025

விண்ணப்பிக்க கடைசி தேதி: 20.10.2025

விண்ணப்பிக்கும் முறை: விண்ணப்பதாரர்கள் www.vismuseum.gov.in இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்

## சட்டசபை அலுவல் ஆய்வுக்குழு 13-ந்தேதி ஆலோசனை

**சென்னை, அக்.7:**

தமிழக சட்டசபை வரும் 14-ந் தேதி கூடும் நிலையில் 13-ந் தேதியன்று அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

தமிழக சட்டசபையின் இந்த ஆண்டின் முதல் கூட்டம் ஜனவரி 6-ந் தேதி கவர்னர் உரையுடன் தொடங்கியது. அதைத்தொடர்ந்து மார்ச் 14-ந் தேதி சட்டசபையில் 2025-2026-ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. மறுநாள் வேளாண் பட்ஜெட் தாக்கல் ஆனது.

அதன்பின்னர் மார்ச் 24-ந் தேதி முதல் ஏப்ரல் 29-ந் தேதி வரை துறை வாரியாக மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்றது. பிறகு தேதி குறிப்பிடாமல் சட்டசபை கூட்டம் தள்ளிவைக்கப்பட்டது.

6 மாத கால இடைவெளியில் சட்டசபை மீண்டும் கூட்டப்பட வேண்டும் என்ற அவை விதியின் அடிப்படையில், தமிழக சட்டசபை மீண்டும் வருகிற 14-ந் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு கூடுகிறது. இதற்கான அறிவிப்பை சபாநாயகர் அப்பாவு வெளியிட்டு இருந்தார்.

இந்த நிலையில் அவையை எத்தனை நாட்கள் நடத்த வேண்டும்? என்னென்ன அலுவல்களை மேற்கொள்ள வேண்டும்? என்பதை முடிவு செய்வதற்கான அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் வருகிற 13-ந் தேதி கூடுகிறது. இந்த கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை சபாநாயகர் அப்பாவு அறிவிப்பார்.

அலுவல் ஆய்வுக்குழு எடுக்கும் முடிவுகளின்படி சட்டசபை கூடும் நாட்கள் நிர்ணயம் செய்யப்படும். 3 அல்லது 4 நாட்கள் சட்டசபை நடைபெறும் என்று கூறப்படுகிறது.

கடந்த ஏப்ரலில் சட்டசபை ஒத்தி வைக்கப்பட்ட பிறகு மறைந்த முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் 8 பேரின் இறப்பு குறித்த இரங்கல் குறிப்பு, 14-ந் தேதியன்று அவையில் தெரிவிக்கப்படும். மறைந்த வால்பாறை தொகுதி எம்.எல்.ஏ. அமுல் கந்தசாமி மற்றும் சில முக்கிய பிரமுகர்களின் மரணம் குறித்து இரங்கல் தீர்மானமும் அன்று நிறைவேற்றப்படும்.

கடந்த 27-ந் தேதி கரூரில் த.வெ.க. கூட்டத்தில் விஜய் பேசியபோது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பலியான 41 பேரின் மரணம் தொடர்பான இரங்கல் குறிப்பையும் சபாநாயகர் அப்பாவு வாசிப்பார் என்றும், அவர்களுக்கும் சட்டசபையில் அஞ்சலி செலுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது. இந்த இரங்கல் நிகழ்ச்சியோடு அன்றைய அவை நிகழ்ச்சிகள் முடிவுக்கு வரும்.

அதைத்தொடர்ந்து அவைகூடும் அடுத்தடுத்த நாட்களில் பல்வேறு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. முக்கிய பிரச்சினைகளில் அரசினர் தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்மொழிய வாய்ப்பு உள்ளது. 2025-26-ம் ஆண்டு கூடுதல் செலவினங்களுக்கான மானிய கோரிக்கை, சட்டமன்றத்தில் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

## மத்திய பிரதேசத்தில் 11 குழந்தைகளின் இறப்புக்கு காரணமான இருமல் மருந்தை பரிந்துரைத்த டாக்டர் கைது

**போபால், அக்.7:**

மத்திய பிரதேசத்தில் 11 குழந்தைகளின் இறப்புக்குக் காரணமாகக் கூறப்படும் இருமல் மருந்தைப் பரிந்துரைத்த டாக்டர் பிரவீன் சோனி கைது செய்யப்பட்டார்.

மத்திய பிரதேசத்தில் சிந்த்வாராவில் கடந்த மாதம் 7ம் தேதி முதல் குழந்தைகள் சிலருக்கு சிறுநீரகச் செயலிழப்பு ஏற்பட்டதாகக் கூறிய நிலையில், அக்டோபர் 3ம் தேதி வரையில் 11 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான முதல் தகவல் அறிக்கையில், சளி, இருமல், காய்ச்சல் தொல்லையால் பாராசியாசில் உள்ள அரசு மருத்துவமனையில் குழந்தைகள் அனுமதிக்கப்பட்டனர். இந்தக் குழந்தைகளுக்கு ‘கோல்ட்ரிப்’ மற்றும் ‘நெக்ஸ்ட்ரோ’ ஆகிய இருமல் மருந்துகளை டாக்டர் பிரவீன் சோனி பரிந்துரைத்தார். அடுத்த சில நாள்களிலேயே குழந்தைகளுக்கு சிறுநீர் கழிப்பதில் பிரச்சினை, முக வீக்கம், வாந்தி போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டு, சிறுநீரகம் செயலிழந்து உயிரிழந்தது தெரிய வந்தது.

அண்டை மாநிலமான ராஜஸ்தானின் சிகாரிலும், 2 குழந்தைகள் சிறுநீரகங்கள் செயலிழந்து உயிரிழந்தன.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த மருந்து உற்பத்தி நிறுவனமான ஸ்ரீசென் பார்மா நிறுவனம் தயாரித்த கோல்ட்ரிப் இருமல் மருந்தில் ஆபத்தான டைஎத்திலின் கிளைக்கால் இருந்தது தெரிய வந்தது.

பெயிண்ட், மை போன்ற பொருள்களைத் தயாரிக்க பயன்படுத்தப்படும் அந்த ரசாயனம், சம்பந்தப்பட்ட இருமல் மருந்துகளில் கலந்திருப்பதாக சந்தேகிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஸ்ரீசென் பார்மா நிறுவனத்தின் மீது மத்திய பிரதேச அரசு வழக்குப்பதிவு செய்ததுடன், 15-க்கும் மேற்பட்ட மருந்துகளுக்குத் தடையும் விதித்தது. மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மட்டுமின்றி தமிழகம் மற்றும் கேரளத்திலும் இந்த மருந்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உயிரிழந்த குழந்தைகளில் பெரும்பாலானோர் பிரவீன் சோனியின் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதுடன், அவர்களுக்கு மருந்தைப் பரிந்துரைத்ததால், டாக்டர் பிரவீன் சோனியை போலீசார் கைது செய்துள்ளனர். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## சிவகாசி அருகே பட்டாசு கடையில் வெடி விபத்து

**விருதுநகர், அக்.7:**

சிவகாசி அருகே பட்டாசு கடையில் திடீரென ஏற்பட்ட வெடி விபத்தில் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டாசுகள் தீயில் வெடித்து சிதறியது.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே கோனம்பட்டியில் உள்ள ஒரு தனியார் பட்டாசு கடை ஒன்று இயங்கி வந்தது. இந்த கடையில் இன்று காலை வழக்கம் போல் பணியாளர்கள் பட்டாசுகளை விற்பனை செய்து கொடிருந்தனர். அப்போது திடீரென பட்டாசுகளை சேகரித்து வைத்திருந்த குடோனில் இருந்து புகை வெளியேறியது. இதனைக்கண்ட பணியாளர்கள் அலறியடித்துக்கொண்டு வெளியில் சென்றனர்.

இதனையடுத்து பட்டாசுகள் அடுத்தடுத்து வெடிக்க தொடங்கின.

பின்னர் இது குறித்து தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து பட்டாசு கடையில் ஏற்பட்டுள்ள தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இந்த பட்டாசு கடையில் இருந்த பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டாசுகள் வெடித்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது. அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

## 10 ஆயிரம் சன்மார்க்க அன்பர்கள் பங்கேற்கும் வகையில் மாநாடு: அமைச்சர் சேகர்பாபு தகவல்

**சென்னை, அக்.7:**

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் கடலூர் மாவட்டம், வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் நடைபெற்ற அருட்பிரகாச வள்ளலாரின் 203ம் வருவிக்க உற்றநாள் விழாவில் கலந்து கொண்டு, சன்மார்க்க கொடியினை ஏற்றி வைத்து, அன்னதானத்தை தொடங்கி வைத்தனர். பின்னர், வள்ளலார் சர்வதேச மைய “பி” பிரிவில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:





வள்ளலாரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இந்த ஆட்சி ஏற்பட்டவுடன், தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, வடலூரில் வள்ளலார் சர்வதேச மையத்தை அமைப்பதற்கு ரூ.99.90 கோடியை முதலமைச்சர் அரசு நிதியாக வழங்கினார்.

இந்த சர்வதேச மையம் அமைக்க பல்வேறு நீதிமன்ற வழக்குகளுக்கு பிறகு “பி” சைட் பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, வரும் டிசம்பர் மாதம் வள்ளலாரின் அருந்தவ சீடர்களுக்கு அர்ப்பணிக்கப்படும். மற்றொரு பகுதியான “ஏ” சைட்டி-ல் கட்டுமானப் பணி மேற்கொள்வதற்கு வழக்கு நிலுவையில் இருப்பதால், நீதிமன்ற உத்தரவிற்கு பின் அந்த பணிகளும் மேற்கொள்ளப்படும்.

பெருவெளிக்கு, வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் இடத்தால் எவ்வித இடர்பாடும் இல்லை என்று நீதிமன்றத்தில் நாங்கள் எடுத்து வைத்த வாதத்தின் அடிப்படையில் ஒரு பகுதியில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கின்றது. மற்றொரு பகுதியில் உள்ள பல்வேறு ஆக்கிரமிப்புகளை கணக்கிட்டு, அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டதன்படி அறிக்கை அளித்துள்ளோம். நிச்சயமாக நீதி வெல்லும், வள்ளலார் சர்வதேச மையம் திறந்தமனதோடு, எவ்வித காழ்ப்புணர்ச்சிக்கும் இடம் தராமல் அவரது புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் அமைத்திட வேண்டும் என்ற இந்த நற்பணிக்கு வள்ளலாரின் ஆன்மா எல்லா வகையிலும் துணை நிற்கும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கலெக்டர் சிபி ஆதித்ய செந்தில்குமார், காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன், இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் சி.ஜோதி, உதவி ஆணையர் ஆர். சந்திரன், நிர்வாக அலுவலர் ஜெ.ராஜா சரவணகுமார், அரசு அலுவலர்கள் மற்றும் சன்மார்க்க அன்பர்கள் கலந்து கொண்டனர்.

# 80ல் சினிமாவை கலக்கிய 31 நட்சத்திரங்கள் சென்னையில் சங்கமம்

**சென்னை, அக்.7:**

1980கள் மற்றும் 90ம் ஆண்டு தென்னிந்திய திரையுலகை கலக்கிய நட்சத்திரங்கள் சென்னையில் சங்கமித்தனர். விடிய விடிய தங்கள் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

ராஜ்குமார் சேதுபதி, ஸ்ரீபிரியா இல்லத்தில் நடைபெற்ற இனிய நிகழ்வில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி திரைத்துறைகளை சேர்ந்த 31 நடிகர்கள் பங்கேற்றனர்.

ஒன்றாகப் படித்த பள்ளி, கல்லூரி நண்பர்கள் மீண்டும் கூடுவது போல 1980கள் மற்றும் 90களில் இந்திய திரையுலகை கலக்கிய நட்சத்திரங்கள் வருடத்திற்கு ஒரு முறை சந்தித்து நட்பை வலுவாக்கி, நினைவுகளை உயிர்ப்பித்து வருகின்றனர். கனமழை காரணமாக கடந்த ஆண்டு இந்த நிகழ்வு நடைபெறாத நிலையில், இந்த ஆண்டு இவர்களின் சந்திப்பு நடந்தேறியது. ஆர்ப்பாட்ட கொண்டாட்டமாக இல்லாமல் அன்பின் வெளிப்பாடாக இந்த நிகழ்வு நடைபெற்றது.



அன்பு, நட்பு, மற்றும் ஒற்றுமை நிறைந்த இந்த சங்கமத்தில் கலந்துகொண்டவர்கள் தங்கள் நினைவலைகளை பகிர்ந்து கொண்டனர்.

முதல் நாள் மாலையில் தொடங்கிய 'ரீயூனியன்' (சங்கமம்) மறுநாள் காலை வரை நடைபெற்றது.


பின்னர் அனைவரும் அடுத்த வருடம் ஒன்று கூடுவோம் எனும் உறுதியோடும் நீங்கா நினைவுகளோடும் விடைபெற்றனர்.

சிரஞ்சீவி, வெங்கடேஷ், ஜாக்கி ஷெராஃப், சரத்குமார், ராஜ்குமார் சேதுபதி, ஸ்ரீப்ரியா, நதியா, ராதா, சுஹாசினி, ரம்யா கிருஷ்ணன், ஜெயசுதா, சுமலதா, ரஹ்மான், குஷ்பூ, பாக்யராஜ், பூர்ணிமா பாக்யராஜ், லிஸ்ஸி, நரேஷ், சுரேஷ், ஷோபனா, மேனகா, ரேவதி, பிரபு, ஜெயராம், அஸ்வதி ஜெயராம், சரிதா, பானு சந்தர், மீனா, லதா, ஸ்வப்னா, ஜெயஸ்ரீ ஆகியோர் பங்கேற்றனர்.

---

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

## ஒரு வலைத்தளத்தில் குக்கீகளை ஏற்கலாமா? நிராகரிக்கலாமா?



ஒரு வலைத்தளத்தில் குக்கீகளை நீங்கள் ஏற்கும்போது அல்லது நிராகரிக்கும்போது என்ன நடக்கும்? அவை எவ்வாறு செயல்படுகின்றன?

நீங்கள் ஒரு வலைத்தளத்தைப் பார்வையிடும் போதெல்லாம், குக்கீகளை ஏற்க விரும்புகிறீர்களா? அல்லது நிராகரிக்க விரும்புகிறீர்களா? என்று கேட்கும் ஒரு பாப் அப் பேனர் தோன்றும்.

அதில் குக்கீகளை ஏற்கவோ நிராகரிக்கவோ விருப்பம் உள்ளது; ஆனால், அதன் அர்த்தம் உங்களுக்குத் தெரியுமா?

பலர் இதைப் புறக்கணித்து, குக்கீகளை ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் இடையே தேர்வு செய்கிறார்கள்.

ஆனால், குக்கீகளை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது குறிப்பிடத்தக்க வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது.

இந்தத் தேர்வு ஒரு வலைத்தளம் உங்களுக்காக எவ்வாறு செயல்படும் என்பதையும் உங்கள் தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு சேமிக்கப்படும் என்பதையும் தீர்மானிக்கிறது.

இது மீண்டும் மீண்டும் உள்நுழைவதில் இருந்து உங்களைக் காப்பாற்றும் அதே வேளையில், இது மீண்டும் மீண்டும் விளம்பரங்களுக்கும் வழிவகுக்கும்.

குக்கீகள் என்றால் என்ன, அவை எப்படி வேலை செய்கின்றன?

குக்கீகள் என்பவை வலைத்தளங்கள் உங்கள் சாதனத்தில் சேமிக்கும் சிறிய கோப்புகள் ஆகும்.

பயனர் அனுபவத்தை மேம்படுத்தவும், சரியான வலைத்தளச் செயல்பாட்டை உறுதி செய்யவும் தகவல்களைச் சேமிப்பதும் அவற்றின் முதன்மை நோக்கமாகும்.

நான்கு வகையான குக்கீகள் உள்ளன: அத்தியாவசியம், செயல்பாட்டு, பகுப்பாய்வு மற்றும் விளம்பரம்.

குக்கீகளின் செயல்பாடுகள்:

அத்தியாவசிய குக்கீகள்: வலைத்தளம் சரியாகச் செயல்பட இவை அவசியம். அவற்றை நிராகரிக்க முடியாது.

செயல்பாட்டுக் குக்கீகள்: இவை மொழி மற்றும் பிராந்திய விருப்பத் தேர்வுகள் போன்ற தகவல்களைச் சேமிக்கின்றன. பகுப்பாய்வு குக்கீகள்: இவை தளத்துடனான பயனரின் தொடர்பு பற்றிய தரவைச் சேமிக்கின்றன.

விளம்பர குக்கீகள்: இவை உலாவலைக் கண்காணித்துப் பயனருக்கு இலக்கு விளம்பரத்தைக் காட்டுகின்றன.

நீங்கள் அதை ஏற்றுக்கொண்டாலோ அல்லது நிராகரித்தாலோ என்ன நடக்கும்?

ஒரு பாப்-அப் தோன்றும் போது 'அனைத்தையும் ஏற்றுக்கொள்' என்பதைத் தேர்ந்தெடுத்தால், அனைத்து வகையான குக்கீகளுக்கும் முழு அணுகலைப் பெறுவீர்கள். இதன் பொருள் விளம்பரதாரர்களும் மூன்றாம் தரப்பினரும் உங்கள் உலாவல் வரலாற்றைக் கண்காணிக்கலாம் மற்றும் இந்தத் தகவலின் அடிப்படையில் இலக்கு விளம்பரங்களைக் காண்பிக்கலாம்.

அனைத்து குக்கீகளையும் நிராகரிப்பது உங்கள் தனியுரிமையைப் பராமரிக்கும். ஆனால் உங்கள் வலைத்தள அனுபவம் குறைவாக இருக்கலாம் மற்றும் ஒவ்வொரு முறையும் உள்நுழைவது போன்ற சிக்கல்களை நீங்கள் சந்திக்க நேரிடும்.

---

# குவாரிக்குத் தடை: திருமங்கலம் மக்களின் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி; - ஆர்.பி. உதயகுமார் பெருமிதம்

**மதுரை, அக்.7:**

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட திருமால் கிராமத்தில் இயங்கி வந்த குவாரியின் அனுமதி ரத்து செய்யப்பட்டதற்கு, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் பெருமிதம் தெரிவித்தார். இது, "மக்களுக்காகத் தான் திட்டம், திட்டங்களுக்காக மக்கள் அல்ல" என்ற போராட்டக் களத்திற்கு கிடைத்த வெற்றி என்றும் அவர் கூறினார்.

மதுரை மாவட்டத்தில் உள்ள சோழவந்தான், திருமங்கலம், உசிலம்பட்டி உள்ளிட்ட பல தொகுதிகளிலும் வேளாண் விளைநிலங்கள், நீர்வழித்தடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடும் வகையில், குடியிருப்புகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அழுத்தமான வெடிகள் வைத்து பாறைகள் தகர்க்கும் குவாரிகள் இயங்கி வருவதால் மக்கள் பாதிப்படைந்து வருகின்றனர்.

இதனால் குடியிருப்புகள் சேதமடைவதுடன், நோய் தொற்றுகளும் ஏற்படுவதாகக் குற்றம் சாட்டிய உதயகுமார், இந்த அபாயகரமான சூழ்நிலையைத் தடுத்து நிறுத்தி விவசாயத்தையும், மக்களின் வாழ்வாதாரத்தையும்



பாதுகாக்க வேண்டும் என்று மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிவித்தார்.

திருமால் கிராமப் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி மக்களின் கோரிக்கையை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல எடப்பாடி பழனிசாமியின் வழிகாட்டுதலின்படி, அ.தி.மு.க. இந்தப் போராட்டங்களை முன்னெடுத்தது. திருமங்கலம் தொகுதியில், திருமால் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள், தாய்மார்கள் மற்றும் விவசாயிகள் கனிம வளங்கள் அதிக அளவில் சுரண்டப்படுவதைத் தடுத்து நிறுத்த மன உறுதியுடன் போராடினர்.

இந்த மக்கள் நலன் சார்ந்த போராட்டத்தை மாவட்ட ஆட்சியர் கனிவுடன் பரிசீலனை செய்து, மாவட்ட வருவாய் அலுவலர், கனிமவளத்துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

இதையடுத்து, காலை 6 மணிக்குத் தொடங்கிய அறப்போராட்டம் நள்ளிரவு 12 மணி அளவில் மாபெரும் வெற்றி அடையும் வகையில், அந்தக் குவாரியின் அரசாணை ரத்து செய்யப்பட்டுள்ளது.

"மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என வாழ்ந்த தலைவர்களின் மறுவடிவமாக எடப்பாடி பழனிசாமி செயல்படுகிறார். அதேபோல, மக்களுக்காகத் தான் திட்டம், திட்டங்களுக்காக மக்கள் அல்ல என்று தொடர்ந்து போராடி வருவதால்தான் இந்தப் போராட்டக் களம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது, என்றும் ஆர்.பி. உதயகுமார் தெரிவித்தார்.

இந்த வெற்றியைப் பெற்றுத் தந்த மாவட்ட ஆட்சியர், போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் பத்திரிகை ஊடக நண்பர்கள் அனைவருக்கும் அவர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். தொடர்ந்து மக்களுக்காகப் போராடுவேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

---

# மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு: தேர்தலுக்குள் நடத்த கட்டாயப்படுத்தவில்லை; அமைச்சர் சேகர் பாபு பேட்டி



**மதுரை, அக்.7:**

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கை வரும் தேர்தலுக்குள் நடத்த வேண்டும் என யாரையும் கட்டாயப்படுத்தவில்லை, கோயிலில் 186 திருப்பணிகள் பிப்ரவரிக்குள் நிறைவு

பெற்று குடமுழுக்கு நடைபெறும் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார். மதுரையில் நேற்று தமிழ்நாடு ஹோட்டலில், மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் குடமுழுக்கு தொடர்பான முன்னேற்பாடு கூட்டம் அமைச்சர்கள் சேகர்பாபு, பி.மூர்த்தி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர், ஆட்சியர் பிரவீன்குமார், மாநகராட்சி ஆணையர் சித்ரா, மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன், கோயில் இணை ஆணையர் என். சுரேஷ் மற்றும் அறங்காவலர்கள் பங்கேற்றனர். பின்னர், அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் 2009-ல் குடமுழுக்கு நடந்தது. பக்தர்கள் கோரிக்கையை ஏற்று குடமுழுக்கு நடத்த 186 திருப்பணிகள் ரூ.23 கோடியே 70 லட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 117 பணிகள் கோயில் நிதி ரூ.8.90 கோடியிலும், 69 பணிகள் உபயதாரர் நிதி ரூ.14.80 கோடியிலும் டிசம்பருக்குள் முழுமைபெறும்.

இதில் 2018 பிப்ரவரியில் தீ விபத்தில் வீர வசந்தராயர் மண்டபம் சேதமடைந்ததால், ரூ.35 கோடியே 30 லட்சத்தில் சீரமைப்பு பணிகள் நடந்து வருகின்றன. 79 தூண்களில் 18 தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. தேவையான 15 அடி நீள கற்கள் கிடைக்காமல் பணியில் தொய்வு ஏற்பட்டது. இன்னும் 61 தூண்கள் வர வேண்டியுள்ளது. மீதமுள்ள தூண்கள் அக்.15-க்குள் வந்துவிடும் என பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வீரவசந்தராயர் மண்டபத்தை தவிர்த்து குடமுழுக்கு நடத்தலாமா? என சிவாச்சாரியார்களிடம் ஆலோசித்து வருகிறோம். நடத்தலாம் என்றால் டிசம்பரிலேயே நடத்தி விடுவோம். வீர வசந்தராயர் மண்டபத்தோடு சேர்த்துதான் நடத்த வேண்டுமென்றால் பிப்ரவரிக்குள் குடமுழுக்கு பணிகள் நிறைவு பெறும். 18 உபகோயில்களில் 9 கோயில்களில் குடமுழுக்கு நடந்துள்ளது. நவம்பருக்குள் 4 உபகோயில்களுக்கும், பிப்ரவரிக்குள் அனைத்து கோயில்களுக்கும் குடமுழுக்கு நடத்தப்படும். 2026 பிப்ரவரிக்குள் மீனாட்சி அம்மன்

கோயில் திருப்பணிகள் நிறைவடைந்து கும்பாபிஷேகம் நடைபெறும். வரும் தேர்தலுக்குள் குடமுழுக்கு நடத்த வேண்டும் என யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. இதற்கும் எங்களது ஆன்மிக பணிக்கும் சம்பந்தம் இல்லை. போர்க்கால அடிப்படையில் அனைத்து பணிகளையும் கையாள்கிறது திமுக அரசு. இவ்வாறு அவர் கூறினார்.

---

## க்ரைம் கார்னர்

### சூளைமேடு பகுதியில் ஓஜி கஞ்சா: 4 பேர் கைது

**சென்னை, அக்.7:**

சென்னை சூளைமேடு பகுதியில் ஓஜி கஞ்சா மற்றும் கஞ்சா ஆயில் வைத்திருந்த 4 பேரை போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர் கைது செய்தனர்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண் உத்தரவின்பேரில், போதை பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு, சென்னை பெருநகரில் போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு குற்றவாளிகளையும், வலைபின்னல் தொடர்புகளில் உள்ளவர்களையும் கண்டறிந்து கைது செய்து, உரிய நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, போதை பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல்குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல்குழுவினர் மற்றும் சூளைமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, சூளைமேடு, கமலா நேரு நகர் பகுதியில் சந்தேகப்படும்படி நின்றிருந்த 4 நபர்களை பிடித்து விசாரணை செய்து, அவர்களை சோதனை செய்தபோது, ஓஜி கஞ்சா, கஞ்சா ஆயில் உள்ளிட்ட போதைப்பொருள்கள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில் சூளைமேடு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, போதைப்பொருள் வைத்திருந்த பிரதாப், ஜனார்த்தனன், பூர்ணசந்திரன், அப்துல் வாசிம் ஆகிய 4 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 260 கிராம் ஓஜி கஞ்சா, 10 மில்லி கஞ்சா ஆயில், 1.5 கிலோ கஞ்சா, 8 எம்டிஎம்ஏ மாத்திரைகள், பணம் ரூ.2.65 லட்சம், 6 செல்போன்கள், 5 எடை மெஷின்கள் மற்றும் 1 இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட 4 பேரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

### சைதாப்பேட்டையில் வீட்டின் பூட்டை உடைத்து 32 பவுன் நகை திருட்டு: 2 பேர் கைது

**சென்னை, அக். 7:**

சைதாப்பேட்டை பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் வீட்டின் பூட்டை உடைத்து தங்க நகைகள் திருடிய வழக்கில் 2 வடமாநில ஆசாமிகள் கைது செய்யப்பட்டனர்.

சென்னை சைதாப்பேட்டை, புஜங்காரா வீதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் 2 வது தளத்தில் ஓய்வு பெற்ற ரயில்வே ஊழியர் தியாகராஜன் என்பவர் வசித்து வருகிறார். இவர் வீட்டை பூட்டிவிட்டு ஆந்திர மாநிலம் புத்தூரில் உள்ள கோயிலுக்கு சென்று விட்டு மாலை வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் முன்பக்க கதவின் பூட்டு உடைக்கப்பட்டு, வீட்டு பீரோவில் வைத்திருந்த 32 சவரன் தங்க நகைகள் மற்றும் வெள்ளிப்பொருட்கள் திருடு போயிருந்தது தெரியவந்தது.

இது குறித்து தியாகராஜன் சைதாப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் கிடைத்த கண்காணிப்பு கேமரா கட்சியை வைத்து தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய உத்திரப்பிரதேச மாநிலத்தை சேர்ந்த ஷாம்முகமது, நூர் இஸ்லாம் ஆகிய 2 நபர்களை கைது செய்தனர்.

இந்த வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளையும், திருடிய தங்க நகைகளை மீட்க தனிப்படை போலீசார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

### தொண்டர்களின் இரு சக்கர வாகனம் மீது மோதல்: விஜய் பிரச்சார வாகன ஓட்டுநர் மீது வழக்கு

**நாமக்கல், அக். 7:**



தொண்டர்களின் இருசக்கர வாகனம் மீது மோதியது தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய்யின் பிரச்சார வாகன ஓட்டுநர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கரூரில் தவெக தலைவர் விஜய் தலைமையிலான பிரசாரக் கூட்டத்தில் சிக்கி 41 பேர் பலியான நிலையில், அரசியல் கட்சிகளின் கூட்ட நிகழ்ச்சிகளுக்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது..இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், தவெக மீது கடும் அதிருப்தியும் கண்டனமும் தெரிவித்தது.

மேலும், நாமக்கல்லில் இருந்து கரூர் சென்ற விஜய்யின் பிரசார வாகனம், கரூர் தவிட்டுப்பாளையம் சோதனைச் சாவடி அருகே தொண்டர்களின் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது குறித்தும் நீதிபதி கேள்வி எழுப்பினார். தொடர்ந்து, விபத்தை ஏற்படுத்திய விஜய்யின் பிரசார வாகனத்தின் மீது வழக்குப்பதிவு செய்து, அதனைப் பறிமுதல் செய்ய வேண்டாமா? என்று நீதிபதி கேள்வி எழுப்பினார். நீதிமன்ற அறிவுறுத்தலையடுத்து, விஜய்யின் பிரசார வாகனம் மற்றும் அதன் ஓட்டுநர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது .பிஎன்எஸ்281 பிரிவில், மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் அல்லது மற்றவர்களுக்கு காயம் ஏற்படுத்தும் வகையில் அவசரமாக வாகனம் ஓட்டுவது என விஜய்யின் வாகன ஓட்டுநர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் அந்த வாகனம் பறிமுதல் செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

# வங்கிகள், முதலீட்டு நிறுவனங்களில் ரூ.1.84 லட்சம் கோடி உள்ளது உரிமை கோரப்படாத நிதி சொத்துகளை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை: நிர்மலா சீதாராமன் தகவல்

புதுடெல்லி, அக்.7:

வங்கிகள் மற்றும் முதலீட்டு நிறுவனங்களில் ரூ.1.84 லட்சம் கோடி நிதி சொத்துகள் உரிமை கோரப்படாமல் உள்ளதாக மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நிதி சேவைத்துறை ஒருங்கிணைப்பில், ரிசர்வ் வங்கி, செபி, காப்பீடு கண்காணிப்பு அமைப்பான ஐ.ஆர்.டி.ஏ., முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் ஆகியவை இணைந்து புதியதொரு விழிப்புணர்வு பிரசாரத்தை முன்னெடுத்துள்ளன.




'உங்கள் பணம், உங்கள் உரிமை' என்ற பெயரில் இந்த பிரச்சாரத்தை, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் குஜராத் மாநிலம் காந்திநகரில் தொடங்கி வைத்தார்.

காப்பீடு முதலீடுகள், வங்கி டெபாசிட்டுகள், ஈவுத்தொகைகள், பங்குகள், பரஸ்பர (மியூச்சுவல் பண்டு) முதிர்ச்சி நிதி உள்ளிட்ட பல நிதி சொத்து கணக்குகளில் உரிமை கோரப்படாதவை எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. முதலீட்டாளர்களின் மறைவு, குடும்பத்தினர் மற்றும் வாரிசுதாரருக்கு தகவல் தெரியாமல் இருப்பது, முதலீட்டாளர்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாமை உள்ளிட்ட காரணங்களால் இதுபோன்ற நிலை உள்ளது. இந்தநிலையில் இந்த உரிமை கோரப்படாத நிதி சொத்துகளை உரியவர்களிடம் ஒப்படைக்கும் விதமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை தொடங்கி வைத்து மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பேசினார். அப்போது அவர், "வங்கிகள் மற்றும் முதலீட்டு நிறுவனங்களில் ரூ.1.84 லட்சம் கோடி நிதி சொத்துகள் உரிமை கோரப்படாமல் உள்ளன. அது பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் உள்ளதற்கு நான் உறுதியளிக்கிறேன். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உங்களுடைய பணத்தை பெற்று கொள்ளலாம்" என தெரிவித்தார். மேலும் அவர், "இந்த பிரசாரம் மூலமாக உரிமை கோரப்படாத நிதி சொத்துகள் தொடர்பாக தகவல் கேட்க வருபவர்களுக்கு வங்கி மற்றும் முதலீட்டு நிறுவனங்களில் உடனுக்குடன் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். கடந்த மாதத்தில் ரூ.450 கோடி நிதி சொத்துகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆகஸ்டு 31-ந் தேதி வரையிலான தகவலின்படி வங்கி நிலுவையாக இருந்த உரிமை கோரப்படாத ரூ.17 ஆயிரம் கோடி ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது" என தெரிவித்தார்.

---

## விளையாட்டு செய்திகள்

### ஆஸ்திரேலிய தொடருக்கான இந்திய ஒருநாள் போட்டி அணியின் கேப்டனாக சுப்மன் கில் நியமனம்

ஆமதாபாத், அக்.7:

ஆஸ்திரேலிய தொடருக்கான இந்திய ஒருநாள் போட்டி அணியின் கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளார். கேப்டன் பதவியை இழந்த ரோகித் சர்மா ஒரு வீரராக அணியில் நீடிக்கிறார்.

இந்திய கிரிக்கெட் அணி, ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள், 5 இருபது ஓவர் போட்டிகளில் விளையாடுகிறது. இந்தியா- ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி பெர்த்தில் வருகிற 19-ந் தேதியும், 2-வது ஒருநாள் போட்டி அடிலெய்டில் 23-ந் தேதியும், 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி சிட்னியில் 25-ந் தேதியும் நடக்கிறது. இதைத்தொடர்ந்து இவ்விரு அணிகள் இடையிலான 20 ஓவர் போட்டி தொடர் வருகிற 29-ந் தேதி முதல் நவம்பர் 8-ந் தேதி வரை நடைபெறுகிறது.

ஆஸ்திரேலிய தொடருக்கான இந்திய அணியை தேர்வு குழு தலைவர் அஜித் அகர்கர் நேற்று அறிவித்தார். 20 ஓவர் மற்றும் டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட 38 வயது ரோகித் சர்மாவிடம் இருந்து ஒருநாள் போட்டி கேப்டன் பதவி பறிக்கப்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக புதிய கேப்டனாக 26 வயது சுப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் ரோகித் சர்மா டெஸ்ட்டில் இருந்து விடைபெற்ற பிறகு டெஸ்ட் அணியின் புதிய கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட்டார். தற்போது அவரிடம் ஒருநாள் போட்டி அணியின் கேப்டன் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது. 2027-ம் ஆண்டு ஒருநாள் உலகக் கோப்பை போட்டியை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

20 ஓவர் போட்டி அணியின் கேப்டனாக சூர்யகுமார் யாதவும், துணை கேப்டனாக சுப்மன் கில்லும் தொடர்கின்றனர். சமீபத்தில் நடந்த ஆசிய கோப்பை தொடரில் அங்கம் வகித்த பெரும்பாலான வீரர்கள் தங்களது இடத்தை தக்கவைத்துள்ளனர். நிதிஷ்குமார் ரெட்டி, வாஷிங்டன் சுந்தர் அணிக்குதிரும்பி இருக்கின்றனர்.

### மதுரையில் கர்னல் பென்னிகுயிக் நினைவாக இளையர் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் 2025 போட்டி



மேலூர், அக்.7

மதுரை மாவட்ட இளையர் சைக்கிளிங் அசோசியேசன் சார்பில் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கர்னல் பென்னிகுயிக் நினைவாக நடத்திய மதுரை மாவட்ட சைக்கிளிங் சாம்பியன்ஷிப் 2025 போட்டி வெள்ளலூர் விலக்கு சிவகங்கை ரோட்டில் நடைபெற்றது.

இதில் 11வயது, 14வயது, 16வயது, 18 வயது, 23 வயது உட்பட்டோருக்கான சைக்கிளிங் பந்தயம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகையும், வெற்றிச் சான்றிதழும் விழா குழுவினரால் வழங்கப்பட்டது. தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் தலைவர் எம்.சுதாகர், பொதுச்செயலாளர் எம்.விக்னேஷ் குமார், பொருளாளர் டி.பழனி, தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் லைன் ஜி.கண்ணன், மதுரை மாவட்ட இளைஞர் சைக்கிளிங் அசோசியேசன் தலைவர் பா.தெய்வேந்திரன், மதுரை மாவட்ட இளைஞர் சைக்கிளிங் அசோசியேசன் செயலாளர் ஆர். கெங்காதரன், மதுரை மாவட்ட இளைஞர் சைக்கிளிங் அசோசியேசன் பொருளாளர் எஸ்.செல்வம், மதுரை மாவட்ட இளைஞர் சைக்கிளிங் அசோசியேசன் துணைச் செயலாளர் ஜி.பிரபாகரன் ஆகியோர் சைக்கிளிங் பந்தயத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

---

**இருமல் மருந்தால் குழந்தைகள் பலியான விவகாரம்:**

## அனைத்து மாநில அதிகாரிகளுடன் மத்திய அரசு ஆலோசனை

புதுடெல்லி, அக்.7:

மத்தியபிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் இருமல் மற்றும் சளி மருந்துகளால் குழந்தைகள் பலியான சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதற்கிடையே குழந்தைகள் இறப்பு தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இருமல் மருந்துகளை பரிந்துரைக்கக்கூடாது என்றும் மத்திய அரசு அறிவுறுத்தியது. இந்த நிலையில், நாடு முழுவதும் சுகாதாரத்துறையில் இருமல் மருந்துகளின் தரம் மற்றும் பகுத்தறிவு பயன்பாட்டை உறுதி செய்வதற்காக, மத்திய அரசு நேற்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் உயர் அதிகாரிகளுடன் உயர்மட்ட கூட்டத்தை நடத்தி ஆலோசனை மேற்கொண்டது.

மத்திய சுகாதாரத்துறை செயலாளர் புண்யா சலிலா ஸ்ரீ வஸ்தவா தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில், அனைத்து மாநில சுகாதாரச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள் (சுகாதாரம்), மருந்துக்கட்டுப் பாட்டாளர்கள் மற்றும் மத்திய மருந்துகள் தரக்கட்டுப்பாட்டு அமைப்பின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், இருமல் மருந்து குடித்ததால் குழந்தைகள் சமீபத்தில் உயிரிழந்தது குறித்து கடுமையான கவலை தெரிவிக்கப்பட்டது. அனைத்து மருந்து நிறுவனங்களும் திருத்தப்பட்ட அட்டவணை எம்-ன் விதிகளை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், இல்லையெனில் விதிகளை மீறும் மருந்து உற்பத்தி நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படும் என்றும் மத்திய சுகாதார செயலாளர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

அதைப்போல மருந்து நிறுவனங்களை மத்திய, மாநில அரசுகள் கூட்டாக ஆய்வு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மருந்து பாதுகாப்பு, தரக்கட்டுப்பாடு மற்றும் பொது சுகாதார பாதுகாப்பு ஆகியவை முதன்மையான முன்னுரிமைகள் என்று மத்திய அரசு மீண்டும் வலியுறுத்தியது. எதிர்காலத்தில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து மருந்து உற்பத்தி வசதிகளை முழுமையாக ஆய்வு செய்து, இணங்கத் தவறும் நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யவும் முடிவு செய்யப்பட்டது. முன்னதாக, மருந்துகளின் பயன்பாடு தொடர்பான வழிமுறைகளை சுகாதார செயலாளர் வெளியிட்டார்.

## ஜெய்ப்பூர் மருத்துவமனையில் தீ விபத்து: 7 நோயாளிகள் பலி

ஜெய்ப்பூர், அக். 7:

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் தீவிர சிகிச்சைப் பிரிவு (ஐசியு) வார்டில் 11 பேர் சிகிச்சை பெற்று வந்தனர். இந்த மருத்துவமனையில் இன்று அதிகாலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு தீயணைப்பு படையினர் விரைந்தனர். இந்த தீ விபத்தில் நோயாளிகள் 7 பேர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு உள்ளனர். இவர்களது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இது குறித்து மருத்துவமனை நிர்வாகம் கூறியதாவது: ஐசியுவில் ஒரு ஷார்ட் சர்க்யூட் ஏற்பட்டதால் தீ விபத்து ஏற்பட்டது. பின்னர் தீ மளமளவென பல்வேறு இடங்களுக்கு பரவியது. தீ விபத்து ஏற்பட்ட போது ஐசியுவில் 11 நோயாளிகள் இருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் கோமா நிலையில் இருந்தனர். தீ விபத்துக்கு பிறகு உடனடியாக அவர்களை டிராலிகளில் மீட்டு வெளியே கொண்டு வந்தோம்.

பின்னர் நீண்ட நேரம் போராடி சிகிச்சை அளித்தோம். விபிஆர் மூலம் அவர்களை உயிர்ப்பிக்க நாங்கள் மிகவும் கடினமாக முயற்சித்தோம், ஆனால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. நோயாளிகள் 7 பேர் உயிரிழந்தனர். இறந்த நோயாளிகளில் 2 பேர் பெண்கள், 4 பேர் ஆண்கள் ஆவர். ஐந்து நோயாளிகள் இன்னும் கவலைக்கிடமாக உள்ளனர் என தெரிவித்துள்ளது.

---

## நவம்பர் 15ந்தேதி முதல் புதிய மாற்றம்: சுங்கச்சாவடி கட்டணம் யு.பி.ஐ. மூலம் செலுத்தினால் கால் பங்கு கூடுதல் கட்டணம்




புதுடெல்லி, அக்.7:

பாஸ்டேக் இல்லாமல் சுங்கச்சாவடிக்குள் நுழையும் வாகனங்கள் யு.பி.ஐ. மூலம் செலுத்தினால் கூடுதலாக கால் பங்கு கட்டணத்தை சேர்த்து செலுத்த வேண்டும் என்ற நடைமுறை நவம்பர் 15ந்தேதி முதல் அமலுக்கு வருகிறது.

தேசிய நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்களுக்கு ஆங்காங்கே சுங்கக்கட்டணம் வசூலிக்கப்படுகிறது. முன்பு, இந்த சுங்கச்சாவடிகளில் ரொக்கமாக பணம் செலுத்தும் முறை இருந்தது. இந்த ரொக்க நடைமுறையால் சுங்கச்சாவடிகளை கடந்து செல்வதில் வாகனங்கள் கால தாமதத்தை சந்தித்து வந்தன. இதனைத் தவிர்க்க 'பாஸ்டேக்' கட்டண முறை கொண்டு வரப்பட்டது. இதனால் வாகனங்கள் வெகுநேரம் காத்து நிற்காமல் வேகமாக சென்று வருகின்றன. 'பாஸ்டேக்' நடைமுறைப்படுத்தப்பட்டு சில ஆண்டுகள் ஆகிவிட்டாலும் இன்னும் அது முழுமையாக வில்லை. பல வாகனங்கள் இன்னும் ரொக்கமாகவே பணத்தை செலுத்துகின்றன. எனவே பாஸ்டேக் நடைமுறையை முழுமையாக்கவும், ரொக்க நடைமுறையை தவிர்த்து, டிஜிட்டல் பரிமாற்றத்தை ஊக்குவிக்கவும் சாலை போக்குவரத்து அமைச்சகம் புதிய நடவடிக்கையை எடுத்துள்ளது. இதற்காக நெடுஞ்சாலை கட்டண விதிகளில் திருத்தம் செய்யப்பட்டு உள்ளன.

இந்த திருத்தத்தின் படி, பாஸ்டேக் இல்லாமல் சுங்கச்சாவடிக்குள் நுழையும் வாகனங்கள் ரொக்கமாக பணத்தை செலுத்தினால் இருமடங்கு கட்டணத்தை செலுத்த வேண்டும்.

அதே நேரத்தில் யு.பி.ஐ. மூலம் செலுத்தினால் கூடுதலாக கால் பங்கு கட்டணத்தை சேர்த்து செலுத்த வேண்டும்.

உதாரணமாக, 100 ரூபாய் கட்டணம் என்றால், ரொக்கமாக செலுத்துபவர்களுக்கு அது ரூ.200 ஆகும். யு.பி.ஐ.யில் செலுத்துபவர்களுக்கு ரூ.125 ஆக கட்டணம் இருக்கும். இந்த புதிய கட்டண நடைமுறை அடுத்த மாதம் (நவம்பர்) 15-ந் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

இதன்மூலம், பாஸ்டேக் வைத்திருப்பவர்களுக்கு லாபம் என்ற நிலை உருவாகி உள்ளது.

அதிலும் வருடாந்திர 'பாஸ்' வைத்திருந்தால் அதிக பணம் மிச்சமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## காதி மூலம் கிடைக்கும் லாபம் நேரடியாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கிறது: அமித்ஷா பெருமிதம்

புதுடெல்லி, அக்.7:

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) கீழ்பயனாளிகளுக்கு மார்ஜின் பண மானியங்களை வழங்கினார். புதியதொழிற்கூடங்களை டிஜிட்டல் முறையில் திறந்து வைத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். ஹரியானா முதல்வர் நயாப் சைனி, காதிமற்றும்கிராமத்தொழில்கள் ஆணையத்தின் (KVIC) தலைவர் மனோஜ் குமார் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய அமித்ஷா, சுதந்திரப் போராட்டத்தின் போது, வறுமையை ஒழிக்கவும்,




நாட்டைத் தன்னிறைவடையச் செய்யவும், சுதேசி என்ற கருத்தை ஊக்குவிக்கவும், விடுதலை அடையவும் மகாத்மா காந்தி காதியைப் பயன்படுத்தினார் என்று கூறினார். நாடுமுழுவதும் உள்ள லட்சக்கணக்கான நெசவாளர்களின் வாழ்க்கையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திய காதி என்ற தாரகமந்திரம், நமது நாட்டு மக்களுக்கும் சுதந்திர இயக்கத்திற்கும் ஒரு அடித்தளமாக மாறியது என்று அவர் தெரிவித்தார். குஜராத் முதல்வராக நரேந்திர மோடி இருந்தபோது, காதியை மீண்டும் உயிர்ப்பிக்கத் தீர்மானித்தார், என்று உள்துறை அமைச்சர் குறிப்பிட்டார். பிரதமரான பிறகு, மோடி தனது மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் காதியைப் பயன்படுத்துமாறு நாட்டு மக்களை ஊக்குவித்தார். 2014 15 ஆம் ஆண்டில், 33,000 கோடி ரூபாயாக இருந்த காதி மற்றும் கிராமத்தொழில்களின்வருவாய், இப்போது 1.70 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில்,கேவிஐசி மதுரை மண்டல அலுவலகத்தின் கீழ் தூத்துக்குடி சர்வோதய சங்கம் மற்றும் இரணியல்

சர்வோதய சங்க வளாகத்தில் புதிய காதிபவன் கட்டிடங்களை உள்துறை அமைச்சர் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில்,

கே.வி.ஐ.சி தலைவர் மனோஜ் குமார், உள்துறை அமைச்சர், மற்றும் பிற விருந்தினர்களுக்கு காதி ராட்டையினை நினைவுப்

பரிசாக வழங்கினார். ரூப் ராஷி தலைமை நிர்வாக அதிகாரி கே.வி.ஐ.சி நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சகம், கே.வி.ஐ.சி மற்றும் உள்ளூர் நிர்வாகத்தைச் சேர்ந்த ஏராளமான அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், ஏராளமான காதி கைவினைஞர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

## அமெரிக்காவில் தொடரும் அதிர்ச்சி; இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் சுட்டுக்கொலை

**வாஷிங்டன், அக்.7:**

அமெரிக்காவின் பிட்ஸ்பர்க் நகரில் உணவு விடுதி நடத்தி வந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ராகேஷ் ஏகபன் (வயது 51) சுட்டுக் கொல்லப்பட்டார். கொலையாளியை போலீசார் சுட்டுப்பிடித்துள்ளனர்.

அமெரிக்காவின் பிட்ஸ்பர்க் நகரில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ராகேஷ் ஏகபன் என்பவர் உணவு கடை நடத்தி வந்தார். இவரது உணவகத்துக்கு வெளியே திடீரென இரண்டு பேர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் அது சண்டையாக மாறியது. அப்போது சண்டையை விலக்கிவிட முயற்சித்த போது ராகேஷ் ஏகபன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

விசாரணையின்போது துப்பாக்கிச் சூடு நடத்திய 37 வயதான ஸ்டான்லி யூஜின் என்பவரை போலீசார் சுட்டுப்பிடித்துள்ளனர். இந்த மோதல் உணவகத்தில் இருந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகி இருந்தது. இந்த மோதலுக்கான காரணம் குறித்து விசாரணை நடக்கிறது என போலீசார் தெரிவித்தனர். சமீபத்தில் அமெரிக்காவின் டல்லாசில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 50 வயதான சந்திரமவுலி நாகமல்லையா அவரது மனைவி மற்றும் மகன் முன்னிலையில் கோடரியால் கழுத்தை அறுத்து கொல்லப்பட்டார். சில நாட்களுக்கு முன் டல்லாஸ் நகரில் மர்ம நபரால் ஐதராபாத்தைச் சேர்ந்த பல் டாக்டர் சந்திரசேகர் போலே (வயது 27) சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அமெரிக்காவில் தொடர்ந்து இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டு வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## இத்தாலியில் கார் விபத்து ; 4 இந்தியர்கள் பலி

**ரோம், அக்.7:**

ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடு இத்தாலி. இந்நாட்டின் பசிலிக்காடா மாகாணம் மடிரா நகரில் உள்ள சாலையில் நேற்று கார் சென்றுகொண்டிருந்தது. அந்த காரில் இந்தியர்கள் உள்பட 10 பேர் பயணித்தனர். இந்நிலையில், ஸ்கென்செனோ ஜோனிகா என்ற பகுதியில் சென்றபோது சாலையில் வேகமாக வந்த லாரி, கார் மீது மோதியது. இந்த கோர விபத்தில் காரில் பயணித்த 4 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும், 6 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேவேளை, விபத்தில் உயிரிழந்த மனோஜ் குமார் (வயது 34), சுரஜ் சிங் (வயது 33), ஹர்வீந்தர் சிங் (வயது 31), ஜஸ்கரன் சிங் (வயது 20) ஆகிய 4 பேரின் உடல்களையும் இந்தியாவுக்கு கொண்டுவர வெளியுறவுத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## வெனிசுலா படகு மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதல்

**வாஷிங்டன், அக்.7:**

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு வெனிசுலா. இந்நாட்டில் பல்வேறு போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் செயல்படுவதாகவும், அந்த கடத்தல் கும்பல்கள் அமெரிக்காவுக்கு போதைப்பொருள் கடத்தி வந்து விற்பனை செய்வதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும், இந்த கும்பல்களின் செயல்பாடுகளுக்கு வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ ஆதரவு அளிப்பதாகவும் டிரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதேபோல், கரீபியன் கடல் வழியாக போதைப்பொருள் அமெரிக்காவுக்கு கடத்தப்படுவதாகவும் கூறி வருகிறார். இதை தடுக்க கரீபியன் கடல் பகுதியில் போர் கப்பல்களை நிறுத்த டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். மேலும், வெனிசுலாவில் இருந்து போதைப்பொருள் கடத்தி வரும் படகுகள் மீது தாக்குதல் நடத்தி அழிக்கவும் கடற்படைக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, கடந்த சில வாரங்களாக போதைப்பொருள் கடத்தி வந்ததாக வெனிசுலாவை சேர்ந்த 3 படகுகளை அமெரிக்கா அழித்துள்ளது. அதேபோல், வெனிசுலா கடற்பகுதியில் அமெரிக்க போர் கப்பல்கள் அவ்வப்போது ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றன. இது தங்கள் நாட்டின் இறையாண்மையை மீறும் செயல் என்று வெனிசுலா குற்றஞ்சாட்டி வருகிறது. இந்நிலையில், வெனிசுலாவை சேர்ந்த மேலும் ஒரு படகை அமெரிக்கா நேற்று தாக்கி அழித்தது. கரீபியியன் கடல் வழியாக வெனிசுலா கடற்பரப்பில் போதைப்பொருட்களை கடத்தி வந்த படகு மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார். இதன் மூலம் போதைப்பொருள் கடத்தி வந்ததாக அமெரிக்கா தாக்குதல் நடத்திய 4வது வெனிசுலா படகு இதுவாகும். கடல் வழியாக மட்டுமின்றி இனி நிலம் வழியாகவும் கடத்தி வரப்படும் போதைப்பொருட்களை தடுக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று டிரம்ப் தெரிவித்துள்ளார்.

## உக்ரைனில் தொடரும் தாக்குதல்; மேற்கத்திய நாடுகளுக்கு கடும் கண்டனம் தெரிவித்த ஜெலன்ஸ்கி



**கீவ், அக்.7:**

உக்ரைன் மீது 2022-ம் ஆண்டு பிப்ரவரி 24-ந்தேதி ரஷியா போர் தொடுத்தது. தொடக்கத்தில் உக்ரைனின் கீவ், கார்கிவ், டொனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை ரஷியா கைப்பற்றியது. எனினும், அவற்றை உக்ரைன் பதிலடி கொடுத்து பின்னர் மீட்டது. போரானது 3 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நீடித்து வருகிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன.

ரஷியாவுக்கு, நட்பு நாடான வடகொரியா, ராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது என கூறப்படுகிறது. போரால் பெண்கள், குழந்தைகள் மற்றும் வீரர்கள் என இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கில் பலியாகி உள்ளனர். லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். லட்சக்கணக்கானோர் வீடுகளை விட்டு அடைக்கலம் தேடி வேறு இடங்களுக்கு தப்பியோடி விட்டனர்.

எனினும், போரை முடிவுக்கு கொண்டு வரும் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாமல் உள்ளது. இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி செய்தியாளர்களிடம் நேற்று பேசும்போது உக்ரைன் மீது ரஷியா தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதல்களுக்கு சரியான பதிலடி கொடுக்காமல் இருந்து வரும் சர்வதேச சமூகத்திற்கு எதிராக கடுமையான விமர்சனங்களை வெளியிட்டார்.

இதனாலேயே புதின் அவருடைய தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறார். பொதுமக்களின் வீடு, குடியிருப்பு உள்ளிட்ட உட்கட்டமைப்புகள் மற்றும் எரிசக்தி மையங்களின் மீது ரஷியா பெரிய அளவில் தாக்குதல் நடத்தி வருவதற்கு மேற்கத்திய நாடுகளே காரணம் என குற்றச்சாட்டாக கூறினார்.

தொடர்ந்து அவர், ரஷிய ஆயுதங்களில் மேற்கத்திய நாடுகள் விநியோகித்த பொருட்களின் பயன்பாடு உள்ளன என்றும் அவர் கூறினார். இதுபற்றி அவர் கூறும்போது, ரஷியாவின் ஒரு கின்ஜால் ஏவுகணையில் 96 வெளிநாட்டு தயாரிப்பு பொருட்கள் உள்ளன என கூறினார்.

ஏறக்குறைய 500 டிரோன்களில் 1 லட்சம் வெளிநாட்டு தயாரிப்பு பாகங்கள் உள்ளன. அமெரிக்கா, சீனா, தைவான், இங்கிலாந்து, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஜப்பான், கொரியா மற்றும் நெதர்லாந்து நாடுகளை சேர்ந்த நிறுவனங்கள் இவற்றை உற்பத்தி செய்துள்ளன. இவை அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

சமீபத்தில் 53 ஏவுகணைகள் மற்றும் 500 டிரோன்களை கொண்டு ரஷியா தாக்குதல் நடத்தியது. அவற்றில் 250 டிரோன்கள் ஷாகித் வகை டிரோன்கள் ஆகும். இதனால், லிவிவ் நகரில் ஒரு குழந்தை உள்பட 4 பேரும், ஜபோரிஜ்ஜியா நகரில் ஒருவரும் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர். அவர்களுக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது.

## 'எங்களுக்கு எதிராக மீண்டும் போரிட வாருங்கள்' பாகிஸ்தான் ராணுவ மந்திரி அடாவடி

**இஸ்லாமாபாத், அக்.7:**



காஷ்மீரின் பஹல்காமை குறிவைத்து பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 26 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு எதிராக மே 7-ந் தேதி இந்தியாவின் முப்படைகள் இணைந்து ஆபரேஷன் சிந்தூரை நடத்தின. பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகள் முகாம்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 100-க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதனை தொடர்ந்து இந்திய-பாகிஸ்தான் ராணுவத்தினர் பரஸ்பரம் தீவிர தாக்குதலில் ஈடுபட்டனர். 4 நாட்களுக்கு பிறகு இருநாட்டு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி தாக்குதல் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வந்தனர். பாகிஸ்தான் ராணுவ மந்திரி கவாஜா ஆசிப் நேற்று இந்தியாவுக்கு பதிலளிக்கும் விதமாக தனது வலைத்தள பதிவில் கூறி இருப்பதாவது:-

"இந்திய ராணுவம் மற்றும் அரசியல் தலைவர்களின் சமீபத்திய பேச்சுகள், மே மாத (சிந்தூர் தாக்குதல்) தோல்வியில் இழந்த அவர்களின் கறைபடிந்த நம்பகத்தன்மையை மீட்டெடுக்கும் தோல்வியுற்ற முயற்சியாகும். 0 - 6 மதிப்பெண்ணுக்கு கீழ் பெற்ற இத்தகைய மோசமான தோல்விக்கு பிறகும், ஒருவேளை மீண்டும் முயற்சித்தால் கடவுள் விரும்பினால் முந்தைய மதிப்பெண்ணைவிட கூடுதல் மதிப்பெண் பெறலாம். எங்களுடன் மீண்டும் போரிட வாருங்கள். அப்போது இந்தியா அதன் போர் விமான இடிபாடுகளின் கீழ் புதைக்கப்படும்" என்று அடாவடியாக பேசியுள்ளார்.

## காசா போர் நிறுத்த முன்மொழிவு நிபந்தனைகள்: சில அம்சங்களை ஏற்பதாக ஹமாஸ் அறிவிப்பு

**காசா, அக்.7:**

இஸ்ரேல் - காசா போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக டிரம்ப் முன்வைத்த முன்மொழிவுகளில் சில பகுதிகளை ஹமாஸ் அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

மேலும் முன்மொழிவில் உள்ள சில அம்சங்களுக்கு பேச்சுவார்த்தைகள் தேவை எனவும் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து காசா மீதான தாக்கு தலை நிறுத்த இஸ்ரேலுக்கு டிரம்ப் 'உத்தர விட்டுள்ளார்'.



எனினும் இஸ்ரேல் தனது தாக்கு தலை மேலும் மூர்க்கத்தனமாக மாற்றியுள்ளது. செப்டம்பர் மாத இறுதியில் டிரம்ப் இஸ்ரேல் காசா போரை நிறுத்த 20 அம்ச முன்மொழிவுகளை வெளியிட்டார். இதில் பெரும் குழப்பமும், உறுதியற்றதாகவும் இருந்தது. பாலஸ்தீனர்களின் மறுவாழ்வு திட்டம், காசாவை மறு கட்டமைப்பு செய்வது, மருத்துவம் உள்ளிட்ட மனிதாபிமான அடிப்படையிலான நிவாரண உதவிகள் பற்றி உறுதியான தெளிவான திட்டங்கள் அதில் இல்லை.

குறிப்பாக பாலஸ்தீனர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அந்த முன்மொழிவு இல்லை. அதேபோல பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்காமல் ஒரு நிர்வாகக் குழுவை அமைத்து சர்வதேச கட்டுப்பாட்டில் நிர்வகிப்பது என கூறப்பட்டது. சர்வதேச படை அங்கு நிறுத்தப்படும் வரை இஸ்ரேல் ராணுவம் இருக்கும் எனவும்.

சர்வதேச படை நிலை நிறுத்தப்பட்ட பிறகு காசாவிற்குள் ஒரு எல்லையோரப் பாதுகாப்புப் பகுதியை இஸ்ரேல் வைத்துக் கொள்ளக்கூடும்.


அதாவது காசாவை சுற்றி இஸ்ரேல் ராணுவம் நிலை நிறுத்தப்பட்டு இருக்கும் என மறைமுகமாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் ஹமாஸ் அமைப்பு இந்த முன்மொழிவு மீது உடனடியாக கருத்து தெரி விக்காமல் நேரம் எடுத்துகொண்டு தற்போது அதன் மீதான தனது நிலைபாட்டை தெரிவித்துள்ளது.

குறிப்பாக உயிருடன் மற்றும் சடலமாக உள்ள அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்கத் தயார். மத்தியஸ்தர்கள் மூலம் உடனடியாகப் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்குத் தயார். சர்வதேச அமைப்பின் தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

அதே நேரத்தில் 'போர்டு ஆஃப் பீஸ்' என்ற சர்வதேச இடைக்கால நிர்வாக அமைப்பானது,

காசாவை ஒட்டுமொத்த பாலஸ்தீனத்தில் இருந்தும் தனிமைப்படுத்தும்; எனவே, அம் முன்மொழிவை ஹமாஸ் அமைப்பு ஏற்க வில்லை.

## 3 பேருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிப்பு!




மேரி இ. பிரன்கோவ், பிரெட் ராம்ஸ்டெல் மற்றும் ஷிமோன் சகாகுச்சி ஆகிய 3 பேருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் முக்கிய பங்களிப்பை ஆற்றியவர்களுக்கும், அமைதிக்காக பாடுபட்டவர்களுக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், அமெரிக்காவை சேர்ந்த மேரி இ. பிரன்கோவ் மற்றும் பிரெட் ராம்ஸ்டெல், ஜப்பானை சேர்ந்த ஷிமோன் சகாகுச்சி ஆகிய 3 பேருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

நோய் எதிர்ப்புச் சக்தியின் புறத் தாங்குதிறன் (PERIPHERAL IMMUNE TOLERANCE) தொடர்பான கண்டுபிடிப்புகளுக்காக இந்த நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. புற்றுநோய் மற்றும் தாங்குதிறன் நோய்கள் (AUTOIMMUNE DISEASES) போன்றவற்றுக்குச் சிகிச்சை அளிக்கும் புதிய வழிமுறைகளின் வளர்ச்சிக்கு இந்த கண்டுபிடிப்புகள் தூண்டுகோலாக அமைந்துள்ளதாக நோபல் பரிசுக் குழு தெரிவித்துள்ளது.

## இந்தோனேசியா பள்ளி கட்டிட விபத்து: உயிரிழந்தோர் எண்ணிக்கை 50-ஐ கடந்துள்ளது



இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் பள்ளி கட்டிடம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50-ஐ கடந்துள்ளது.

இந்தோனேசியா நாட்டின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் இஸ்லாமியர் உறைவிடப் பள்ளிக் கட்டிடம் கடந்த செப். 29 அன்று இடிந்து விழுந்தது. இந்த கட்டிட இடிபாடுகளில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் சிக்கினர்.

இதனைத் தொடர்ந்து ஒரு வார காலமாக மீட்புப் படையினர் தொடர்ந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 50 பேரின் உடல்களை மீட்கப்பட்டுள்ளது. இடிபாடுகளில் சிக்கிய 13 பேரைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. உயிரிழப்பு மேலும் அதிகரிக்ககூடும் என அஞ்சப்படுகிறது.

அல் கோசினி பள்ளியின் அடித்தளத்தால் தாங்க முடியாத அளவுக்கு, மேல் தங்களில் கட்டுமானப் பணிகள் நடந்ததே இடிந்து விழுந்ததற்கான காரணம் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பிரான்ஸ் பிரதமர் திடீர் ராஜினாமா!



பிரான்ஸ் பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு, பதவியேற்று சில வாரங்களிலேயே ராஜினாமா செய்ததால், அந்த நாட்டின் அரசியல் நெருக்கடி மேலும் தீவிரமடைந்துள்ளது.

இன்று வெளியிட்ட அறிக்கையில் பிரான்ஸ் அதிபர் எம்மானுவல் மக்ரோன், தன்னுடைய நெருங்கிய நம்பிக்கையாளர் லெகோர்னுவின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

பதவியேற்று கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆன நிலையில், லெகோர்னு ஞாயிற்றுக்கிழமை மாலை தனது அமைச்சரவை உறுப்பினர்களை அறிவித்திருந்தார். அந்த அமைச்சரவை தனது முதல் கூட்டத்தை திங்கட்கிழமை மதியம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அதன் அமைப்பு எதிர்க்கட்சியினரையும், ஆளும் தரப்பினரையும் அதிருப்தியடைய வைத்தது. முன்னாள் பாதுகாப்பு அமைச்சராக இருந்த லெகோர்னு, கடந்த இரண்டு ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட ஐந்தாவது பிரதமராகும்.

ராஜினாமா குறித்த தெளிவான விளக்கத்தை லெகோர்னு இதுவரை அளிக்காவிட்டாலும், இடதுசாரி மற்றும் வலதுசாரி சட்டமன்ற உறுப்பினர்களுடன் சமரசம் காணமுடியாமல் போனதும், நாடாளுமன்றத்தில் போதுமான ஆதரவு இல்லாததுமே காரணம் என செய்திகள் வெளியாகியுள்ளன.